Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY දිනක්කතිර්

ஒளி - 01 - கதிர் - 326 18-03-2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

நகையா!
22 கரட்டில் தெரிவு செய்ய
இன்றே நாடுங்கள்
சரண்யா ஜுவலர்ஸ்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி
தொ. பேசி 065 . 50071




# தடுப்புக் காவலில் இருந்த இருவரை மேல் நீதிமன்றம் விடுவித்தது

## மற்றும்ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

(எஸ்.கமலதாஸன்)

**பயங்கரவாதத் தடைச்சட்டம், மற்றும் அவசரகாலத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் நேற்றும், நேற்று முன்தினமும் மேல் நீதிமன்றில் வைத்து நீதிபதி ஏ.என்.இராமச்சந்திரனால் விடுவிக்கப்பட்டனர்.**

மட்டக்களப்பு தொண்டர் படையில் கடமையாற்றிய இரத்தின சிங்கம் சிவசுப்பிரமணியம் (44), ஏறாவூர் புன்னைக்குடாவைச் சேர்ந்த காளிதாஸ் செல்வம்,வாழைச் சேனையைச் சேர்ந்த சந்திரன் தேவராசா ஆகியோரே இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களாவார்கள்.

**விஜிதா பற்றிக் கூறவில்லை**

விடுதலைப் புலி உறுப்பினரான விஜிதா என்பவரின் போக்குவரத்து நடமாட்டம் என்பவை பற்றித் தெரிந்திருந்தும் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பெயரிலே 17.09.98 அன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த தொண்டர் படையைச் சேர்ந்த இ.சிவசுப்பிரமணியம் கடந்த 15.03.2001 அன்று நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2 1/2 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர் மீதான விசாரணை 5 தவணைகளாக நடத்தப்பட்ட நிலையிலும் இவரைக் கைது செய்த பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஏ.ஜயசிங்க மன்றுக்கு சமூகம் தராததாலும்

(16ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல்துறை ஆதரவாளர் வவுணதீவில் படையினரிடம் சரண்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை ஆதரவாளர் எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் இளைஞரொருவர் 15.03.2001 அன்று வவுணதீவில் படையினரிடம் சரணடைந்துள்ளார்.

இவர் தொடர்பான தகவல்களைப் பெறவருமாறு நேற்று மட்டக்களப்பு பிரிகேட் காரியாலயத்திலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பையடுத்து எமது செய்தியாளர் நேரில் சென்று இளைஞரைப் பார்வையிட்டார்.



கொக்கட்டிச்சோலை முதலைக்குடாவைச் சேர்ந்த தில்லைநாயகம் நற்குணம்(24)என்ற இந்த இளைஞர் தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையில் ஆதரவாளராக கடந்த ஒரு வருடமாக கடமை புரிந்ததாகவும் தன்னைப் புலிகள் பயிற்சிக்கு அனுப்பத் திட்டமிட்டதாக அறிந்ததும் தான் படையினரிடம் சரணடைந்ததாகவும் தெரிவித்தார்.

தான் இதுவரையில் பயிற்சி பெறவில்லை எனவும் ஆனால் தனக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்த அந்த இளைஞன் அந்தத் துப்பாக்கியுடனேயே தான் சரணடைந்ததாகவும்

(16ம் பக்கம் பார்க்க)

## தனிச் சிங்களக் கடிதத்தை வை. எம். சி .ஏ திருப்பி அனுப்பியது

(நமது நிருபர்)

வாலிபர் கிறிஸ்தவ சங்கம் (வை.எம்.சி.ஏ)மட்டக்களப்பு கிளைக்கு தேசிய இடர் முகாமை நிலையம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்று தனிச் சிங்கள மொழியில் அனுப்பப்பட்டுள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

## யாழ் பல்கலைக்கழகத்தில் மீண்டும் பொங்கு தமிழ்

(நமது நிருபர்)

யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் நடாத்தப்பட்டு வரும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளின் மற்றுமொரு நிகழ்வு எதிர் வரும் புதன்கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நடைபெறப் போகும் பொங்கு தமிழ் நிகழ்வை முன்னெடுப்பது சம்பந்தமாக பல்கலைக்கழக சமூகத்தை சேர்ந்தவர்களின் கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இக் கூட்டத்தின் போது பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் கல்விசார் கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொண்டு பொங்கு தமிழ் நடத்துவது பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

## அதிரடிப்படையின் சூட்டுக்கு மண்டூரில் ஒருவர் பலி

**பொன் செல்வராசா முறைப்பாடு**

(நமது நிருபர்)

மண்டூர் 13ம் கொலனியைச் சேர்ந்த சாமித்தம்பி மதிகுமார் (23)என்ற இரு பிள்ளைகளின் தந்தை கடந்த 15.03.2001 அன்று அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 15.03.2001 அன்று பிற்பகல் 2 மணியளவில் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த போது வீதியில் நின்ற அதிரடிப்படையினர் இவரை மறித்து தேங்காய் பறித்துத் தரும்படி கோரியதாகவும்,

இவர் மறுத்து விட்டு தொடர்ந்து சென்ற சமயம் அதிரடிப்படையினரால் சுடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மரணமடைந்த நபரின் சடலத்தை விஷேடஅதிரடிப்படையின் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற பின் நேற்று முன் தினம் மாலை 6.30 மணியளவில் அவரது வீட்டில் கொண்டு வந்து ஒப்படைத்துள்ளனர்.

(16ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

சவூதி அரேபியாவில்

| ஆண்களுக்கு:- | SR |
|---|---|
| ஓட்டோ மெக்கானிக் | 800 |
| ஓட்டோ எலக்ரீஷியன் | 800 |
| ஓட்டோ பெயின்ரர் | 800 |
| ஓட்டோ ரிங்கர் | 800 |
| பாமர் , | 600 |
| பிளம்பர் | 800 |

தங்குமிடம், மருத்துவம் இலவசம்
உடனடிப் பயணம்
நியூபாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
283/1, மெயின் வீதி, புறக்கோட்டை
காத்தான்குடியில் டிக்கட்டுக்களுக்கு
151/1, 151/2 பிரதானவீதி காத்தான்குடி-02
தொ.பே:065-47090, ADVT.

**எதுகை மோனை**

**வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் நியாப் திட்டம் கைவிடப்படும் அபாயம்.**

*-செய்தி*



இங்கு வாழுற மக்களுக்கும் அபாயம் தான். இங்கு வாற திட்டங்களுக்கு அபாயம் தான். மொத்தத்தில் நாட்டுக்கே அபாயம் தான்

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## ஐயோ தமிழினமே!

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் சமாதானத் தூதுவர் நோர்வே எரிக் சொல் ஹெய்ம் புதுடில்லிக்குச் சென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கைச் சந்தித்து தனது முயற்சிகள் பற்றி எடுத்துரைத்திருக்கின்றார்.

ஆயுதக் கொள்வனவில் சடந்த ஊழல் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி துறந்தும் திருப்தியடையாமல் எதிர்க்கட்சிகள் நெருக்கடி கொடுத்துக்கொண்டிருக்கையில் தமது பதவிக்கும் ஆபத்து விருமோவெனக் கலங்கிய நிலையிலுள்ள ஜஸ்வந்சிங் என்ன கேட்டாரோ என்ன சொன்னாரோ? பாவம்.

சமாதான முயற்சிகள் ஒருபுறம் நடக்கையில் சந்திரிகா ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து பயங் கரவாத விடுதலைப்புலிகளுக்கு அந்த நாடுகளிலிருந்து பணம் போவதைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக் கத்தைத் தடைசெய்வது பற்றி பிரசாரமும் செய்து வேண்டுகோளும் விடுத்து வருகிறார்.

இதே சமயம் பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராக இருக்கிறது, இதற்குத் திகதி குறிக்கும்படி விடுதலைப் புலிகளைக் கேட்டிருப்பதாக அமைச்சர்கள் கூறிவருகின்றனர்.

அமைச்சர்கள் பேச்சுக்குத் தயார் என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே தமிழ்ப் பகுதிகளில் இலங்கை அரசின் விமானப்படைகள் குண்டு வீசித்தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றன.

இதே நேரம் யாழ்குடா நாட்டில் வலிகாமம் வடக்கில் போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் சென்று குடியேறுவதற்கு இடம் கொடுக்காமல் அந்த இடங்களில் படையினரைக் குடியமர்த்துவதற்காக திட்டம் தீட்டிச் செயற்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

இதுவரை கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் நிலம் பறிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கில் மக்கள் குடியிருந்த இடங்களில் நிலம் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு சிங்களப் படையினர் குடும்பத்தை திட்டமிட்டு குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்குத் தாயக பிரதேசம் என ஒன்று இல்லை என்பதைத் திட்டமிட்டு நிரூபிக்கும் செயல் இது.

இதுவரை கிழக்கு மாகாணத்தில் தமிழர் நிலம் அபகரிக்கப்பட்டது, இனி வடக்கிலும் நிட்டமிட்டுத் தமிழர் நிலம் பறிக்கப்படும் . 1958ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டு வரை ஏற்படுத்திய இனக் கலகங்களில் உயிரையும், உடமைகளையும் இழந்தவர்கள் போக எஞ்சியவர்கள் வடக்குக் கிழக்குத் தாயகத்துக்குத் தப்பி வந்தனர்.

1977ஆம் ஆண்டில் கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றம் காரணமாகத் திருகோணமலைக்குத் தமிழர்கள் கப்பலில் போய் அங்கு இறங்கவில்லை யாழ்ப்பாணத்தில்த்தான் போய்ச்சேர்ந்தனர்.

இனி ஒரு இனக் கலகம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டால் தமிழர் தஞ்சமடைவதற்கு அவர்களுக்கென சொந்த இடமிருக்காது. அவர்கள் எல்லோருமே ''பிரிவினைவாதப் பயங்கரவாதிகள்'' என்ற சட்டரீதியான முத்திரையோடு சர்வதேச அங்கீகாரத் துடன் அழித்தொழிப்பதற்கு இப்பொ ழுது நன்றாகத் திட்டமிட்டு சந்திரிகாவும் அவரது அரசும் பேரினவாதிகளும் இணைந்து செயற்படுகின்றனர்.

இதற்காகவேதான் விடுதலைப்புலிகளை அழிக்கவேண்டுமென்று சிகலஉறுமய பத்துலட்சம் கையெழுத்துக்களைத் திரட்டுகிறது.

தமிழ் இன ஒழிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் சர்வதேச அங்கீகாரத்துடன் சட்டரீதியாக ''பயங்கரவாத ஒழிப்பு'' என்ற பெயரில் வெற்றிகரமாக தமிழ் இனமே இங்கு இருக்கவில்லை என்று தமிழ் ஒழிப்பை நிறைவேற்ற சிங்கள இனம் ஒன்று சேர்ந்து நிற்கிறது.

தமிழன் இன்னும் மேசையிலிருந்து விழுவதைப் பொறுக்கித் திரிகிறான! பதவிக்கும் பட்டத்துக்கும் பணத்துக்கும் பல்லிழித்து நிற்கிறான்! ஐயோ தமிழினமே!

# போர்நிறுத்த காலத்தில் புகைமண்டலமாகும் வன்னி மண்!

வேணுகோபால்

சமாதானத்திற்கான ஒரு நல்லெண்ண முயற்சியாக விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியிருக்கும் போர் நிறுத்தத்தை தொடர்ந்து தங்களின் தடுப்புக்காவலில் இருக்கும் மீனவர்கள், விவசாயிகளை விடுதலை செய்வதிலும் புலிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவை சமாதான நடவடிக்கைகளை மேலும் வலுச்சேர்பதாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதே சமயம் இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சியில் இறங்காது சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளை தடை செய்யும் முயற்சியிலும், வன்னியில் புலிகளின் நிலைகளை போர் விமானங்களின் உதவியுடன் தாக்கியழிக்கும் நடவடிக்கைகளிலேயே முனைப்பு காட்டி வருவதை அண்மைக்கால செயற்பாடுகள் கோடு கட்டி நிற்கின்றன.



கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24ம் திகதி விடுதலைப்புலிகள் அறிவித்த ஒரு மாத காலப் போர் நிறுத்தம் மூன்று மாத காலமாக நீடிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் போர் நிறுத்தப் பிரகடனத்திற்கு ஏதுவாக படையினர் மீதான தாக்குதல் எதிலும் ஈடுபடாது தமது நிலையினை உறுதி செய்து வருகின்றனர் புலிகள்.



அதே வேளை தமது தடுப்புக் காவலில் இருந்த மீனவர்கள் விவசாயிகளையும் விடுதலை செய்து வருவது சமாதானத்திற்கான மேலதிக நல்லெண்ண சமிஞ்சைகளேயாகும்.

கடந்த மார்ச் 2ம் திகதி விடுதலைப்புலிகளின் தடுப்பு காவலில் இருந்த இரு சிங்கள மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். வி.வி.சந்திரபால, எச்.எம்.அஜித்குமார சிறி என்ற இந்த இரு மீனவர்களும் கடந்த 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் திகதி வவுனியா மாமடுவப் பகுதியில் உள்ள குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது காணாமல் போனதாக கூறப்பட்ட இவர்களே இப்போது விடுவிக்கப்பட்டனர்.

மார்ச் 16ம் திகதியன்று வன்னியில் நான்கு சிங்கள விவசாயிகள் விடுதலைப்புலிகளால் விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் நால்வரையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் அவர்களது சொந்த இடமான அனுராதபுர மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 99ம் ஆண்டு ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் படை முகாம்கள் மீது

## இதுதான் சமாதானத்திற்கான அரசின் சமிக்ஞையா?

மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து மணலாறு முகாமை அண்டியுள்ள சில முகாம்கள் புலிகள் கட்டுப்பாட்டில் வீழ்ந்தன.

வடக்கு கிழக்கின் இணைப்பாக விளங்கிய மணலாறு பாரம்பரிய தமிழ் கிராமமாகும். இப்பிரதேசத்தில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டிருந்த சிங்களக் குடும்பங்கள் சில விடுதலைப்புலிகளின் இத்தாக்குதலைத் தொடர்ந்து வெளியேறினர். சண்டை ஓய்ந்த பின்னர் தமது வீடு வாசல்களைப் பார்வையிட வந்த நான்கு விவசாயிகளே விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பதவியா பராக்கிரமபுரத்தைச் சேர்ந்த பி.ஜெயரெட்ண(31), என்.பி.சிறிவர்தன(41), கே.எம்.சுதர்சன்(26), என்.பி.மாறசிங்க(40) ஆகிய நால்வருமே தடுத்து வைக்கப்பட்டிருந்த விவசாயிகளாவர்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் சமாதான முன் முயற்சிகளை தீவிரப்படுத்தி வரும் போது அரசும் பேரினவாத சக்திகளும் போரை விரிவுப்படுத்தும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கான நடவடிக்கையாக நாட்டின் இரு பிரதான தலைவர்களும் வெளிநாடு சென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

அதே சமயம் புலிகளால் போர் நிறுத்தம் செய்யப்பட்ட காலத்தில் வன்னியில் போர் விமானங்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி வருகின்றன.

விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் எனக் கூறிக் கொண்டு மக்கள் குடியிருப்புக்கள் மீதே தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மார்ச் 13ம் திகதி மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பேரிரைச்சலுடன் வந்த மிக்ரக போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. இத்தாக்குதலினால் அச்சமடைந்த மக்கள் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினமும் மீண்டும் வன்னி நிலப்பரப்பில் மிக்ரக விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளன. இத்தாக்குதல் காரணமாக புதுக்குடியிருப்பு தோம்பாவிலைச் சேர்ந்த யோகராசா உதயகுமார் என்னும் இருபத்திரெண்டு வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந் துள்ளார்.

அதே சமயம் யாழ் குடா நாட்டின தென்மராட்சிப் பகுதியிலும் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத்தாக்குதலின் போது ஆலயம் ஒன்றும் வீடு ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தத்திற்கு அனுசரணையாக அரசும் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளாது படையினருக்காக ஆள்திரட்டல், தப்பியோடிய படையினரை சரணடையச் செய்தல், ஆயுதக் கொள்வனவு போன்ற போர் விரிவுபடுத்தலுக்கான நடவடிக்கைகளையே அரசு கையாண்டு வருவது சமாதானத்திற்கான அறிகுறியாகத் தென்படவில்லை.

✻✻✻✻✻

# சிங்கள இனத்தின் வரலாறாகும் இலங்கை வரலாறு

## ஈழத்தமிழரின் இறைமைக்கு விடப்பட்டுள்ள அச்சுறுத்தல்

**துரை - மேகநாதன்**

''விகாரமகாதேவிக்கு மசக்கை ஏற்பட்ட போது அவர் தமிழர் ஒருவரின் இரத்தத்தை ருசிபார்க்க விரும்பினார். வேலுசுமண என்ற வீரன் அனுராதபுரம் சென்று தமிழ்ப்படைவீரன் ஒருவரின் கழுத்தை வெட்டி இரத்தம் தோய்ந்த வாளுடன் வந்து அதனை தேவியிடம் கொடுத்தான் என்று வரலாறுகள் கூறுகின்றன".

இவ்வாறு அண்மையில் நடை பெற்ற குளியாப்பிட்டித் தொழில்நுட்பக் கல்லூரி அபிமானி கண்காட்சி வைபவத்தில் உரை நிகழ்த்திய ஸ்ரீலங்காவின் சமூக சேவைகள் பிரதி அமைச்சரான மேர்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைத்தீவில் ஆழ

அமர வாஞ்சதேரோ" அவர்கள், ''உங்கள் நாடு, சமயம், பண்பாடு என்பவற்றில் உங்களுக்கு அன்பிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது தமிழரை இலங்கையிலிருந்தும் துரத்தியடியுங்கள். எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பின் தமிழரைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. தமிழர்கள் எங்களது முதன்மையான எதிரிகளாவர்" என்று அன்றே ''பிரித்(து)" ஓதியிருந்தார்.

''விகாரையில் புரட்சி"(The Revolt In The Temple) என்ற நூல் சிங்கள இனவாத வரலாற்றுப் போக்கு தொடர்பான விமர்சிப்பில் மிக முக்கியமானதொன்றாகவே ஆய்வாளர்களால் சுட்டிக்

ஒழிக்க இருபதினாயிரம் படையினர் மேலும் தேவை என்று ''முக்கி முனகும்" ஸ்ரீலங்கா பிரதமரும் அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையில் இணைந்த இளம் பௌத்த துறவியும் இன்னும் பிற பௌத்த சிங்கள பேரினவாதக் கருத்துரையாளர்களும் ''விகாரையில் புரட்சி" யை

*அடையாளங்காண விரும்புகின்றனர்"* என்று பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ''பூதாகரத்தன்மை"யை எடுத்து விளக்குகிறார்.

இவ்வாறான வரலாற்றுத் தடம் கொண்டதாக பௌத்த சிங்கள

உள்வாங்கிய வர்களாகக் காணப்படுவதை மேற்படிக் கூற்றைப் புரிந்து கொள்வதன் மூலம் அடையாளங் கண்டு கொள்ள முடியும். ''சுதந்திர இலங்கையின்

இன வாத வீச்சுக் கொண்டதாக சிங்கள வரலாறுகள் தென்படினும் (தமிழ் பள்ளி பாடப்பரப்புக்களிலே வரலாறாக மனனம் செய்ய வைக்கப்படுபவை இத்தகைய வராற்றுத் தகவல்களே.) ''எப்பவேனும்" ஒரிரு வரலாற்று வெளிச்சங்களும் ''தூறல்கள்" ஆக வரத்தான் செய்கின்றன.

வரலாற்றில் தனித்தமிழ் இராச்சியமாக கி.பி 1621இல் போர்த்துக்கேயரிடம் போரில்



வேரோடி புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண என பல்வேறு கட்டங்களினூடாக முன்னெடுப்புகள் எடுக்கப்படுகிற வேளையிலே இவ்வாறான தவறான

இனவாதக் ''கருத்து விதைப்பு" தன்மை ''நல்ல சகுணம்" ஆகத் தென்படவில்லை.

இத்தகைய இனவாதப் போக்கு இன்று நேற்று சிங்கள தேசத்தில் தோற்றம் பெற்றதல்ல, நெடிய வரலாற்றுத் தடத்தினூடாகவே பௌத்த சிங்கள இனவாதிகளால் மிகத் திட்டமிடப்பட்டு ''மாயவலை" விரிக்கப்பட்டு வந்துள்ளதை கடந்து வந்த பாதை காட்டுகிறது.

''இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சித் தந்தை" ஆக பள்ளி மாணவர்களுக்கு போதிக்கப்படும் ''அநகாரிக தர்மபால" தொடர்பாக பிர்பல சிங்கள வரலாற்றாசிரியரான டபிள்யூ.ஐ. சிறிவீர எழுதுகையில், *''அரசன் துட்டகெமுனுவை ஆத்மீக ரீதியாக நீங்கள் தரிசித்து பௌத்தத்தையும் தேசிய வாதத்தையும் இருளிலிருந்து மீட்ட அம் மகா மன்னனின் சிந்தனைகளோடு உங்களை அடையாளம் காணுங்கள்"* என்று ''அநகாரிக" ''சிங்களவர்களே! விழிப்புறுங்கள்" என்ற தலைப்பிலே உரைத்ததாகக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

கடந்த இரு ஆண்டுகளில் முனைப்புப் பெற்ற சிஹல உறுமய, வீர விதான போன்ற அமைப்புக்கள் சிங்களவர்கள் தமிழர்களுக்கு சொத்துக்களை விற்க வேண்டாம் என்றும் தமிழர்களைத் தலைநகரிலிருந்து மட்டுமல்ல மலையகத்திலிருந்தும் விரட்டியடிக்க வேண்டும் என்றும் போட்ட ''இனவாதத் தவளைக் கத்தல்களின்" முன்னோடிக்குரல் பின்வருமாறு அமைகிறது.

''திரிசிங்கள பெரமுன" என்ற இனவாத அமைப்பு முன்பொருதடவை களனியில் நடத்திய கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய ''தேவ மொத்தீவ

காட்டப்படுகிறது. பௌத்தத்தின் 2500 ஆண்டுகால நிறைவைக் குறிக்கும் பௌத்த ஜெயந்தியை ஒட்டி எழுதப்பட்ட இந்நூல் 1953இல் வெளிவந்தது. பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் அவசியத்தை நூல் பூராவும் வலியுறுத்தியுள்ளார். டி.சி.விஜய வர்த்தனா அவர்கள்.

''விகாரையில் புரட்சி" இன் முன்னுரையில் *''இலங்கையின் வரலாறே சிங்கள இனத்தின் வரலாறு தான்; இவற்றைத் தனித்தனியாக நோக்கினால் இவற்றில் ஒரு முக்கியத்துவமும் இல்லை"* என்று தெரிவிக்கப்பட்டிருப்பது இலங்கைத் தீவில் ஈழத்தமிழரின் இறைமைக்கு விடப்பட்ட அச்சுறுத்தலாகவே நோக்கப்படல் வேண்டும்.

மேற்படி முன்னுரையை எழுதிய வண-பஹமுனி சிறிசுமங்கல

பிதாமகர்" ஆக சிங்கள தேசம் போற்றும் டொன் ஸ்டீபன் சேனநாயக்கா 1951 இல் தன்னைச் சந்தித்த ''அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்" தூதுக்குழுவினரிடம் அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு விட்டு, *''......புத்தம், தர்மம், சங்கம் எனும் மும்மணிகளோடு பௌத்தத்திற்கு நான்காவது மணியாக 'அரசாங்கம்' என்பதையும் சேர்க்கப் போகிறீர்களா?* என்று வினாத் தொடுத்திருந்தார்.

அன்று அவ்வாறு கேள்வி கேட்ட பெரிய சேனநாயக்கா இன்று வரை ஈழத்தமிழ் தாயகத்தின் ஆள்புலத்தைத் துண்டாடித்தாயகக் கட்டமைப்பை குலைத்து நிற்கும் சிங்களக் குடியேற்றக் கொள்கையின் பிதா மகராகவும் காட்சி தருவது ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாறு எனும் துன்பியல் நாடகத்தின் சிறப்புக் குணாம்சங்களில் ஒன்றாகிறது. இத்தகைய பௌத்த சிங்கள

கைம்மாறும் வரை இருந்த தமிழர் தனியரசை மீள் நிறுவலிற்காக ஈழத்தமிழர்கள் தர்மத்தின் பாற்பட்டு நடத்தும் தாயக விடுதலைப் போராட்டத்தை ''பயங்கரவாதம்" என்று கொச்சைப்படுத்தும் பௌத்த சிங்கள பேரினவாதிகளும் அவர் தம் அரசுகளும் நிஜமான பௌத்தர்களாயின் பின்வரும் பௌத்த மெய்யியலை அடிப்படையாகக்

கொண்ட கருத்தை செயற்படுத்த ஈழத்தமி ழர்களை விடுவதே பௌத்தத்திற்கான கௌரவமாக அமையும்.

*''இரு இனங்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளே **துக்கம்** ஆகும். ஒன்று பட்டு வாழ முடியாத எம்மிரு இனங்களையும் (1833இல்) ஒன்றாக இணைத்த பிரித்தானியாவின் செயலே இத்துக்கத்துக்குரிய **துக்கோற்பத்தி** ஆகும். வரலாற்றுத் தீர்வுப்படி (1619க்கு முன் இருந்தது போல்) இரு இனங்களும் மீண்டும் தனித்தனியே பிரிந்து வாழ்வது தான் **துக்க நிவாரணம** ஆகும். இரு அரசுகளையும் - தமிழீழ அரசு, சிங்கள அரசு - தனித்தனியே மீள்வித்துப் புனர மைப்பது தான் **துக்க நிவாரண மார்க்கம்** ஆகும்."*

உரத்து சிந்திக்கப்பட வேண்டிய மேற்படிக் கருத்தை 22-11-1979 இல் ஸ்ரீலங்கா வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் 'சிந்தனைச்சிற்பி' சி.கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கூறியிருந்தார். ''புனித பௌத்ததத்துவங்களின் அடிப்படையில் தமிழ் சிங்களப் பிரச்சினையை அணுகுகிறேன்" என்று தொடங்கி மேற்படித் தத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தமை இன்றைய கால கட்டத்தில் மீள அழுத்தியுரைக்கப்பட வேண்டியதாகிறது.

மூன்றாந்தரப்பு ஏற்பாட்டுடன் நீதியான நிறைவான தீர்வுக்காக ஈழத்தமிழர்கள் பாடுபட்டு வருகையில் இந்திய மேலாதிக்கம் மேவி வருவதும் இதர அரச பயங்கரவாதக் கூச்சல்களையும் கேட்குமிடத்தில், *''துன்பத்தைக் கொடுப்பவர்களல்ல, அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்பவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள்"* என்ற ஐரிஷ் விடுதலைப் போராளியான மைக்ஸ் வைனி(Mcs. Wency) யின் கருத்து ஆத்மார்த்த பலம் எமக்களிக்கிறதல்லவா?

✲✲✲✲✲

**"எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பின் தமிழரைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. தமிழர்கள் எங்களது முதன்மையான எதிரிகள" என்று "விரித்" து ஓதிய பௌத்தத் துறவி.**

அவர்கள் பௌத்தத்தின் அதியுயர் பீடமாகக் கருதப்படும் கண்டி மல்வத்தை பீடாதிபதியாகத் திகழ்ந்தவர். அம் முன்னுரையில் மேலும், *''....500 பிக்குகள் துட்டகெமுனுவுடன் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்....."* என்று தெரிவிப்பதன் மூலம் சாதாரண மானுட வாழ்வைத் துறந்து காவியுடுத்து துறவு பூண்டவர்களது ''தீவிர" அரசியல் முனைப்பையும் மகாசங்கத்தினரின் அரசியல் தலையீட்டையும் ஆதாரபூர்வமாக ''நியாயப்" (?) படுத்தியிருக்கிறார் என்கிறார் ஒரு விமர்சகர். 700 பக்கங்களைக் கொண்ட இப்பெரிய நூல் ''நாஸிஸக்" கருத்துக்களை விதைத்த அடொல்.ீப் ஹிட்லரின் ''மெயின்காம்ப்" ஐ ஒத்தது என்கிறார் இன்னொரு விமர்சகர்.

இன்று பயங்கரவாதத்தை

இனவாதக் ''கக்கல்களுக்கு" காரணமாக மூத்த சிங்கள வரலாற்றுப் பேராசிரியரான கே.எம்.டி.சில்வா அவர்கள் கூறும் உளவியல் அணுகுமுறையிலான விளக்கம் ஆழ சிந்திக்கத்தக்கது.

*''...... சிங்களவர் பெரும்பான்மை இனமாய் இருப்பினும் தாம் ஒரு சிறுபான்மை இனமெனத் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள். மக்களாட்சி என்பது பெரும்பான்மை முடிவெனினும் சிறுபான்மையினரின் இசைவையும் பெறுதல் வேண்டும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. சிங்களவர்கள் தம் எண்ணிக்கை பலத்தின் அடிப்படையிலேயே அனைத்தையும் தீர்க்க விரும்புகின்றனர். அத்தோடு பௌத்தத்தைத் தம் இனத்தோடு பின்னிப்பிணைத்தே*




# 'ஆமி பாஸூ'க்கு எதிரான வெகுஜனப் போராட்டம்.....

ஒரு அரசுக்கும் குடிமக்களில் ஒரு பகுதியினருக்கும் இடையில் போர் மூளும்போது, அரசு தனது சட்ட அந்தஸ்தினையும் சட்டவாக்க உரிமைகளையும் எப்பொழுதும் யுத்தத்தில் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றது. இதற்கு உதாரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டங்களினையும், அவசரகாலச் சட்டங்களினையும், போக்குவரத்துக்கான இராணுவ அனுமதி பெறும் நடைமுறைகளையும் பொருளாதாரத் தடை நடைமுறைகளையும், அத்தியாவசியப் பொருட்கள் மட்டுப்படுத்தப்படும் நடவடிக்கைகளையும் கூறலாம். இங்கு சட்டங்களை இயற்றும் உரிமை அரசுக்கே இருப்பதனால் அது எந்த வகையான விதியையும் நடைமுறைக்குக் கொண்டுவர இயலும். அந்த விதிகள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவனவாக இருந்தால்கூட பரவாயில்லை.

**மக்களின் தொடர் நடவடிக்கை நிலைமையை மாற்றும்**

உரிமைகள் மனிதர்களுக்குக் கிட்டாத சந்தர்ப்பங்களிலொன்றாக போர் சூழ்நிலை கருதப்படுகின்றது. உதாரணமாக உணவு அடிப்படை உரிமையென்றாலும்கூட வறியோருக்கு அது உரிய அளவில் கிடைப்பதில்லை. அது அவர்கள் வாழ்க்கையில் நேர்ந்த துரதிர்ஷ்டமாகவே மனிதர் நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் ஒரு சமூகக் கட்டமைப்பும் அங்கு நிலவிய வழக்கங்களும் விதிமுறைகளுமே ஒரு மனிதனை வறுமைக்குள் தள்ளுகின்றதென்றோ, வறுமை எப்போதும் வறுமையையே பிரசவிக்கும் என்றோ நினைப்பதில்லை. இங்கு வறியோர்கள் உணவு தமது உரிமை எனக்கொண்டு அவ்வுரிமையைக் கைக்கொள்ள அரசு கொள்கைகளை மாற்றவும் இன்னோரன்னபிற நடவடிக்கைகளையும் எடுப்பார்களெனில் தமது நிலைமையை மாற்றிக்கொள்ள முடியும். அதேபோல், யுத்தப் பிரதேசங்களில் இருக்க நேர்ந்த மக்களுக்கும் அவர்களுக்கு உணவு கிடைக்காத பட்சத்தில் அவர்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளே காரணம் காட்டப்படுகின்றன. இங்கு, உணவு எமது அடிப்படை உரிமையல்லோ என்று அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுக்க முயன்றார்களெனில் நிலைமை நிச்சயம் மாற்றமடையும். மக்களின் தொடர்ந்த நடவடிக்கைகளினாலேயே அரச கொள்கைகள் மாறுகின்றன. ஏனெனில், மக்களின் பெயராலேயே அரசு ஆட்சி நடத்துகின்றது.

ஆம், மக்களின் பிரதிநிதியாகத் தன்னைக் கூறிக்கொள்ளும்

ஆக்குவதற்கு மக்களுக்கே முடியும். மக்கள்தான் இறைமை உள்ளவர்கள், அரசு அல்ல. அவர்கள் நிராகரிக்கும் அக்கணமே அவர்களுக்காக அரசு கட்டில் இருக்கும் தகுதியை அரசு இழந்து விடுகின்றது. மக்கள் தம்மை நிராகரிக்கும் அச்சுறுத்தல் எப்போதும் இருப்பதனால் அரசும் சுவாரசியமான முறையில்தான் தனது போர்க்காலச் சட்டங்களைக் கையாளுகின்றது.

அது எப்படியென்றால் எந்த கடுமையான விதிமுறைகளைக் கொண்டுவரும்போதும், மக்களே உங்களுக்கெதிராகக் கொண்டுவருகின்றோம் என்று கூறுவதில்லை. **உங்களுக்கெதிராக இந்த நடவடிக்கைகளை நாம் எடுக்கவில்லை, ஆனால் பயங்கரவாதிகளுக்கு எதிராகத்தான் எடுக்கின்றோம** என்கின்றனர். நகரில் சோதனைகளினால் அல்லலுறுகின்றீர்களா, தயவுசெய்து பொறுத்துக்கொள்ளுங்கள், அது பயங்கரவாதிகளைப் பிடிப்பதற்குத்தான் நாம் செய்ய வேண்டியிருக்கின்றது. உணவும் மருந்துப் பொருட்களும் இல்லையா, பொறுங்கள் அவற்றின் வினியோகத்தில் பயங்கரவாதிகள் கை வைத்து விடாமலே நாம் அவ்வாறு செய்ய வேண்டியிருக்கின்றது. நிரபராதியான உங்களைக் கைது செய்து சிறையில் வருடக்கணக்கில் அடைத்துவிட்டார்களா, ''சொறி'' பயங்கரவாதிகள்



யாரென்பது பார்த்தால் தெரியாததனால் இந்தத் தவறு நிகழ்ந்துவிட்டது. என்று இவ்வாறு அரசு தரப்பில் முடிவின்றி காரணங்கள் கூறப்படும். என்ன, எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கின்றதா? ஆம், இலங்கையிலும் தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் அன்றாடம் நடக்கும் சம்பவங்கள் தான் இவை.

**கரடியினம் மக்கள், பயங்கரவாதிகள் புலியினமா?**

வன்னிக்கு அனுப்பப்படும் உணவு பயங்கரவாதிகளுக்கல்ல மக்களுக்கே சென்று சேரவேண்டும் என்று ஒருமுறை எமது ஜனாதிபதி கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது.

சார்ந்தவர்கள் மாதிரியும் பயங்கரவாதிகள் புலியினத்தைச் சேர்ந்தவர்கள் மாதிரியும் ஆட்சியாளர்கள் நினைத்துவிட்டார்களோ என்று திகைத்தோம். தாய்க்கு உணவு அனுப்புகின்றோம், ஆனால் மகனுக்கல்ல, சகோதரனுக்கு அனுப்புகின்றோம் ஆனால் அவன் சகோதரிக்கல்ல, தந்தைக்கு அனுப்புகின்றோம் ஆனால் அவர் மகளுக்கல்ல என்றல்லவா அவர் உண்மையில் கூறியிருக்கவேண்டும்?

இது தொடர்பான இன்னொரு சிரிப்புவெடியையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். வாழைச்சேனை இராணுவ சோதனைச் சாவடியில் பயணிகளுக்காக ஒருபலகையில் இப்படிப் பொருள்பட எழுதியிருக்கின்றனர்: உங்கள் பாதுகாப்பே எமது நோக்கம், ஏற்படும் சிரமத்துக்கு மன்னிக்கவும். அதாவது, அவர்கள் கூறுகிறார்கள் எங்களைப் பாதுகாக்கத்தான் எங்களைச் சோதனையிடுகின்றார்களாம், ஆதலினால் எங்களைப் பொறுத்துப் போகட்டாம்.. பார்த்தீர்களா, அரசு மக்களில் எவ்வளவு பயம் கொண்டு உண்மையை இந்த அளவுக்கு மறைத்து இயங்க வேண்டியிருக்கின்றதென்று?

இந்தப் போர் உங்களுக்கெதிராகவல்ல பயங்கரவாதிகளுக்கெதிராகத்தான், என்னும் வாக்கியம் அபின் போன்றது. மக்களை தம்மைச் சுற்றி நடப்பவற்றை உணரவைக்காது அயர்ந்து தூங்க வைக்கும். நாம் யாராவது எம்மைப் பயங்கரவாதியென நினைப்போமா? ஆகவே எங்களுக்கெதிராக ஒன்றும் செய்யப்படவில்லை என்ற நிம்மதியுடன் இருப்போம். இது மனத்தில் இருக்கும்வரை அந்த நடைமுறைக்கெதிராக ஒரு நடவடிக்கையையும் நாம் எடுக்கத் தேவையில்லையல்லவா? நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதனை உணராததனால் அரசு கேட்டுக் கொள்வதுபோல் எந்த அவலத்தையும் சகித்துக் கொண்டிருப்போம். யுத்தம் பயங்கரவாதிகளுக்கும் அரசுக்கும் எதிராக இடம்பெறுவதனால்தான் இந்தக் கஷ்டம் எல்லாம், அது முடிவுற்றவுடன் கஷ்டமெல்லாம் தீரும் என்கின்ற நம்பிக்கையுடனும் நப்பாசையுடனும் காலத்தைப் போக்குகின்றோம்.

**மன நோயாளிகளாக்கும் விதிகளும் நடைமுறைகளும்**

இப்படி நப்பாசையில் மூழ்கியிருப்பவர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டியது இதுதான். இந்த விதிகளும் நடைமுறைகளும் எங்களுடைய பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றது, எங்கள் பாதுகாப்பை அச்சுறுத்துகின்றது, எங்கள் நடவடிக்கைகளையும் போக்குவரத்

இதனால் நாளடைவில் நாம் பொருளாதார அடித்தளமே இல்லாதவர்களாயும், அச்சம் மிகுந்தவராயும், நமது சமூக வாழ்வில் முழுமையாகப் பங்கு கொள்ள முடியாதவர்களென்றனால் வெகு வாகத் தனிமைப் படுத்தப்படுகின்றோம். உள்ளூர சோகமும் விரக்தியும் மேலிட, எமது வாழ்க்கையை எமது கட்டுப்பாட்டுக்குள் வைக்க இயலாது மனநோயாளர்களாகின்றோம். அதன் பின்னர், அரசுக்கெதிரான போராட்டங்களில் பங்குகொள்ளும் வல்லமையோ உறுதியோ எங்களுக்கு இருக்காது. சுற்றிவர நிகழும் பிரச்சனையை எதிர்நோக்கும் தென்பின்றி எமது வாழ்நாளை சினிமா, தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்குகளில் எம்மையே மறக்கடிக்க முயற்சி செய்வோம்.

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழும் மனிதர்களுடன் பணி புரிந்த மனோதத்துவ நிபுணர்கள், இவர்களின் பொதுப் பிரச்சனையாக எந்த நேரமும் தொலைக்காட்சிக்கு முன்னால் முடங்கியிருப்பதையும் குடிபோதைக்கு ஆளாவதையுமே குறிப்பிடுகிறார்கள். எங்கள் தமிழ் பிரதேசங்களிலும் இன்று கசிப்பு பாவனை அளவுக்கதிகமாகப் போனது தற்செயலாக நிகழ்ந்ததல்ல, அல்லது ஒவ்வொருவர் வீட்டிலும் பகலும் இரவும் சக்தியும் சுவர்ண வாஹினியும் முழங்கித் தொலைப்பது எங்கள் தொன்று தொட்டு வந்த கலாசாரமுமல்ல. இதெல்லாம் எங்கள் கூட்டான மனநோயின் அறிகுறியென்றால் மிகையாகாது. உண்மையில் நாங்கள் பொழுது போக்கு என்று நினைத்துக் களிப்பவையெல்லாம் சமூகத்தை அடக்கிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கைக்கொள்ளப்படும் கருவிகளாகும். அதனால்தான் அரசு இவற்றுக்கெல்லாம் தாராளமாக அனுமதி வழங்குகிறது.

இலங்கையில் மட்டுமல்ல, போர் நிகழும் எந்த நாட்டிலும் பிரச்சனைக்குரிய மக்களின் ஆத்ம பலத்தினை முறியடிப்பதை நோக்காக வைத்துக்கொண்டுதான் உண்மையில் எந்த அரசும் இவ்வாறான விதிமுறைகளையும் நடைமுறைகளையும் கொண்டு செயல்படுகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் போர் முடிவடையும்போது நாம் மனிதர்களாக இருக்க மாட்டோம், வெறும் பேடிகளாகத்தான் இருப்போம்.

**எமது இன ஒழிப்புக்கு நாமே துணை போவதா?**

உணவு எங்களது உரிமை, மருத்துவ வசதிகள் எங்களது உரிமை, தொழில் புரிந்து எங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் எங்களது உரிமை, அதேபோல் சுதந்திரமாக நடமாடுவதும் எங்களுடைய அடிப்படை உரிமையாகும். இந்த உரிமைகளெல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கும் விதிமுறைதான் இராணுவ அனுமதிப் பத்திர நடைமுறையாகும். இது தமிழ் மக்களைப் பட்டியில் வாழும் விலங்குகள் போன்று வாழ வைக்கின்றது. நமது வாழ்க்கையைச் சீரழிக்கும் இந்த விதிமுறைக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுத்தே தீரவேண்டும். இல்லாவிடில் எங்கள் இன ஒழிப்புக்கு நாங்களே துணை சென்ற குற்றத்தினைப் புரிந்தவர்களாவோம். இதற்கு மகாத்மாகாந்தி தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்கு வழங்கிய அடையாள அட்டைக்கெதிராக முன்னெடுத்த போராட்டம் எங்களுக்கு சிறந்ததொரு வழிகாட்டி

## மெய்தானா சங்கதி

-கருடன்-

கடந்த மாதம் கொழும்பில் இடம் பெற்ற ஒரு கட்சியின் மகாநாட்டிற்கு மட்டக்களப்பில் இருந்தும் ஆகாய நிறக்காறர்கள் பல பேரை அழைத்துச் சென்றனர் என்ன காரணமென்டால் ஓசிவஸ்சும், ஓசிச்சாப்பாடுமாம்.

இதில் இங்கிருந்து சென்றவர்களில் சில அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர் என்பவர்களும் அடங்குவர். கொழும்பில் இருந்து இவர்களை அழைத்த விக்கினப் பெருமானிடம் தமது பெயரை பதிவு செய்தார்களாம்.

இம் மகாநாட்டிற்குச் சென்றவர்களுக்கு வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, மதுபானக்கடை அனுமதி, சமாதான நீதவான், இவ்வாறான சலுகைகளுக்கு முன்னுரிமை வழங்கவுள்ளதாக அந்த சிவனின் மகன் உறுதி கூறினாரர்ம்.

இதே வேளை தாம் இம்மகாநாட்டிற்கு போன விடயத்தை தப்பித்தவறி படுவான் கரைப்பக்கம் கதைக்க வேண்டாம் என மட்டுநகரில் உள்ள ஆண் பெண் கல்லூரியின் அதிபர் ஒருவர் தமது சகாக்களிடம் புறுபுறுத்துள்ளார். இவரை அதிபராக்கினது அவர் தானாம்.

# தமிழர் வாழ்ந்த தடயங்களே இல்லாமல் செய்யும்

# திட்டமிட்ட கலாசார சீரழிப்பும் கசிப்பு உற்பத்தியும்

தமிழ் மக்களின் விடு தலைப்போராட்டத்தை நசுக்கு வதற்கு அரசு மேற்கொண்டு வரும் தந்திரோபாயங்கள் பல . உலக வல்லரசு நாடுகளின் ஆயுத, பொருளுதவிகளைப் பெற்று தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்திவரும் ஸ்ரீலங்கா அரசு பிரசார போரையும் நடத்திவ ருகிறது.

இடம்பெயர்வு, அகதி வாழ்வு என இயல்புவாழ்க்கை நிலைகுலைந்து போயிருக்கும் தமிழர்களின் அவலவாழ்வை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் அரசு தமிழ் மக்களின் கலாசாரத்தை மட்டுமல்ல அவர்களின் வாழ்வியலையும் அழித்து வருகிறது.

உயர்ந்த கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களைக் கொண்ட தமிழ்த்தேசிய இனத்தின் ஆத்மாவையே அழிக்கும் வகையில் சிங்கள பேரினவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

அண்மையில் வடக்குக் கிழக்குப்பகுதியில் இருந்து வெளியான இரு செய்திகள் அதை ஊர் ஜிதம் செய்கின்றன.

அண்மையில் வெளியான அச்செய்திகளைப்பார்த்த போது சிலதீயசக்திகள் தமிழ் மக்களின் ஒழுக்க விழுமியங்களை, பண்பாட்டை அழிக்க திட்டமிட்டு செயற்படுகின்றன என்பது தெளிவாகத்தெரிந்தது.

**அந்த செய்திகள் இவை தான்**

யாழ்குடாநாட்டில் ஸ்ரீலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஆபாசப்படங்களும்,கலாசாரத்தை சீரழிக்கும் பிரசுரங்களும், வீடியோ படங்களும் தாராளமாக கிடைக்கின்றன.

தென்னிலங்கையிலிருந்தே இவை இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இரண்டாவது மட்டக்களப்பு, உட்பட தமிழ் பிரதேசங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்திருப்பதாகவும், ஏனைய இடங்களில் அதனை கட்டுப்படுத்திய போதிலும் இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் எந்த கட்டுப்பாடோ தடைகளோ இன்றி நடைபெறுவதாகவும், கசிப்பு உற்பத்தி செய்வோருக்கும் விற்பனை செய்வோருக்கும் இராணுவத்தினர் உறுதுணையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு செய்திகளும் சாதாரணமான சமூகசீர்கேடுகள் என்ற அளவில் பார்ப்பதற்கு அப்பால் இதன் பின்னணி, இதனால் சமூகத்தில், தமிழ் தேசிய இனத்திற்கு நீண்டநோக்கில் ஏற்படப்போகும் அபாயங்கள் பற்றியும் நோக்கவேண்டும்.

முதலாவது செய்தியின் படி ஆபாச சஞ்சிகைகள், படங்கள்,ஒளிநாடாக்கள் அனைத்தும் இளைய தலைமுறையினரின் கைகளுக்கு கிடைத்திருக்கின்றன. பாட சாலை மாணவர்களின் கைகளில் கூட இத்தகைய ஆபாசப்படங் களும், சஞ்சிகைகளும், ஒளி நாடாக்களும் கிடைத்திருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்நகரம் இருந்த போது இத்தகைய கலாசார சீரழிவுகள் இடம்பெறவில்லை என்றும், இப்போது இவை தாரா ளமாக இங்கு கொண்டுவர அனுமதித்துள்ளனர் என யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி அதிபர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதன்மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு பலநன்மைகள் கிடைக்கின்றன. இலங்கையில் யாழ்ப்பாண தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள், அது சிங்கள தலைவர்களுக்கும் , அரசுக்கும் காழ்ப்புணர்வை ஏற்றபடுத்தியிருந்தது. இதனாலேயே சிங்களம் மட்டும் சட்டத்தை ஜனாதிபதி சந்திரிக்காவின் தந்தை பண்டார நாயக்கா கொண்டுவந்தார். தரப்படுத்தலை சந்திரிக்காவின் தாயாரான ஸ்ரீமாவோ அறிமுகப்படுத தியிருந்தார்.



தமிழர்கள் அரச உயர் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டனர். பதவிஉயர்வுகள் மறுக்கப்பட்டன.

தமிழர்கள் திட்டமிடப்பட்ட ரீதியில் புறக்கணிக்கப்பட்டனர். அவர்களின் திறமைக்கு ஏற்றவகையில் பதவி உயர்வுகள் வழ்ங்கப்படவில்லை. தமிழர்கள் வகித்த உயர்பதவிகள் பறிக்கப்பட்டு சிங்களவர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டது. தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு தரப்படுத்தல் மூலம் ஆப்புவைக்கப்பட்டது.



தமிழர்கள் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு வந்தார்கள் என்பதை அண்மையில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி ஏற்ற சி.வி.விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது மும்மொழிகளிலும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

எவ்வித கூடிய தகமைகளையும் பெற்றிராத வயதில் குறைந்தவர்கள் பலர் ,ஆட்சித்துறையின் அனுசரணையின் பேரில் அரவணைக்கப்பட்டு நீதித்துறைகளின் படிநிலையின் மேற்படிகளில் நியமிக்கப்பட்டிருப்பினும் இவ்வாறு இப்பெருமைமிக்க நிறுவனத்திற்குள் வயது முதிர்வின் போதாயினும் உள்நுழைவது பெருமைதருகிறது. வயது, நீதித்துறை அனுபவம் ,முதிர்ச்சியோடு கூடிய அறிவுப்புலமை ஆகியவை சேர்ந்த தகமை நியமனங்களுக்கு இன்றைய கால கட்டத்தில் அவசியமில்லை என்பதை நான் அறிவேன். சட்டமா அதிபரும், நானும் மட்டும் இத்தகைய பிரத்தியேக புகழ்பூத்த பதவிகளை வகித்தாலும் ஓர் அல்லது ஈர் இடத்துப் புல் வளர்ச்சி மாரிகாலத்திற்கு அறிகுறியென்று ஆகாது தமிழ் மொழி பேசுவோரின் தொகை படிப்படியாக சகல அரசாங்க ,நீதித்துறை, சட்டத்துறை, ஏன் தனியார் நிறுவனங்களில் கூட இன்று மிகவும் குறைந்து வருவதையும் பறங்கியர் போன்று காலக்கிரமத்தில் எங்களைப் போன்றவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவரோ என்றும் நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

**இராதுரைரத்தினம்**

உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் கூற்று நீண்டகால அனுபவத்தின் ஊடாக வெளிப்பட்ட உண்மையாகும். அவர் கூறுவதுபோல தமிழர்களை இருந்த இடம் தெரியாது அழித்து விடுவதற்கு அவர்களின் ஒரே சொத்தான கல்வியையும் அழித்துவிட்டால் போதும் என கங்கணம் கட்டி செயற்படுவதன் வெளிப்பாடே யாழ் நகருக்குள் வந்து குவியும் ஆபாச சஞ்சிகைகளும், ஒளிநாடாக்களும் ஆகும்.

இலகுவில் எதிலும் திடீரென ஈர்க்கப்படக்கூடிய இளைய தலைமுறையினர் மத்தியில் இதனை பரவவிட்டால் அவர்கள் கல்வியில் நாட்டம் இழந்து தீய வழிகளில் காலத்தை செலவிட முனைவார்கள். பல குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு தூண்டப்படுவார்கள். போதைப்பொருள்களில் நாட்டத்தை செலுத்துவார்கள். இத னுடாக தமிழ் சமூகத்தை அழித்து விடலாம் என சிங்கள பேரினவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆபாச சஞ்சிகைகள் யாழ்நகரில் புத்தக விற்பனை நிலையங்களில் கூட பெறக்கூடியதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சில மாணவர்களுடன் நெருங்கிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சில படையினர் அவர்களுக்கு இவற்றை தாராளமாக வழங்குகின்றனர். அண்மையில் யாழ்ப்பாண நகரில் உள்ள பிரபல பாடசாலையில் மாணவர்கள் சிலர் இவற்றை வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனை விசாரித்தபோது படையினரே இதனை வழங்கியதாக மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ் சமூகத்தின் உயர் கல்வி நிலையை மாற்றி தமிழ் மாணவர்கள் தீயவழிகளில் நாட்டம் கொள்ளவைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இது உயர் மட்டத்தில் வகுக்கப்பட்ட திட்டமாகும். மாணவர்களுக்கு இவ்வாறு பாலியல் ரீதியில் ஆர்வத்தை ஏற்படுத்தினால் அவர்கள் தமது குடும்பம், கல்வி , இன விடுதலை பற்றி சிந்திக்கமாட்டார்கள். இதனால் அச்சமூகம் ஊனமுற்ற சமூகமாக மாறும் என்பதை வைத்து இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் வெற் றியும் கண்டிருக்கிறார்கள் போல் தான் தெரிகிறது.

இரண்டாவது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி யாகும். மட்டக்களப்பு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்து வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாமை அண்டியிருக்கும் சில சமூகவிரோதகும் பல்கள் படையினரின் உதவியுடனும், பாதுகாப்புடனும் இதனை உற்பத்தி செய்து வருகின்றன. சட்டவிரோத கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் தொண்டர் நிறுவன பிரதிநிதிகள், கிராம இளைஞர்கள் சேர்ந்து தடுத்து நிறுத்திய போதிலும் படைமுகாம் களுக்கு காணப்படுவதாக தொண்டர் ஸ்தாபன பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

படைமுகாம்களை அண்டிய பகுதிகளில் குறிப்பாக செங்கலடி, மொறக்கொட்டாஞ்சேனை, களுவங்கேணிசந்தி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அருகில் இருப்பவர்கள் தொடர்ந்து கசிப்பு உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டுவருவதாக ஏறாவூர்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த தொண்டர் நிறுவன பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அவர்களை தடுக்க முற்படுகின்ற போது புலிகளுடன் தொடர் புடையவர்கள் என சிக்கலில் மாட்டிவிடுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

சீனி, அழுகிய பழவகைகள், பேரிச்சம்பழம், நுழம்புச்சுரள், சீமெந்து, துருப்பிடித்த இரும்புகம்பிகள், சடலத்திற்கு போடும் போமலின், பயிர்களுக்கு போடும் உரம் என்பனவற்றைக்கொண்டே கசிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.


இக்கசிப்பினால் ஈரலில் சிரோஸிஸ் என்னும் நோய் ஏற்பட்டு மரணம் சம்பவிப்ப தாகவும், புற்று நோய்கள், கண்நோய் என்பன ஏற்படுவ தாகவும் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது பெரும் சமூக சீர்கேட்டை உருவாக்குகிறது. இதைத்தடுப்பதற்கு இளைஞர்கள் முற்படும் போது அவர்கள் மீது வேறு முலாம் பூசப்பட்டு சிக்கல்களில் மாட்டவைக்கும் நிலை அருகில் பெருமளவில் உற்பத்தி செய் யப்படும் கசிப்பு மாவட்டத்தின் பல இடங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.



நீதியரசர் விக்னேஸ்வரன்

தமிழ் பிரதேசங்களில் திட் டமிட்ட ரீதியில் நடைபெறும் இச்சமூக அழிவுகளை தடுக்க விட்டால் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் கூறியது போன்று இப்பகுதியில் உயர்கல்வித் தகமைகளுடனும் கலாசார பண்பாட்டு விழுமியங்களுடனும் தமிழர்கள் வாழ்ந் தார்கள் என்ற தடயங்களே இல்லாமல் இச் சமூகம் அழிந்துவிடும்.



தோட்டத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒரு மாதிரியாக 20 நாளைக் கடந்து வெற்றி கிடைச்சிருக்கு. அதுவும் அம்மையாருடன் கூட்டுச் சேர்ந்த தொண்டமான் பதவி விலகப் போரன் எண்டு பயமுறுத்தி பிரச்சினைக்கு தீர்வு கண்டாரு. உழைக்கிற காசைவிட விலைவாசி ஏறிப்போன அந்த சனங்கள் என்ன செய்யும் தாங்க! வெயிலில் பனியில் உழைச்சு அரசாங்கத்துக்குக் கொடுக்கிர வருமானத்தில கொஞ்சம் கேட்டுப் பெறுவதற்கு சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த வேண்டியிருக்கு என்டா நம்ம சனங்கள் தங்கள் உரிமையை கேட்டு எவ்வளவு நாளா கஷ்டப்படுதுகள் அது பற்றி அம்மையாரோ அம்மையாருக்கு முன் ஆட்சி செய்தவரோ கொஞ்சம் கூட நினைக்கல்ல.

**வேப்பையடி வீதியான்**

நம்ம சனங்களும் தங்கள் உரிமைக்காக சத்தியாக்கிரகம், அகிம்சைப் போராட்டம் எண்டு இறங்கியிருந்தா இப்ப நம்ம இனமே அழிஞ்சி போயிருக்கும். இல்ல இல்ல அழிச்சிருப்பாங்க.

என்ன தலிபான் காரர்கள் புத்தர் சிலை உடைப்பதற்கு இங்க இருக்கிர ஆக்கள் ஆத்திரத்தில துள்ளிக் குதிக்காங்க. குதிக்கத்தான் வேணும். தலிபானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யத்தான் வேணும். அது வரவேற்கத்தக்க செயல்தான்.

அது சரி. இங்க கோயில்கள் தேவாலங்களில குண்டு போட்டு அழிச்சதுக்க என்ன செய்யப்போறிங்க. யாராவது ஆர்ப்பாட்ட எதிர்ப்புக் காட்டினனிங்களா அதுக்கு எதிர்ப்பு காட்டலாமே. இங்க எத்தனை இந்துக் கோயில்கள் நாசமாய் போய்க்கிடக்கு. உங்கட வேலையால தலிபான் காரன் உடைக்கிறது மட்டும் புனிதசிலை. எங்கட என்ன சிமெந்தா?

ரெண்டெழுத்துக் காரங்களின் யுத்த நிறுத்தம் முடிகிறத்துக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் கிடக்கு. இதற்கு முதல் பேச்சுத் தொடங்குமா? இல்ல இன்னும் ஒரு மாதம் யுத்த நிறுத்தம் போடுவாங்கலா? எப்படியோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணம் எம்மட சனங்களின் மனங்களில் இல்ல. அந்தா பேச்சு நடக்கப்போகுது. இந்தா பேச்சு நடக்கப்போகுதென்ட கததான் வெளிவருது. பேச்சு நடக்கிற மாதிரி இல்ல. நடந்தாலும் பிரச்சினை தீர்ப்போவதில்ல.

சரி நான் வாரன் போயித்து.

# தங்கத்துரை திட்டமிட்டே இயங்கினார்! இதை அவன் அன்று உணரவில்லை!!

15

அவனும் அவனுடைய நண்பர்களும் வேறு இளைஞர்களும் ஒரு டிராக்டரை வழிமறித்து ஏறிக்கொண்டனர். டிராக்டர் பெட்டியில் பனங்கிழங்கு அடிக்கியது போல் இளைஞர் கும்பல். ஒவ்வொருவர் கையிலும் ஏதோ ஒரு வகை ஆயுதம் காணப்பட்டது. கம்பிகள், தடிகள், சைக்கிள் செயின்கள், பதப்படுத்தப்பட்ட திருக்கை



மீன் வால்கள் என ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு ரகம். டிராக்டரில் இடம் கிடைக்காதவர்கள் சைக்கிளில் இருவராகவோ மூவராகவோ தொடர்ந்தனர்.

டிராக்டர் வியாகுலமாதா

என்று அவன் நம்பினான். ஆனால் நிலமை வேறாகிவிட்டிருந்தது. நேமிநாதன் அமைதியாக ஒதுங்கிக் கொண்டார். தனக்கு டிக்கட் வேண்டும் என்று அவர் கட்சிக்குள் போராடினாரா இல்லையா என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் தொண்டர்கள் மத்தியில் அந்தப் போராட்டம் இடம் பெறவில்லை என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

சேருவிலைத் தொகுதி பிரிக்கப்பட்டதனால் மூதூர் இரட்டை உறுப்பினர் தொகுதி என்ற நிலை மாறிவிட மூதூர்த் தொகுதியில் ஒரு தமிழர் பாராளுமன்ற உறுப்பினராக வரும் வாய்ப்பு இல்லாமல் போயிருந்தது. இதனால் தங்கத்துரை அவர்கள் திருக்கோணமலை டிக்கட்டிற்காகவே திட்டமிட்டு இயக்கியிருக்கிறார். இது அந்த நாட்களில் அவனால் உணர்ந்து கொள்ளப்படாத ஒன்றாக இருந்தது. பின்னைய நாட்களில் அவன் இதை உணர்ந்து கொண்டான் என்பது வேறு விடயம்.

நேமிநாதன் அவர்களை இலகுவாக ஓரங்கட்டிவிடலாம் என்ற நம்பிக்கையில் தானே அடுத்த வேட்பாளர் என எண்ணியிருந்த தங்கத்துரையின் நினைப்பில். அப்போது சட்டத்தரணியாக இருந்த இரா.சம்பந்தனின் அரசியல் பிரவேசம் போட்டி

என்று அவனும் அவனது தோழர்களும் தீவிரமாக இருந்தார்கள். அபிப்பிராயங்களைத் திரட்டினார்கள். கட்சிக்கு மகஜர்கள் அனுப்பினார்கள். தந்தி மேல் தந்தி அடித்தார்கள். தங்கத்துரையை விடுவித்துச் சம்பந்தனைக் கட்சி வேட்பாளராகப் போட்டால் கட்சியைத் தோல்விய

**அருண்**

டையச் செய்து கூட்டணித் தலைமைக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

கட்சி வேட்பாளர்கள் தேர்தலுக்காக சம்பந்தனும் தங்கத்துரையும் கட்சி தலைமைப் பீடத்தால் அழைக்கப்பட்டனர். தங்கத்துரைக்கு டிக்கட் கிடைக்கும் என நம்பியிருந்தான். ஆனால் தலைமைப்பீடம் வேறுவிதமாக தீர்மானித்து விட்டிருந்தது. கட்சியில் வேட்பாளர் அனு மதி இரா.சம்பந்தனுக்கே வழங்கப்பட்டது. இளைஞர்கள் இடிந்து போனார்கள். கட்சி மேல் ஆத்திரமடைந்தார்கள். அவர்களது கோபமெல்லாம் அமிர்தலிங்கம் அவர்கள் மேல்தான் திரும்பியது.

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

கோவில் சந்தி கடந்து ஸ்ரீமாபுரம் நோக்கித், திரும்பியது. இளைஞர்களின் ஆவேசங்கண்டு வீதியில் இருமருங்கிலும் சனங்கள் திரண்டு நின்றதை கணேசஞ்சந்தி, சிவன் வோவிலடி, மடத்தடி ஆகிய பகுதிகளில் அவன் அவதானித்தான். அவனுக்கு அது உள்ளூரப் பெருமையாகவும் இருந்தது. வியாகுல மாதா கோவிலைக் கடந்ததும் இளைஞன் ஒருவன் டிராக்டரை வழிமறித்தான். "அங்கே போகாதீர்கள் பொலிஸ் வந்துவிட்டது. எங்கள் ஆட்கள் எல்லோரும் பாதுகாப்பாகத் திரும்பி விட்டார்கள். டிராக்டரைத் திருப்புங்கள்" என்று கத்தினான்.

கத்திய அந்த இளைஞன் எல்லோருக்கும் நன்கறிந்தவனாக இருந்ததால் அவனும் அந்த இளைஞன் பற்றி அறிந்திருந்தான். அவன் சொல்வதில் தவறு இருக்காது என்று தீர்மானித்துக் கொண்டான். டிராக்ட ரைத் திருப்பச் சொல்லி வெற்றிப் பெருமிதத்துடன் வந்தான். அந்த டிராக்டர் யாருடையது என்று அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் தமிழனுடையது என்று மட்டும் தெரியும். வீர இளைஞர்கள் ஒவ்வொருவராக இறங்கிச்சென்று விட்டனர். அவனும் வீடு திரும்பினான்.

தந்தையார் அவனை ஏற இறங்கப் பார்த்தார். "உனக்கு மூளை இருக்கிறதா.... நீங்கள் ஏறிச் சென்ற கோலத்தில் அந்த டிராக்டர் பெட்டிக்குள் யாராவது கைக்குண்டு வீசி இருந்தால் எத்தனை பேர் அழிந்திருப்பீர்கள். முட்டாள்தனமாக இனி மேல் நடக்காதே" என்றார். அப்போது தான் அவனுக்குத் தனது வீரத்துக்கும் விவேகத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இருந்தமை தெரியவந்தது. இன்று கூட அந்த முட்டாள்தனமான ஆவேசத்துக்காக அவன் வெட்கப்பட்டான்.

1977 பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆயத்தங்கள் இடம் பெற்றன. திருக்கோணமலையில் தொகுதிக்கான தமிழர் விடுதலைக் கூட்டணி டிக்கட் யாருக்கு என்ற போட்டி எழத் தொடங்கியது. தங்கத்துரைக்கும் நேமிநாதனுக்கும் இடையில் தான் போட்டி இருக்கக்கூடும்

யாக அமைந்தது. தங்கத்துரை இளைஞர்களைத் திரட்டத் தொடங்கினார். அவனும் தங்கத்துரையின் அணியிலேயே நின்று கொண்டான். ஆனாலும் கட்சி மேலிடம் இரா. சம்பந்தன் அவர்களுக்கே டிக்கட் கொடுக்கவிருக்கிறது என்ற ஊகம் பரவலாகக் காணப்பட்டது.

இரா.சம்பந்தன் அறுபதுகளில் சத்தியாக்கிரக காலத்தில் இளம் சட்டத்தரணியாக திருக்கோணமலையில் முன்னின்று உழைத்தவர் என்ற விடயம் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவனுக்கு மாத்திரமல்ல இளைஞர் கோஷ்டி



யில் எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. இளைஞர்களைப் பொறுத்தமட்டில் சம்பந்தன் என்றால் திறமையான வழக்கறிஞர், பொது மக்களுடன் நல்லுறவு கொள்ளாதவர் என்ற விடயங்கள் மட்டுமே அறியப்பட்டிருந்தன.

மறைந்த தந்தை செல்வாவும் சம்பந்தன் அவர்களையே எதிர்பார்த்திருந்தார் என்ற செய்தி கட்சி மட்டத்தில் பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது. இது உண்மையா பொய்யா என்று இன்றுவரை அவனுக்குத் தெரியாத ஒன்று. ஆனால் கட்சியின் திருகோணமலை உயர்மட்டப் பிரதிநிதிகள் அது உண்மைதான் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். தங்கத்துரைக்குத் தான் டிக்கட் கொடுக்கப்பட வேண்டும்

அவனும் அந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவனாகத் தனது ஆத்திரத்



தை வெளிப்படுத்திக் கொண்டான்.

தங்கத்துரை தோல்வியுடன் ஊர் திரும்பலானார். புகைவண்டி திருகோணமலையை நோக்கி வந்துகொண்டிருந்தது தங்கத்துரையை வரவேற்க திருகோணமலை புகையிரத நிலையத்தில் இளைஞர் கூட்டம் திரண்டு வந்தது. அரசடியைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டியுடன் அவனும் தங்கத்துரை வரும் புகையிரதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அரசடி இளைஞர்களில் ஒருவரான கோணலிங்கமும் அவன் அருகில் நின்று கொண்டிருந்தான். கோணலிங்கம் நல்ல உடல் கட்டும் பலமும் கொண்டவன். தங்கத்துரையை எப்படியாவது அர சடி இளைஞர்களே தூக்கித் தோளில் சுமக்க வேண்டும் என்று அவன் ஏற்கனவே திட்டம் போட் டிருந்ததால் கோணலிங்கத்தைத் தனதருகிலேயே வைத்துக் கொண் டான். அவனைப் போல் சிவன் கோவிலடி, கணேசஞ்சந்தி, பத்தாங் குறிச்சி, திருக்கடலூர், சண்முக வித்தியாலயச்சந்தி, இளைஞர் ளும் திட்டம் போட்டிருந்தனர்.

புகைவண்டி மேடைக்கு வந்தது. அதிஷ்டவசமாக அவனும் கோணலிங்கமும் நின்ற இடத்தில் தங்கத்துரை அமர்ந்திருந்த பெட்டியின் வாசல் நேராக வந்தமைந்தது. தங்கத்துரை இத்தகைய பெரிய கூட்டத்தை எதிர்பார்த்திருக்கவில்லை.

**(இன்னும் வரும்)**

## எழுச்சிக்குரல்

*எழுச்சி என்பது தேச விடுதலை நோக்கியதாக மக்கள் மயப்படுத்தப்படுத்தியதாகப் பரிணமிக்கிறபோது தேச விடுதலைப் போராட்டத்தில் அடக்கப்படும் சமூகத்தின் புலமையாளர்களின் பங்களிப்பும் காத்திரமானதாக இருந்து வந்ததே வரலாறு.*

*தேச விடுதலைப் போராட்டங்களிலே கல்விச் சமூகம் முதன்மையானதாகப் பல்வேறு கட்டங்களினூடாகப் பணியாற்றியுள்ளது. இவ்வார எழுச்சிக்குரலாக கல்விச் சமூகங்களின் போராட்டப் பங்களிப்பு குறித்ததான கருத்துப் பகிரக் காரணம் கடந்த வாரம் நிகழ்ந்த பேராசிரியர் எலியேஸரின் மறைவே ஆகும்.*

*பேராசிரியர் கிறிஸ்டி ஜேம்ஸ் எலியேஸர் உலகின் தலைசிறந்த கணிதவியலாளராக விளங்கியதுடன் "எலியேஸர் தேற்றம்" என்ற புகழ்பெற்ற விதியையும் தந்திருந்தார். மிகப் பிரபல்யமான அறிவியல் உரைகளை நிகழ்த்திய இவர். அல்பேர்ட் ஐன்ஸ்டைன், ஹோமிபாபா முதலான தலைசிறந்த விஞ்ஞானிகளுடன் பணியாற்றியும் இருந்தார். 1959 மே 10ல் அடிக்கல்லிடப்பட்ட "தமிழ்ப் பல்கலைக்கழகம்" தொடர்பான இயக்கத்தில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.*

*பேராசிரியர் எலியேஸர் அவர்கள் வெறும் புலமையாளனாகத் தன்னை அடையாளப்படுத்துவதிலும் விட தேசப்பற்றாளராகவே பெரிதும் வரித்துக் கொண்டார். அவுஸ்திரேலியாவில் ஈழத்தமிழர்*

**கோ.துரைகுமாரன்**

*களின் பரவலான பிரசன்னத்திற்கு வழிகோலியதுடன் புலம் பெயர்ந்த தமிழர்களை தேச விடுதலை நலன் கருதி ஒன்று படுத்துவதிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கியதுடன் புலமைப் பங்களிப்பையும் நல்கியிருக்கத் தவறவில்லை.*

*இவரது நாட்டுப் பற்றைக் கௌரவித்து 1997 மாவீரர் தினத்தில் "மாமனிதர்" விருது வழங்கியதுடன் தற்போது மறைவுக்கான இரங்கல் செய்தியையும் வெளியிட்டுக் கௌரவித்துள்ளது, ஈழத்தமிழ் மக்களின் தேசியத் தலைமை.*

*யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பேராசிரியர் அழகையா துரைராசாவுக்கும் அவரது உயரிய நாட்டுப் பற்றுக்காக "மாமனிதர்" விருது வழங்கப்பட்டமை நினைவு படுத்தத் தக்கது.*

*தேச விடுதலை வேண்டிப் போராடும் ஈழத்தமிழினத்தின் உயர் அடைவிற்குத் தமிழ் கல்விச் சமூகத்தின் பங்களிப்பு பல கட்டங்களினூடாகக் கிடைக்கப் பெறுவது இன்றியமையாதது. தாயக விடுதலைப் போராட்டத்தின் நியாயத்துவத்தை எடுத்துக் கூறும் சர்வதேசப் பரப்புரை அவற்றுள் முதன்மையானதாகவே அமைகிறது.*

*எமது கல்விச் சமூகக் கட்டமைப்பின் மீதான எதிரியின் ஆக்கிரமிப்பு மிக நுட்பமானதாகவும் அபாயகரமானதாகவும் அமைவதைத் தெளிவுற இனங்கண்டு முறியடிக்கப் பணியாற்றுவதே தக்கன பிழைக்கச் செய்யும்.*

*1990 களின் முற்பகுதியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களது கூட்டு முயற்சியால் வெளியான "விடியலைத்தேடும் பறவைகள்" என்ற ஒலிப்பதிவு நாடாவில் வெளியான பாடலொன்று இவ்வார "எழுச்சிக்குரல்" ஆக ஒலிக்கிறது.*

***"கல்வியும் எங்கள் மூல***
***தனம் - அதில்***
***கத்தி வைக்கிறது ஆளு***
***மினம்***
***பள்ளிக்கூடங்கள் அகதி***
***ஆனதே***
***படிக்கும் பாடங்கள் அழு***
***கை ஆனதே***
***அகதி முகாமில்***
***அழுகிற விளக்கில் படிக்***
***கின்றோம்.***
***ஆளுவோரின் கத்தி கீற***
***குருதி வரத் துடிக்கி***
***றோம்......***

***குப்பி விளக்குகள் காற்றில்***
***அணைந்தன***
***உப்பு நீரினால் விழிகள்***
***நனைந்தன***
***வானத்து விளக்கு வரு***
***மென்று நினைத்து இருக்***
***கின்றோம்.......***
***வாசலில் வெக்கும் குண்டு***
***ஆசைகள் கருகும் துடிக்***
***கின்றோம்.***

***திட்டமிட்டுப் பல சதிகள்***
***தீட்டினர்***
***வெட்டியும் வீழ்த்தனர்***
***எதிர்காலத்தின் கழுத்தை***
***பேரினவாதம் நெரிக்குதே***

***புத்தகத் தாள்கள் எதிரில்***
***விரிந்தன***
***செத்தவர் முகமே அருகில்***
***தெரிந்தன***
***போருக்குப் படிப்பா படித்***
***திடப்போரா... கேள்விகள்***
***அது ஊருக்கும் தெரிந்தால்***
***இனியும் அடுக்குமா தோல்***
***விகள்!***

***

**கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தமிழ் இனி - 2000க்குச் சென்று மீண்ட கவிஞர் சு.வில்வரத்தினம், தன்னுடைய அனுபவங்களையும், பிறவிடயங்களையும் இங்கு பகிர்கிறார். (ஆ-ர்)**

# கலைஞனுக்குள் உயிர் வாழும் அந்த வீரியம்



ஒரு கலைஞன் என்பவன் நான் போரை விரும்பி ஆதரிக்கின்றேன் என்று புகழ்பாட முடியாது. ஆனால் அதுவரை ஆற்றப்பட முடியாமல் விருத்தி பெற்றுச் செல்லும் சிங்கள பௌத்த பெரும் தேசியவாத நடவடிக்கைகள் ஈழத்து தமிழ் மக்களிடையே சகலதுறை சார்ந்த வளர்ச்சிகளுக்கு எதிரான போராக உருவெடுத்துள்ளது. எனவே சகலதுறை சார்ந்த தளங்களில் நின்று எங்களுடைய விடுதலைக் கெதிரானவற்றை எதிர்த்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதில் கலைஞர்கள் எழுத்தாளர்கள் என்பவர்களும் தங்களது பண்பாட்டு எழுத்துத்துறைத் தளங்களில் இருந்தும் விடுதலை சார்ந்து எழுதப்பட வேண்டிய கலை இலக்கியங்களை முன் எடுப்பாக நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திலேயே உள்ளனர்.

உக்கிரமான போராட்டத்திற்கான மனோநிலைக்குரிய சூட்டை தனது படைப்புக்களில் தக்க வைத்துக் கொண்டிருக்கும் அதே சமயம், ஒரு பெரிய புயல் அடித்துப் போகின்றபோது பிய்த்து எறியப்படும் மலர்களுக்காக குரல் கொடுக்கும் மெல் இதயம் கொண்டவனாகவுமே ஒரு கலைஞன் எப்போதும் இருப்பான். இதனால் இந்தப் போரின் இன்னொரு முகமாக அது சக மனிதர்கள் மீது விதைத்து விட்டுச் செல்லும் சோகங்களையும், துயரங்களையும், இடப்பெயர்வின் அவலங்களையும் தன்னுடைய பொருளாக மாற்றி ஒலிக்க வேண்டிய கடமை ஒன்றும் எங்களுக்கு இருக்கிறது' என்று சொல்லும் கவிஞர் சு.வில்வரத்தினம் ஈழத்து கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்.எழுபதுகளில் முற்பகுதியில் எழுதத் தொடங்கிய இவரது கவிதைக்களம் இன்றுவரை விரிகிறது. தமிழ் இனி உலகத் தமிழ் அரங்கில் பங்குபற்ற தமிழகம் வந்த அக்கவிஞருடனான நேர்காணலில் இருந்து.

> **எங்களுடைய தமிழ்த் தேசியம் என்பது நாங்களாக விரும்பி வடிவமைத்துக் கொண்ட ஒரு தேசியமல்ல.**

**'தமிழ் இனி - 2000 என்ற உலகத்தமிழ் இலக்கிய அரங்கில் நீங்கள் கலந்து கொள்வதற்கான சூழல் எப்படி உருவாகியது என்பதில் இருந்து நேர்காணலை ஆரம்பிக்கலாமே?**

காலச்சுவடு, ஆறாம் திணை என்கிற இணையப் பத்திரிகையுடன் சேர்ந்து சென்னையில், தமிழ் இனி இரண்டாயிரம் என்ற ஆய்வு மாநாட்டை நடத்த இருப்பதாக சரிநிகர் ஆசிரிய பீடத்திலிருந்து தொலைபேசியினூடாக எனக்கு அழைப்புக் கிடைத்தது. ஏற்கனவே திருகோணமலையில் 'கூடல்' என்கிற இலக்கிய அமைப்பினூடாக சரி நிகர் பத்திரிகையினதும் புலம் பெயர் ந்த நண்பர்கள் பத்மநாப ஐயர், மு.நித்தியானந்தன் போன்றவர்களினதும் உதவியுடன் கடந்த நூற்றாண்டின் ஈழத்துத்தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு முழுமையான ஆய்வை வரைமுறையாகச் செய்ய வேண்டும் என்ற சிந்தனையை நாங்கள் கொண்டிருந்தோம். இதற்கான முன் வரைவு ஒன்றைக் காலச்சுவடு பத்திரிகைக்குக்கூட பத்மநாப ஐயர் அனுப்பி வைத்திருக்கிறார். ஆனால் நாங்கள் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும், கொழும்பிலுமாகச் சிதைந்துபோய் வாழ்கின்ற நிலையில் திட்டமிட்டபடி ஒருங்கு கூடி அதனை முழுமையுற்றதாகச் செய்ய முடியாத ஒரு சூழல் தான் எங்களுக்கு இருந்தது. சரிநிகர் ஆசிரிய பீடத்திலிருந்து அழைப்பு வந்தபோது எங்களுடைய வற்றைச் சென்னையில் பகிர்ந்து கொள்ளலாம். எங்களுடைய ஆவலை இதனூடாக நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கருதித்தான் மறுத்லிக்காமல் ஒத்துக் கொண்டோம். இந்தப் பின்னணியிலேயே நான் கலந்து கொண்டு கடந்த நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ்த் தேசிய இலக்கியம் என்ற என்னுடைய ஆய்வுக் கட்டுரையை வாசித்தேன்.

**ஈழத்தில் 'தமிழ்த் தேசியம்' உங்களுடைய புரிதல் எப்படி இருக்கிறது?**

எங்களுடைய தமிழ்த் தேசியம் என்பது நாங்களாக விரும்பி வடிவமைத்துக் கொண்ட ஒரு தேசியமல்ல. பெரும் தேசியவாதத்தினுடைய சிங்களப் பேரினவாதத்தினுடைய ஒடுக்குமுறைகள் சிறுபான்மையினரான எங்களுடைய நிலத்தைப் பறித்தெடுக்கின்ற முயற்சிகளாக எங்களைப் பாதுகாக்கின்ற பொழுது அதற்கெதிராக நாங்கள் போராடுவதற்காக நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலின் ஒரு எதிர்ப்பு வடிவம் தான் எங்களுடைய தமிழ் தேசியம் என்பதாகும்.

**உங்களுடைய விருப்பின் பேரிலா ஆய்வுக் கட்டுரைக்கான கருப்பொருளாகத் தமிழ்த் தேசியத்தை மையப்படுத்தினீர்கள்?**

'ஈழத்தில் தமிழ்த் தேசிய இலக்கியம்' பற்றிச் செய்யலாம் என்று நான் சொன்னபோது சரிநிகர் ஆசிரியர் பீடமும் அதை ஏற்றுக் கொண்டது. என்னுடைய கட்டுரை அமர்வின் போது மட்டுமல்லாமல்ஒரு அமர்வுக்கு நாம் நடத்துனராக கடமை ஆற்றிய போதும் சரி, அல்லது ஏனைய கலந்துரையாடல்களில் நான் பங்குபற்றிக் கொண்ட போதும் சரி என்னுடைய தேசிய போராட்டத்தை விவரிக்கக்கூடிய வகையிலும் அந்தச் சிந்தனையின் தொடர் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையிலுமே இயன்றவரை என்னுடைய பங்களிப்பை ஆற்றியுள்ளேன். ஆனால் அவ்வாறான குரல்களை நான் எழுப்பியபோது கூடியிருந்த 'தமிழ்இனி' அமைப்பாளர்களுடைய விருப்புக்கு உகந்ததாக இருந்திருக்கக்கூடியதா என்பதை என்னால் முழுவதுமாக அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. அவை சம்மந்தமான [illegible]நப்திகள் எதனையும் அவர்கள் என்னிடம் வெளியிட்ட வர்கள் அல்லர்.

(15ம் பக்கம் பார்க்க....)

---

# பாடசாலை போகாத பாவலர்கள் மடாக்கர் கந்தவனம் பற்றிய குறிப்புக்கள்

பாடசாலை போகாத பாவலர்கள் பலர் பரவி வாழ்ந்த மண். அன்றைய மட்டக்களப்பு மண். இங்கு தமிழர்கள் மட்டுமல்ல, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமியப் புலவர்களும் இருந்துள்ளார்கள். புகழ்பெற்ற கிராமியக் கவிகள் இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இக்கவிஞர்களுக் குள்ளே, கிராமங்களில் நடக்கும் சில நிகழ்ச்சிகளைக் கண்டவுடனேயே உணர்ச்சிவசப்பட்டு பாடிய வரகவிகளும் பலர் வாழ்ந்துள்ளார்கள். இவர்களில் ஒருவரைப் பற்றிக் கூற விரும்புகின்றேன்.

மட்டக்களப்புக்குத் தெற்கே மூன்றரை மைல் தொலைவிலுள்ள ஆரையம்பதிக் கிராமமே இவரது பிறந்த ஊர். பெரிய கந்தவனம். ஒரு நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர். இவருடைய மகன்மார்களான கதிரேசப்பிள்ளை, கோணமலை என்போர் இப்போதும் இருக்கிறார்கள். அழுத்தமான இறுக்கமான இவரின் குரல் ஒலியைக் கொண்டு இவரை மடாக்கர் கந்தவனம் என்றே குறிப்பிடுவார்கள். கந்தவனம் புலவரால் பாடப்பட்ட இவரது பாடல்களில் ஒருசில பாடல்களே கிடைத்துள்ளன. எழுதாக் கிளவிகளாக செவி வழியாகச் சேமித்து வைக்கப்பட்ட இப்பாடல்களைப் பாடிய புலவர் பாடசாலைக்கே போகவில்லை யென்பதை நினைக்கும் போது பெருமையாகவே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நொத்தாசியார் ஒருவர், மட்டக்களப்பிலிருந்து வந்து நாவற்குடா, காத்தான்குடி, ஆரையம்பதி போன்ற கிராமங்களுக்கு வந்து காணி உறுதிகள் எழுதிக்கொண்டு போவது வழக்கம். இவர் வேகமாக மோட்டார் சைக்கிளில் வருவார். இந்த வேகம் காரணமாக இவரை வௌவால் நொத்தாசியார் என்றே அழைப்பார்கள். உண்மையான இயற்பெயர் தெரியாது. ஒரு நாள் இவர் வேகமாக வரும்போது ஒரு கிழவி மீது மோதியதால் கிழவிக்குப் பலமான காயம் ஏற்பட்டு விட்டது. இதைக் கண்ட ஊர் மக்கள் பலர் திரண்டு வந்து அடித்தார்கள். அவர் உதவிக்கு ஓடி ஒரு கடைக்குள் புகுந்தார். அங்கேயும் புகுந்து

**மூனாக்கானா**

அடித்தார்கள். இதைக்கண்ட கந்தவனம் புலவர் உணர்ச்சிவசப்பட்டுத் திடீரெனப் பாடத் தொடங்கினார். பாடலின் முழு வரிகளும் தெரியவில்லை. ஞாபகத்தில் வைத்திருந்த சிலரிடம் கேட்டபோது கூறியதே பின்வரும் அடிகளாகும்.

**கூனென்ற கிழவியின் முதுகிலே-**
**வௌவால்**
**குறுக்காலே ஓட்டினான் வைசிக்கிள்**
**நானென்று நீயென்று வந்துமே -**
**சனம்**
**நல்லாகப் போட்டு அடித்தார்கள்**

**சடசட சடசட என்றுமே வௌவால்**
**சாய்ந்தானே கடயின் கீழ் பலகையில்**
**அடிபுடி அடிபுடி என்றுமே - ஆக்கள்**
**அம்புட்ட கம்போடு வந்தார்கள்**

படியாத புலவராக இருந்தாலும், எதுகை, மோனை, சந்தங்களெல்லாம் அழகாக அமைந்துள்ளன. நேரே சண்டையைப் பார்ப்பது போன்ற ஒரு காட்சியை புலவர் நமக்குச் சிறப்பாகப் படம் பிடித்துத் தந்துள்ளார்.


அடுத்து இதே போன்று படிக்காத மேதையின் இன்னுமொரு பாடலையும் பார்ப்போம். இந்தப் பாடலையும் கந்தவனம் புலவர் தான் பாடினாரா? இல்லை வேறு யாராவது பாடினார்களா, என்பதை அறியமுடியாமல் இருக்கிறது. இப்பாடல், ஒரு பாடசாலையில் படிப்பித்த ஆசிரியர்களின் இயற் பெயரையும், பட்டப் பெயர்களையும். கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பாடலைப் பாருங்கள்.

**கூனர் குறுடர் குசாலுள்ள**
**ராமலிங்கம்**
**தேனர் மறவர் சின்னத்தம்பி**
**கண்சிமிட்டி**

இதிலே, கூனர் என்பது வயிரமுத்து வாத்தியாரைக் குறிப்பிடுகிறது. இவர் நல்ல உயரமானவராக இருந்ததால் சற்றுக் கூனிக் கொண்டே நடப்பார். இவரது உயரத்தைக் கொண்டு இவரை வாணந் தட்டி வயிரமுத்து வாத்தியார் என்றும் குறிப்பிடுவார்கள். குறுடர் என்பது மயில்வாகனம் வாத்தியார். இவரது ஒரு கண் வித்தியாசமானது. இவர் பின்னர் இரு கண்களும் தெரியாதவராகி மற்றவர்களின் துணைகொண்டு நடமாடியதை நான் நேரில் பார்த்திருக்கின்றேன். குசாலுள்ள ராமலிங்கம் என்பது, யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு படிப்பிக்க வந்தவர். இவர் மேலங்கி கரை மடித்த சால்வை என்பன அணிந்து வருவதால் குசாலுள்ள இராமலிங்கம் என்று பாடலில் கூறப்பட்டுள்ளது. சதனா, மறவன் என்பவர்கள் யாரென்பது திட்டவட்டமாகத் தெரியாது. குசால் என்னும் சொல் மட்டக்களப்புப் பேச்சு வழக்கில் சோக்' கான பேர் வழி என்பதைக் குறிக்கும். தேனா மறவர் என்பது பட்டப்பெயரா? இயற்பெயரா? என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. சின்னத்தம்பி என்பது, ஒரு காலத்தில் ஆரையம்பதி கந்தசுவாமி கோவில் வண்ணக்கராக இருந்த அமரர் சி.ஏரம்பமூர்த்தியின் தந்தையார். இவரை சின்ன வாத்தியார் என்றே அழைப்பார்கள். கடைசியாக உள்ள கண்சிமிட்டி என்பது கணபதிப்பிள்ளை வாத்தியாரையே குறிக்கும். இவர் அடிக்கடி கண்ணை மூடி விரிக்கும் பழக்கமுள்ளவர். இவர் பின்னர் பிறப்பு, இறப்பு, திருமணம் இவற்றைப் பதிவு செய்யும் தோம்பதோராகவும் இருந்தவர்.

இப்படி இன்னும் பல புலவர்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் விபரங்கள் தெரியவில்லை. எதையும் எழுதி ஆவணமாக வைக்காத தவறினாலே நாம் பல புலவர்களையும், அவர்களது ஆக்கங்களையும் தொலைத்துவிட்டு நிற்கின்றோம்.

# கொஞ்சம் சிரிங்க......



**வி**ளையாடுவதும் சிரிப்பதும் வெறு மனே மன மகிழ்ச்சியினை ஏற்படுத்தும் நிகழ்வுகள் மட்டுமல்ல. இச் செயற்பாடுகள் மனித உடலின் சமநிலையைப் பேணுவதிலும் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாகத் திகழ்கின்றது.

இதற்கான விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் பலவுள்ளன. இவற்றை "ஹெல்த் அன்ட் ஹியூமர் ஜெனல்" எனும் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. எலும்புகளும் அதனைச் சார்ந்த தசைகளின் தொகுதிகளும், மத்திய நரம்புத் தொகுதியும் மற்றும் சுவாசத்தொகுதி, இதயத் தசைத் தொகுதி, நோயெதிர்ப்பு சம்பந்தமான இயக்கங்கள் அனைத்தும் நாம் மனம் திறந்து சிரிக்கும் வேளைகளில் மிகவும் சிறந்த முறையில் செயற்படுவதனால் உடம்பும், மனமும் ஒருசேர குதூகலத்தை அனுபவிக்கின்றது என்கிறது இச் சஞ்சிகை.

நாம் சிரிக்கும் போது நமது உடல் இரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் அளவை அதிகரித்து, உடம்பிலுள்ள சளியை அகற்றி நமது ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கின்றதோடு உடலை மிகவும் விளிப்புணர்ச்சி நிலையில் வைத்திருக்க உதவுகிறது.



இதனை வேறு வகையில் சொல்வதென்றால், "நாளும் நாம் சிரித்தால் வைத்தியசாலை தேவையில்லை" எனவும் கூறலாம். இவைகளைத் தவிரவும் சிரிப்பால் நாம் மேலதிகமாக பல பாடங்களைப் பெறலாம்.

※ நாம் சிரிக்கும் போது நமது உடலில் இரத்த ஓட்டம் அதிகமாகி மூளை சுறுசுறுப்பாக இயங்குகிறது. இல்லையேல் இரத்த ஓட்டம் மெதுவாகவே நடக்கிறது.

※ சிரிப்பானது அயடீனல் சுரக்கும் போது சுரப்பை அதிகரிக்கும், இச்சுரப்பு அதிகரிப்பால் உட லின் வலுவை அதிகரித்து மன அழுத்தங்களையும் குறைக்கும். நமது மகிழ்சியான சிரிப்பு குறையுமிடத்து அது மனச் சுமைகளை அதிகரித்து இரத்த ஓட்டங்களைக் குறைத்து இதயத்தின் வலுவையும் குறைக்கும்.


※ உடலில் கழிவுகளை உருவாக்கப் பயன்படும் "கொறிஸ்ரோல" எனும் சுரப்பி சுரப்பதை நாம் மகிழ்ச்சியாக சிரிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இச் சுரப்பு குறைவாக சுரப்பதால் இது நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரித்து அத்தொகுதியை மிகவும் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். மேலும் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் செயற்பாட்டை ஒழுங்காகச் செய்யும்.

## வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்.



※ சிரிப்பால் முகத்திலுள்ள தசை நார்கள் சரியான முறையில் சுருங்கி விரிவதனால் முகத் தோற்றம் எப்போதும் புத்துணர்ச்சியுடனும் செழிப்புடனும் காணப்படும்.

※ 15 நிமிட நேரச் சிரிப்பும், மனமகிழ்ச்சியும் 6 தொடக்கம் 8 மணிநேரம் தியானத்தில் ஈடுபடுவதில் கிடைக்கும் பயனுக்குச் சமனான பயனை உடலுக்கு வழங்கும்.



ஏம்பா நாம கடனாகக் குடுத்த பணம் திரும்பி வருமுன்னு நம்பிக்கையில்லைன்னு ஏன் சொல்ற?

பின்ன என்ன. நாட்டுல சமாதானம் வந்ததும் திரும்பத் தருவேன்னு கடிதம் எழுதியிருக்காரே......

※ அம்மா காசு கொடுங்கம்மா
※ ஒரு சதமும் இல்லேப்பா
※ அப்போ சாப்பாடு கொடுங்கம்மா
※ ஒரு சாப்பாடும் இல்லப்பா
※ அப்போ கிழிஞ்ச உடுப்பாவது குடுங்கம்மா
※ அதுவும் இல்லப்பா
※ அப்போ உங்கட வீட்டுக்காரர கூப்பிடுங்கம்மா
※ அவரு எதுக்கு?
※ எங்கூட வந்து அவரும் பிச்சை எடுக்கட்டும். பாவம் நீங்க.



19 வயது பிறந்த நாளைக் கொண்டாடுற நடிகை ஜலஜாஸ்ரீ அவர்களே நீங்கள் உங்கள் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

கலைத் துறையில சுமார் 40 வருடமா எனக்கு ஆதரவு தர்றீங்க தொடர்ந்தும் தரணும்......

# மாதவன்

(9ம் பக்கத் தொடர்ச்சி...)

※ மாதவன் என்றால் மீசை இல்லாத அமுல் பேபி முகம்தான் ஞாபகத்தில் நிற்கிறது. இதை மாற்றும் விதமாய் மீசையுடன் அல்லது தாடி வைத்துக் கொண்டு நடிக்கும் ஐடியா இல்லையா?

இப்போதைக்கு இல்லை. கெட்டப்பை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை. ஏற்படும்போது பார்ப்போம். இப்போது நடிக்கும் படங்களுக்கு மீசை தேவைப்படவில்லை. அதனால் இதே கெட்டப்பில் நடித்துக் கொண்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, எனக்கும் தனிப்பட்ட முறையில் இதுதான் சௌகரியமாக இருக்கிறது. தோழன் என்ற படம் பண்ணுகிறேன். அதில் எனக்கு டூ வீலர் மெக்கானிக் கேரக்டர். அனேகமாக அந்தப் படத்தில் மீசையுடன் நடிக்கும் திட்டம் இருக்கிறது. அந்தப்படம் வந்த பிறகு இப்படிப்பட்ட கேள்விகள் மாறிவிடும் என்று நினைக்கிறேன்.



※ ஹிந்தி டி.வி. சீரியல்களில் நடித்துக் கொண்டிருந்தீர்கள். சினிமாவில் பிஸியான பிறகு டி.வி.க்கு முழுக்குப் போட்டு விட்டீர்களா?

ஆமாம். ஏற்கனவே ஒப்புக்கொண்ட சீரியல்களை முடித் துக் கொடுத்து விட்டேன். இனி புதிதாக எதையும் ஒப்புக் கொள்வதாக இல்லை. டி.வி.யில் நடித்தால் சினிமா மார்க்கெட் பாதிக்கப்படும் என்பதற்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை. டி.வி. சீரியலில் நடித்தால் மெட்ராஸுக்கும் பம்பாய்க்கும் அலைய வேண்டியிருக்கும். இந்த எட்டு மாசத்தில் தொண்ணூற்றி ஐந்து தடவை ஃப்ளைட் ஏறியிருக்கிறேன். இப்படி டிராவல் பண்ணுவதிலேயே பெரும்பாலான நேரம் விரயமாகிவிடுகிறது. இப்போ திருக்கும் பிஸியான சூழ்நிலையில் இப்படி டைம் வேஸ்ட் பண்ண என்னால் முடியாது.

அது மட்டுமல்ல. டி.வி. சீரியலில் நடிப்பதில் இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. இங்கே படத்திற்கு தொடர்ந்து முப்பது நாள் கால்ஷீட் கொடுத் திருப்பேபம். நாம் கொடுத்த டேட்டை வைத்து பிரேக் டவுன் போட்டு ஷெட்யூல் பிளான் பண்ணியிருப்பார்கள். இந்த சூழ்நிலையில் டி.வி. சீரியலில் நடிப்பதாக வைத்துக்கொள்வோம். திடீரென்று இரண்டு நாள் கால்ஷீட் வேணும் என்பார்கள். எப்படி கொடுக்க முடியும்? அதற்கு இரண்டு நாள் கொடுத்தால் இங்கே நம்மால் ஷூட்டிங் பிரேக்காகி விடும். தயாரிப்பாளர்கள் நஷ்டப்படுவார்கள். என்னால் யாரும் நஷ்டப்படக்கூடாது. இதை நினைத்து சீரியலுக்கு டேட் கொடுக்காவிட்டாலும் பிரச்சினைதான். சீரியல் வொர்க் பாதிக்கப்படும். இதையெல்லாம் மனதில் நினைத்துதான் டி.வி.யில் நடிப்பதை நிறுத்திக்கொண்டேன். என்னால் யாருக்கும் பிரச்சினை வரக்கூடாது.

※ ஹிந்தி டி.வி. சீரியல்கள், அலைபாயுதே படத்தின் டப்பிங் மூலம் பிற மொழிகளிலும் நீங்கள் பிரபலம். இந்த பிரபலத்தை வைத்து மற்ற மொழிகளில் நடிக்கும் திட்டம் உண்டா?

இல்லை. அலைபாயுதே படத்தில் நடிப்பதற்கு முன் கன்னட படங்களில் கூட நடித்திருக்கிறேன். இப்போது அந்த ஐடியாவே இல்லை. தமிழில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். இங்கே என்னை நிலை நிறுத்திக்கொண்ட பிறகுதான் மற்ற மொழிகளில் நடிப்பதைப் பற்றி யோசிப்பேன். இப்படியொரு முடிவில் இருப்பதால் நான் இழந்த படங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஹிந்தியிலிருந்து நிறைய ஆஃபர்கள் வந்தன. வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். தமிழிலேயே நடிக்க வேண்டும். அதுவும் செலக்ட் டிவ்வாக நடிக்க வேண்டும். இப்போதைய திட்டம் இது தான்.

※ மணிரத்னத்தின் அடுத்த படத்திலும் நீங்கள்தான் ஹீரோ என்று பத்திரிகைகளில் செய்திகள் அடிபடுகின்றனவே, உண்மையா மாதவன்?

அப்படியொரு செய்தியை நானும் பத்திரிகையில்தான் படித்தேன். மெட்ராஸ் டாக்கீஸ் பேனரில் ஒரு படம் பண்ணுகிறேன். அந்தப் படத்தை டைரக்ட் பண்ணுவது மணி ரத்னம் ஸாரில்லை. அவரது அஸிஸ்டென்ட் அழகம் பெருமாள் டைரக்ட் பண்ணுகிறார். இதுதான் உண்மையே தவிர பத்திரிகையில் வந்த செய்தி உண்மையல்ல. இது மட்டுமல்ல இன்னும் நிறைய செய்திகளை பத்திரிகைகள் இஷ்டத்துக்கு எழுதுகின்றன. மின்னலே படத்தில் எனக்கு ஜோடியாக உலக அழகி யுக்தா முகி நடிப்பதாகவும் எழுதினார்கள். அதைப் படித்தபோது எனக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. காரணம் அவரை நாங்கள் அப்ரோச் பண்ணவே யில்லை. தமிழ் பத்திரிகைக்காரர்களுக்கு எப்படித்தான் இப்படிப்பட்ட கற்பனைகள் வருகிறதோ?

※ உங்களிடம் கதை சொல்ல வருபவர்களிடம் மோசமாக நடந்து கொள்கிறீர்களாமே? திரையுலகில் இப்படியொரு குற்றச்சாட்டு உங்கள் மீது இருக்கிறது.

அப்படியா சொல்கிறார்கள்? நான் மற்ற ஹீரோக்களைப் போல் இல்லை. நாலு வரியில் அவுட்லைனைச் சொல்லிவிட்டு மற்றதை ஷூட்டிங் ஸ்பாட்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று வருபவர்களுக்கு என் எதிர்பார்ப்பு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். என்னைப் பொறுத்தவரை என்னிடம் கதை சொல்ல வருபவர்கள் பக்காவாக வர வேண்டும். படத்தின் முழு ஸ்கிரிப்ட்டும் எழுத்தில் இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு ஏனோதானோவென்று வந்தால் என்ன அர்த்தம்? அவர்களுக்கு நான் மோசமானவனாகத்தான் தெரிவேன். அது பற்றி எனக்குக் கவலையில்லை.

※ கதை விஷயத்திலும் நீங்கள் அதிகம் தலையிடுவதாக ஒரு பேச்சு இருக்கிறது. வளர்ந்து வரும் நிலையில் ஏன் இப்படி பெயரைக் கெடுத்துக் கொள்கிறீர்கள் மாதவன்?

நான் நடிக்கும் படங்கள் வித்தியாசமாக இருக்க வேண்டும். அதற்காக என்னால் முடிந்த அளவுக்கு ஸ்கிரிப்ட்டிலும் கவனம் செலுத்துகிறேன். இது தப்பா? படத்திற்கு ஸ்கிரிப்ட்தான் முக்கியம். அதை நான் உணர்ந்திருப்பதால் ஸ்கிரிப்ட் பக்காவாக வரும் வரை நான் இன் வால்வ் ஆகிறேன். இதைப்போய் தலையீடு என்று சொன்னால் என்ன அர்த்தம்? என்னுடன் வொர்க் பண்ணும் யாரும் இப்படி ஃபீல் பண்ணுவதில்லை. அது எனக்கு நன்றாகவே தெரியும். என் கால்ஷீட் கிடைக்காதவர்கள் இப்படியெல்லாம் தப்புத்தப்பான செய்திகளை கிளப்பி விடுகிறார்கள். ஐ டோன்ட் கேர்.

சந்திப்பு:- ஜெ.பிஸ்மி




# "நான் நடிக்கும் படங்கள் வித்தியாசமாக இருக்க வேண்டும்"

தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் இருப்ப தாக நினைத்துக் கொண்டிருக்கும் நடிகர்கள் மத்தியில் சற்று வித்தியாசமாகத் தெரிகிறார் மாதவன். மாபெரும் வெற்றிப் படத்தில் நடித்த நடிகர் என்ற பந்தா இல்லை. நம் பக்கத்து வீட்டுப் பைய னைப் போல் எளிமையாக இருக்கிறார். படிப்பி டிப்பு தளத்தில் படு ஜோவியல் அணுகு முறை. எல் லோரிடமும் சகஜமாக பழகிக்கொண்டு சூழ் நிலை யை கலகலப்பாக்கிக் கொண்டிருக்கிறார். சுருக்க மாக சொன்னால் மாதவன் ஒரு விளையாட்டுப் பிள்ளை.

**இனிப் பேட்டி......**

❁ நடிகர் என்ற நினைப்பு இல்லாமல் இயல்பாக இருக்கிறீர்களே... இது உங்கள் குணமா? அல்லது சினிமாவில் ஆரம்பநிலை என்பதால் அடக்கி வாசிக்கிறீர்களா மாதவன்?



என் குணமே இது தான். சினிமா வுக்கு வந்ததால் என் கேரக்டர் கொஞ்சமும் மாற வில்லை. மாற வும் மாறாது. நான் நானாகத் தான் இருப்பேன். யாருக்காகவும், எதற்காகவும் என் னை மாற்றிக் கொள்ள மாட் டேன். அப்படி மாற்றிக் கொண் டால் வாழ்க்கை யிலும் நான் நடிப் பதாகி விடும். அதை ஒரு போ தும் செய்ய மாட் டேன்.

❁ அலைபாயுதே வெளியான பிறகு நீங்கள் நிறைய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருப்பதாக செய் திகள் அடிபட்டன. ஆனால் இரண்டு படங்களில் மட் டுமே நடித்துக் கொண்டிருப்பது போல் தெரிகி றதே?

## மாதவன்

அலைபாயுதேவுக்குப் பிறகு என்னைத் தேடி வந்த படங் கள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தப் படங்களையெல்லாம் கேள்வி கேட்காமல் நான் ஒப்புக் கொண்டிருந்தால் இந்




நேரம் என் கையில் எழுபத்திநாலு படங்கள் இருந் திருக்கும். யெஸ்! அலைபாயுதே ரிலீஸுக்குப் பிறகு எழு பத்திநாலு படங்கள் என்னைத் தேடி வந்தன. இதில் என்ன வேடிக்கை என்றால் அந்த எழுபத்தி நான்கில் அறுபத்தி மூன்று படங்களின் கதை அலைபாயுதே மாதிரியே இருந் தது. அவுட்லைனைக் கேட்டதுமே. ஸாரி என்று அவர் களைத் திருப்பி அனுப்பிவிட்டேன். இப்போது நான் நடித் துக் கொண்டிருப்பது மின்னலே, என்னவளே என்ற இர ண்டு படங்கள் மட்டுமே. அடுத்து டும் டும் டும், தோழன் மற்றும் கே. பாலசந்தர் டைரக்‌ஷனில் ஒருபடம் என மூன்று படங்களில் நடிக்க ஒத்துக் கொண்டிருக்கிறேன். இப்போதைக்கு இவ்வளவுதான் என் கமிட்மென்ட்ஸ்.

❁ சூப்பர்குட் ஃபிலிம்ஸ், லட்சுமி மூவி மேக்கர்ஸ், ஆஸ்கார் ஃபிலிம்ஸ் பேனர்களில் நீங்கள் நடிப்ப தாக வந்த செய்திகள்?

அதெல்லாம் வெறும் செய்திகள்தான். இந்த நிமிஷம் வரை கமிட் பண்ணவில்லை. கால்ஷீட் கேட்டிருக்கிறார் கள். பேசிக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான்.



அடுத்த வாரம் திவ்வியா உன்னியின் பேட்டி இடம் பெறும்.

❁ மின்னலே, என்னவளே என்ற பெயர்களைப் பார்த் தால் அவை இரண்டும் காதல் படங்கள் போல் தெரிகிறதே? தொடர்ந்து. காதல் கதைகளில் நடித் தால் ரசிகர்களுக்கு சலிப்பு வந்துவிடாதா?

வராது என்று நினைக்கிறேன். காரணம் லவ் சப்ஜெக்ட் என்பது அடிப்படையாக இருந்தாலும் மற்ற விஷயங்கள் ஒவ்வொரு படத்துக்கும் வித்தியாசமாகவே இருக்கும். உதாரணமாக பேக் ட்ராப், ஸ்க்ரீன் பிளே, என்னுடைய கேரக்டர், பிக்சரைசேஷன் இவையெல்லாம் படத்துக்குப் படம் வித்தியரசப்படும்போது ரசிகர்களுக்கும் வித் தியாசமான விருந்தாகவே இருக்கும். தவிர இப்போது எனக்கு லவ் சப்ஜெக்ட்தான் சூட்டாகும். வித்தியாசமாக நடிக்கிறேன் என்ற பெயரில் பொருந்தாத கேரக்டர்களை பண்ணினால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்ற சந்தேகமும் இருக்கிறது. ஸோ... இப்போதைக்கு லவ் சப்ஜெக்ட்டைத் தாண்டி யோசிக்கும் நிலையில் நான் இல்லை.

(8ம் பக்கம் பார்க்க......)

# எங்கள் இருவருக்கிடையிலும் எந்த ரகசியமும் இருக்கக்கூடாது

**சே**ர்ந்து கலந்திருப்பதற்கான அவருடைய பசி தீர்க்க முடியாதிருந்தது. அந்தப் பசியே எனக்கு ஆகத்தேவை யானதாகவும் இருந்தது.

ஒருவகையில் இருவருமே மற்றவரில் ஒரு புரட்சியை விதைத்தோம். ஒருவருக்கு மற்றவரை முற்றிலுமாகத் திறந்து வைத்தோம். உடல் ரீதியாக மட்டுமல்ல. பாலியல் ரீதியாக மட்டுமல்ல. ஏதோ ஒரு ரகசியத்தால் இணைக்கப்பட்ட மனிதர் களைப் போல நாங்கள் கட்டுண்டு கிடந்தோம்.

ஒரு குறுகிய காலத்துக்குப் பின் நான் அவருடைய பொசுங்கும் பொறாமையுணர்வ எதிர்கொள்ள நேரிட்டது. வரையறையற்ற - வன்ம மிக்க பொறாமை. முன்னெப்போதும் நான் சந்தித்திராத - அனுபவித்திராத பொறாமைத் தீ.

இப்போது எல்லாக் கதவுகளும் கம்பிகளிடப்பட்டு மூடப்பட்டுவிட்டன. நண்பர்கள்-குடும்பங்கள்-நினைவுகள் கூட- எங்கள் உறவுக்குப் பெரும் மிரட்டலாகி நின்றன.

அவருடைய பொறாமையுணர்வு எனது சுதந்திரத்துக்கு எல்லைகளை நிர்ணயித்தபோது நான் அவருடைய பிரதே

## தினக்கதிர் சினிமா

சத்துக்குள் அத்துமீறி நுழைந்தேன். அதே போன்ற எல் லைகளை அவருக்கு வரையறுக்க வேண்டுமென்பதற்காக. அவரை எவ்வளவு தூரம் என் கட்டுக்குள் வைத்திருக்க முடிந்ததோ அவ்வளவோ நான் பாதுகாப்பாக இருப்பதாக உணரத்துவங்கினேன்.

எங்கள் இருவருக்கிடையிலும் எந்த ரகசியமும் இருக்கக்கூடாது எனவிரும்பி இருவருமே ஏங்கினோம். ஒருவர் மற்றவரிடம் சரணாகதியடையும் தைரியம் வரவேண்டும் என ஆசைப்பட்டோம். ஆனால் கடைசியாக இந்த இரண்டும் உண் மையிலேயே நடந்தேறியபோது நாங்கள் ஒன்றாக வாழ்ந்திருந்த காலம் முடிந்து போயிருந்தது. அப்படி முடிந்து போனதற்கு காரணமாகவும் கூட அந்த இரண்டுமே இருந்திருக்கலாம்.

எங்கள் தேவைகள் திருப்தி செய்ய முடியாதவையாக இருந்தன. அதுவே எங்கள் நகரமானது. எங்கள் நாடகமானது.

மகிழ்வோ துயரமோ பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு அளித்ததாகவே இருந்தது. எங்களை விட்டு வெளியே எதுவும் இல்லாதிருந்தது.

மெல்ல மெல்ல இதுவே முறிவுக்கான காரணமாகி யது. நாங்கள் ஒருவரை மற்றவர் மிகவும் ஒத்திருந்தோம். தன்னைப் பற்றி அறிந் [illegible]வற்றையெல்லாம் அவர் என்னில் காணத்துவங்கியிருந்த[illegible] ஒரு கண்ணாடியில் பார்ப்பது போல

நான் ஒரு பெண். அவரைவிட வயதில் இளையவள் அவர் அறியாத பல வழிகளில் அவரைப்போல இல்லாதவள் என்ப தையெல்லாம் மறந்துவிட்டு அவர் என்னில் அவரைக் காணத் தலைப்பட்டார்.

தன்னுடைய சொந்தக் கோபத்தைத் தன்னுடைய எளிதில் இரையாகும் **(Vulnerable)** தன்மையை என்னில் கண்டு உணர்ந்தார். அது அவர்மீது எதிரொளித்த போது



அவர் குணப்படவும் துவங்கினார். ஆனால் குணப்பட்ட போதும் ஒரு கண்ணாடியைப் போல, அவருக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறவளாக எப்போதும் நான் அங்கிருந்தேன்.

நான் அவருடையவளாக இருக்கவே விரும்பினேன். நான் மாற வேண்டும் என அவர் விரும்பியிருந்தால் கூட நான் எதுவேண்டுமானாலும் செய்திருப்பேன். இருவரும் சேர்ந்தே மாறுவதும். வளர்வதும் சாத்தியமானதுதான். ஆனால் கண்ணாடி மிகவும். தெளிவாகவும் துல்லியமாகவும் இருக்கும் போது ஒருவர் தான் எப்படி இருக்கிறோம் என்பதை மட்டும் பார்க்க மாட்டார்கள். எதுவாக தான் இனியும் இருக்க விரும்பவில் லையோ அதையும் அக் கண்ணாடி நினைவுப்படுத்துவதால் அந்த மற்றவரைவிட்டு விலகி ஓடவே விரும்புவார்.

இதுதான் நடந்தது.

❄❄❄❄

எந்த ஊருக்குச் செல்வதானாலும் லிவ் உல்மன்தான் முதலில் செல்ல வேண்டும். இங்மர்பெர்க்மான் மறுநாள் தான் கிளம் பிவருவார். இது எழுதப்படாத விதி. முதல்நாள் செல்லும் லிவ் தங்குமிடத்தின் சூழலை ஒழுங்கு செய்து படுக்கையறை

## லிவ் உல்மன்

படிப்பறை என எல்லாவற்றையும் சீர்படுத்தி வீட்டுச் சூழலை **(homely)** பெர்க்மனுக்காகத் தயார் செய்துவைக்க வேண்டும். அவர் தன்னுடைய மனநிலைகெடாமல் எங்கு போனாலும் வேலை செய்வதற்காக.

எத்தனை காலம் நான் உனக்குப் பணிவிடை செய் யும் தாதியாக இருக்கமுடியும் என்கிற கோபம் கடைசியில் வெடித்தது.

நோராவைப் போலவே லிவ் வெளியேறினார்.

❄❄❄❄

ஒன்றை நான் புரிந்து கொண்டேன். கணவன் என்பவன் ஒரு பெண்ணுக்கு அலிபி போலத்தான்.

அவன் முட்டாளாகவோ வயசாளியாகவோ சதை பெருத்த தடியனாகவோ இருக்கலாம். ஆனால் அவன் தன் மனைவியின் சதைத்த உடம்பு பற்றியும் மாதவிலக்குப் பற்றியும் பேசி இரக்கத்தை சம்பாதிக்க முடியும்.

**(இன்னும் வரும்)**

பயிற்சிப்பட்டறை
சிறுகதைத் தொடர்-5

# பச்சோந்தி

மொழிபெயர்ப்புச் சிறுகதை

**அன்ரன் செக்கோவ்**
( ரஷ்ய எழுத்தாளர்)

**போ**லீஸ் இன்ஸ்பெக்டர் அச்சுமேலவ் புதிய மேல் கோட்டு அணிந்து கையில் ஒரு காகிதக் கட் டுடன் சந்தையின் குறுக்கே சென்றார். செம் பட்டைத் தலைப் போலீஸ்காரர் பறிமுதல் செய்யப்பட்ட நாவப்பழக் கூடையைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னால் நடந்தார். சுற்றிலும் நிசப்தமாயிருந்தது..... சந்தையில் எந்த ஆத்மாவும் இல்லை....... கடைகள், மதுவிடுதிகள் இவற்றின் திறந்த வாயில்கள் பசியால் வாடி விரியப் பிளந்த வாய்களைப் போல் சோகமாய்



ஆண்டவன் உலகை நோக்கின. இவற்றின் அருகே பிச்சைக் காரர்களையுங் கூடயாரையும் காண முடியவில்லை.

திடுமென எழுந்த கூக்குரல் அச்சுமேலவின் காதில் விழுந்தது. "கடிக்கவா செய்கிறாய்! அசட்டு நாயே! பசங்களே, விடாதீங்க! பிடியுங்கள்! இந்தக் காலத்தில் கடிக்க அனுமதி இல்லை. பிடியுங்கள் அதை! ஊய்!

நாய் ஊளையிடும் சப்தம் கேட்டது. அச்சுமே லவ் அந்தச் சப்தம் எழுந்த திசையில் திரும்பிப் பார்த்தார். அவர் கண்ணுற்றது இது தான்: வணிகர் பிச்சூகினது மரவாடியிலிருந்து மூன்று கால்களில் ஒரு நாய் வெளியே ஓடி வந்தது. கஞ்சி போட்ட பூச் சட்டையும் பொத்தான் மாட்டாப்படாத அரைக் கோட்டும் அணிந்தவர் அதை விரட்டிக் கொண்டு வந்தார். முன் பக்கமாய் முழு உடலையும் கவிழ்த்துக் கொண்டு ஓடி அவர், அந்த நாயின் பின்னங் கால்களைப் பிடித்துக் கொண்டு விட்டார். மீண்டும் ஊளையிடும் சப்தம், திரும்பவும் "பிடி விடாதே! " என்ற கூக்குரல். தூக்கம் கலையாத முகங்கள் கடைகளிலிருந்து எட்டிப் பார்த்தன. தரைக்கடியிலிருந்து உதித்தெழுந்தது போல் நொடிப் பொழுதுக்குள் மரவாடிக்கு முன்னால் கூட்டம் கூடிவிட்டது.

"மாண்புடையீர், கல்வரம் மாதிரி அல்லவா இருக்கிறது!" என்றார் போலீஸ்காரர்.

அச்சுமேலவ் உடனே திரும்பி அந்தக் கூட்டத்திடம் நடந்தார். மரவாடியின் வாயிலுக்கு எதிரே வந்ததும், பொத்தான் மாட்டப்படாத அரைக் கோட்டு அணிந்த மேற்கூறிய ஆள் வலக் கையை உயர்த்தி இரத்தம் கசியும் தனது விரலைக் கூட்டத்தினருக்குக் காட்டியவாறு நிற்கக் கண்டார். "சனியனே, உன்னை என்ன செய்கிறேன், பார்!" இந்த வாசகம் குடிமயக்கம் தெளியாத அந்த ஆளின் முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அவர் உயர்த்திக் காட்டிய விரல் வெற்றிக்கொடி போல் காட்சியளித்தது. அவர் பொற்கொல்லர் ஹுரியூக்கின் என்பது அச்சுமேலவுக்குத் தெரிந்தது. கூட்டத்தின் நடு மையத்தில் அந்தக் குற்றவாளி நாய் முன்னங்கால்களை அகல விரித்து, அங்கமெல்லாம் வெலவெலத்து நடுங்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தது. கூரிய மூக்கும் முதுகில் மஞ்சள் புள்ளியும் கொண்ட வெண்ணிற பர்சோய் நாய்க்குட்டி அது. கலங்கிய அதன் கண்களில் சோகமும் பீதியும் குடி கொண்டிருந்தன.

"என்ன இதெல்லாம்? " என்று கேட்டு கூட்டத்தை இடித்து விலக்கிக் கொண்டு அச்சுமேலவ் உள்ளே நுழைந்தார். "இங்கே என்ன செய்கிறீர்கள்? நீ ஏன் விரலை உயர்த்திக் காட்டுகிறாய்? கூக்குரலிட்டது யார்?"

"மாண்புடையீர், எந்த வம்புமின்றி நடந்து வந்து கொண்டிருந்தேன்" என்று, மூடிய கைக்குள் இருமியபடி ஹுரியூக்கின் பதில் கூற முற்பட்டான். "இங்கே மீத்ரி மீத்ரிச்சிடம் மரம் சம்பந்தமாய் எனக்குக் கொஞ்சம் வேலை இருந்தது. எக் காரணமுமின்றித் திடீரென என் விரலைக் கடித்துவிட்டது இந்த எழவு. என்னை மன்னிக்கணும்...... நான் வேலை செய்கிறவன்... என்னுடைய வேலை நுட்பநயம் வாய்ந்தது. இன்னும் ஒரு வாரத்துக்கு என்னால் விரலை அசைக்க முடியாது போலிருக்கு.. எனக்கு இவர்கள் இழப்பீடு தரும்படிச் செய்யணும் நீங்கள். மாண்புடையீர், மூர்க்கப் பிராணிகள் புரியும் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு வாழ வேண்டுமென எந்தச் சட்டமும் கூறவில்லை. இவையெல்லாம் கடிக்க ஆரம்பித்தால் வாழ்க்கை நரக வேதனையாகிவிடும்......"

"ஊம்.... சரிதான், சரிதான்" என்று கனைத்துக் கொண்டு புருவங்களை நெளித்தவாறு கடுமையான குரலில் பேசினார் அச்சுமேலவ். "சரிதான், சரிதான் .....யாருடைய நாய் இது? இந்த விவகாரத்தை நான் சும்மா விடப்போவதில்லை. நாய்களை ஓடித் திரியும்படி விடுவோருக்குச் சரியானபடி பாடம் கற்பிக்கப்போகிறேன். ஒழுங்கு விதிகளுக்குப் பணிந்து நடக்கவிரும்பாதோர் குறித்து இனி சும்மாயிருக்கக்கூடாது, நடவடிக்கை எடுத்தாக வேண்டும்! கோக்கிரிப் பசங்கள், சரியானபடி அபராதம் விதிக்கப்படும் இவர்களுக்கு. நாய்களையும் மாடுகளையும் சுற்றித்திரிய விட்டால் என்ன கிடைக்கும் என்று நான் தெரியப்படுத்தப் போகிறேன்! எது என்ன வென்பதைப் புரியப்படுத்தப் போகிறேன்! எல்தீரின்" என்று கூப்பிட்டு போலீஸ்காரரின் பக்கம் திரும்பினார். "இந்த நாய் யாருடையது என்று கண்டு பிடித்து அறிக்கை ஒன்று தயார் செய். உடனே இந்த நாயை ஒழித்துக் கட்டியாக வேண்டும். பைத்தியம் பிடித்த நாயாகத்தான் இருக்கும்..... யாருடையது இது?"

"ஜெனரல் ழிகாலவினுடைய நாயென்று நினைக்கிறேன்" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

"ஜெனரல் ழிகாலவ்! ஓகோ! எல்தீரின், என்னுடைய கோட்டைக் கொஞ்சம் கழற்றிவிடு..... உஸ், வெக்கை தாங்க முடியவில்லையே! மழை பெய்யப் போகிறது. அதனால் தான் புழுங்குகிறது." பிறகு அவர் ஹுரியூக்கின் பக்கம் திரும்பினார்.

"எனக்குப் புரியவில்லை. உன்னை இது கடிக்க நேர்ந்தது எப்படி? உன் விரல் எப்படி அதன் வாய்க்கு எட்டிற்று? இது சின்னஞ்சிறிய நாய், நீ வாட்டசாட்டமான ஆள்! ஆணியில் விரலைக் கீறிக் கொண்டிருப்பாய், பிறகு இழப்பீடு கேட்டு வாங்கலாமென்று உனக்கு எண்ணம் தோன்றியிருக்கிறது. உன்னைப் போன்ற ஆட்களை எனக்குத் தெரியுமே! எமகாதகர்கள் ஆயிற்றே!"

"மாண்புடையீர், புகையும் சிகரெட்டை அதன் மூக்கு நுனியில் வைத்துச் சுட்டு வேடிக்கை பார்த்தார். உடனே அது விழுந்து பிடுங்கிற்று. அது ஒன்றும் அசட்டுப் பிறவியல்லவே! இந்த் ஹுரியூக்கின் எப்பொழுதுமே இப்படித்தான். சேஷ்டை செய்யாமல் இருக்க முடியாது அவரால்!"

"ஒன்றரைக் கண்ணா! உன் புழுகு மூட்டையை அவிழ்க்காதே, நிறுத்து! நீ ஒன்றும் நேரில் பார்க்கவில்லை., பிறகு ஏன் இப்படிப் புழுகுகிறாய்? மாண்புமிகு இன்ஸ்பெக்டர் விவரம் அறியாதவரல்ல: பொய் பேசுகிறவர் யார் என்று அவருக்குத் தெரியும். நான் சொல்வது பொய்யானால் நீதிபதி என்னை விசாரணை செய்யட்டும்! சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது..... இன்று எல்லாரும் சரிநிகர் சமானம். உனக்க இதைச் சொல்கிறேன் நான், போலீசில் எனக்கு யாரும் இல்லாமற் போய் விடவில்லை, சகோதரர் ஒருவர் இருக்கிறார்....."

"போதும் நிறுத்து!"

"இல்லை, இது ஜெனரலுடைய நாயல்ல" என்றார் போலீஸ்காரர், அழுத்தம் திருத்தமாய், இல்லை. அவரிடம் இருப்பவை யாவும் மோப்ப நாய்கள்."

"நிச்சயம்தானா?"

"சந்தேகமில்லை. மாண்புடையீர்."

"நீ சொல்வது சரிதான்! ஜெனரலுடைய நாய்கள் யாவும் விலை உயர்ந்தவை. ஜாதி நாய்கள். ஆனால் இதைப் பாரேன்! பார்க்க சகிக்கவில்லை. தெருச் சனியன்! இம் மாதிரியான நாயை யாரும் வீட்டில் வைத்திருப்பார்களா? பித்துப் பிடித்து விட்டதா உனக்கு? இம்மாதிரி நாய் மாஸ்கோவிலோ, பீட்டர்ஸ்பர்கிலோ தென்படுமானால், அதன் கதி என்னவாகும் தெரியுமா? சட்டத்தைப் பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள், அதே நிமிடத்தில் அதற்கு முடிவு ஏற்பட்டுவிடும். ஹுரியூக்கின், நீ கடிபட்டு இழப்புக்கு உள்ளானவன், இந்த விவகாரத்தை நீ இதோடு விட்டுவிடக்கூடாது. தக்கபடி பாடம் கற்பிக்க வேண்டும்! ஆம், உடனே செய்தாக வேண்டும்....."

"ஒரு வேளை ஜெனரலுடைய நாய் தானே என்னமோ" என்று போலீஸ்காரர் வாய்விட்டுச் சிந்திக்கலானார். "யாருடையது என்று அதன் மூஞ்சியிலா எழுதி ஒட்டியிருக்கிறது? அன்று நான் இம்மாதிரியான ஒரு நாய் அவருடைய வீட்டு வெளிமுற்றத்தில் இருக்க கண்டேன்."

"ஜெனர்லுடைய நாய்தான், சந்தேகமே வேண்டாம்" என்று கூட்டத்தினரிடமிருந்து அந்தக் குரல் மீண்டும் ஒலித்தது.

"ஓ! கோட்டை என் மீது மாட்டு, எல்தீரின்.... ஜில் காற்று வீசுகிறது. குளிராயிருக்கு. இதை ஜெனரலுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே அவர்களைக் கேட்டுப் பார். நான் இதைக் கண்டதாகவும், அனுப்பி வைத்திருப்பதாகவும் சொல்லு. தெருவிலே விட வேண்டாமென்ற அவர்களிடம் கூறிவிட்டு வா. இது விலை உயர்ந்த நாயாக இருக்கும். ஊரிலுள்ள முரடர்கள் எல்லாம் இதன் மூக்கிலே சிரரெட்டைத் திணிக்க முற்பட்டால் உருப்படாமல் அல்லவா போய்விடும். நாய் மென்மையான பிராணி!..... முட்டாளே! கையைக் கீழே இறக்கு நீ! அசிங்கம் பிடித்த அந்த விரலை எல்லோருக்கும் காட்டிகிட்டு நிற்காதே. எல்லாம் நீ செய்ததுதான், குற்றம் உன்னுடையதுதான்....."

"ஜெனரலுடைய சமையற்காரர் இதோ வருகிறாரே, அவரைக் கேட்டால் தெரிந்துவிடுகிறது....... உம்மைத் தானே, புரோஹர்! கிழவரே, இங்கே வா! இந்த நாயைப் பார்.... உங்கள் வீட்டு நாயா இது?"

( 11 பக்கம் பார்க்க...........)


## தினக்கதிர் ஆதரவுடன்.........

**மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள**

### "சிறுகதைப் பயிற்சிப் பட்டறை"

**விண்ணப்பப்படிவம்**

1. முழுப்பெயர்:-..........................................
2. முகவரி:-..........................................
3. பிரதேச செயலகம்:-..........................................
4. கிராம சேவகர் பிரிவு:-..........................................
5. பிறந்த திகதி:-..........................................
(01.03.2001 அன்று) வருடம்:-............ மாதம்:-............ நாள்:-.........
6. கல்வி பயிலும் பாடசாலை/தொழில் செய்யும் இடம்:-..........................................
..........................................

மேற் கூறிய யாவும் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

..........................................
கையொப்பம்

திகதி:......................

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறுகதைப் பயிற்சிப் பட்டறை-2001" என எழுதப்படவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**
**கலாசார உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**மண்முனை வடக்கு,**
**மட்டக்களப்பு.**

** இப்பகுதியில் வெளியாகும் கதைகளை சேகரித்து வைக்கவும்*

# சிறுவர் மலர்

## தெனாலி

**வி**ஜய நகரத்தின் அரசன் கிருஷ்ண தேவராயர். அவரது அர சவையில் தெனாலிராமன் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். தெனாலிராமனின் விகடங்கள் சிரிக்க வைப்பது மட்டுமன்றி மற்றவர்க ளைச் சிந்திக்கவும் வைத்தன.

ஒரு நாள் அரசர், அமைச் சர்கள், அதிகாரிகள் எல்லோரும் அரச சபையில் அமர்ந்திருந்தார்கள். ஒரு ஜாலவித்தைக்காரன் அவர்கள் முன்னால் தனக்குத் தெரிந்த வித் தைகளைக் காட்டி அனைவரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அர சரும் அவற்றை வியப்புடன் பார்த் துக்கொண்டிருந்தார்.

உடனே ஜாலவித்தைக் காரன் ஆணவத்துடன் "அரசே இது போன்ற வித்தைகளை நீங்கள் காணமுடியாது. எனக்கு ஆயிரம் பொன் பரிசு கொடுத்தாலும் மிகை யாகாது" என்று கூறினான்.

அப்பொழுது தான் சபைக் குள் நுழைந்து கொண்டிருந்த தெனாலிராமன் ஜாலவித்தைக்கா ரனிடம் சென்று "நான் கண்ணை மூடிக்கொண்டு செய்வதை நீ கண் ணைத் திறந்து கொண்டு செய்தால் [illegible] ஆயிரம் பொன் இல்லை [illegible] ஆயிரம் பொன்னை எனக்குத் தரவேண்டும்" என்று கூறினான்.

உடனே ஜாலவித்தைக் காரன் கோபத்துடன் "என்னைப் பற்றி உனக்குத் தெரியாது. நான் சகல தும் அறிந்தவன். என்னால் எதனை யும் செய்ய முடியும்" என்று கர்வத்துடன் கூறினான்.

சபையின் மத்தியில் மணற் பகுதியிற் தெனாலிராமன் அமர்ந்து கொண்டான். சபையிலு ள்ள அனைவரும் அவனை வியப் புடன் பார்த்தனர். தனது இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண் டு தனது இரண்டு கைகளாலும் மண லை அள்ளிக் கண்களில் கொட்டிக் கொண்டான். பின்னர் எழுந்து ஜாலவித்தைக்காரனின் அருகில் சென்று "இதே போன்று கண்க ளைத் திறந்துகொண்டு செய்" என்று கூறினான். ஜாலவித்தைக் காரன் திடுக்கிட்டு தன்னால் கண் களைத் திறந்து கொண்டு அவ்வாறு செய்யமுடியாது என்று தனது தோல்வியை ஒப்புக்கொண்டான்.

தெனாலிராமன் ஆயிரம் பொன்களைப் பெற்று அனை வரையும் வியப்பிலாழ்த்தினான்.

திறமையுள்ளவர்களாக இருந்தாலும் கர்வம் கொள்ளக் கூடாது என்பதை எல்லோருக்கும் உணர்த்தினான்.

-பரா-




## அம்மாவின் பெயரையும் சேர்த்தால் என்ன?

**தணல்:-** அருவி என்ன உன் பக்கத் தில் அ.த.அருவி என்று எழுதியிருக்கிறாய். அ.த. என்றால் என்ன?

**அருவி:-** ஏன் அப்படி கேட்கிறாய்? என்னுடைய அம்மா, அப்பா இருவருடைய பெயர்களின் முதலெழுத்துக்கள் அவை.

**தணல்:-** நீ என்ன அப்படி வைத் துள்ளாய்? எல்லோரும் அப்பா பெயரின் முதலெழுத்தை மட்டும் தானே முன்னெழுத் தாகக் கொள்கிறார்கள். நீ என்னவென்றால் இப்படி.....?

**அருவி:-** முன்னெழுத்து என்பது எத ற்கு? நாம் இன்னொருவருடைய என்ற அடை யாளத்துக்குத் தானே.அப்படியானால் நாம் அப்பாவினுடைய மக்கள் மட்டும் இல்லை தானே. அம்மா அப்பா இருவருடைய மக்களும் தான் நாம். அப்படியிருக்க நாம் அப்பாவின் முதலெழுத்தை மட்டும் பயன்படுத்துவது தவறு இல்லையா?

**தணல்:-** நீ சொல்வது சரிதான். ஆனால் வழக்கத்திற்கு மாறாக இருக்கிறதே!

**அருவி:-** எதை வழக்கம் என்கிறாய்? முதலில் முன்னெழுத்து எழுதுவதே நம் வழக் கம் இல்லை தெரியுமா? அது ஆங்கிலேயர் வழக்கம். அந்த வழக்கத்தை நாம் மேற்கொண்ட பின் நம் வாழ்வியலுக்கு உகந்த நிலையில் அதை அமைத்துக் கொள்வது தானே சரி. அதற்காகத்தான் நம் குடும்ப வாழ்க்கையில் தாய்-தந்தை ஆகிய இருவரின் சிறப்பும் பெருமையும் கருதி இருவரின் முன்னெழுத் தையும் நாம் பயன்படுத்துதல் வேண்டும்.

**தணல்:-** நீ சொல்வது சரிதான் அருவி. ஆனால் அதை நீ மட்டும் செய்தால் போதுமா? மற்றவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டாமா? மாற்றிக்கொள்வார்களா?

**அருவி:-** சரியான கருத்தை நாம் பின்பற் றுவோம். மற்றவர்களுக்கும் விளக்கமாய் எடுத் துச் சொல்வோம். என்ன தணல் சொல்கிறாய்?

**தணல்:-** சரி அருவி.....நீ சொல்வது சரிதான்.

நன்றி:தமிழ்ச்சிட்டு

## பச்சோந்தி.........

(10ம் பக்கத் தொடர்ச்சி....)

"நல்லாயிருக்கே! இம்மாதிரி ஒரு நாய் எங்களிடம் எந்நாளும் இருந்த தில்லை!"

"இனி யாரையும் விசா ரிக்கத் தேவையில்லை" என்றால் அச்சுமேலவ், "தெரு நாய்தான். இங்கே பேசிக்கொண்டு நின்று பயனில்லை. தெரு நாயென்று சொல்லி விட்டார்கள், ஆகவே இது தெரு நாயேதான். இழுத்துச் சென்று ஒழித்துக்கட்டு! விவகாரம் தீர்ந்து விட்டது."."இது எங்களுடைய நாயல்ல" என்று புரோஹர் தொடர் ந்து சொன்னார். "ஜெனரலுடைய சகோதரர் சில நாட்களுக்கு முன்பு வந்தாரே, அவருடையது இது. எங் கள் ஜெனரலுக்கு பர்சோய் நாய்கள் பிடிக்காது. ஆனால் அவர் சகோதரர் இருக்கிறாரே, அவருக்கு உயிர் தான்....."

"!என்ன, ஜெனரலுடைய சகோதரர் வந்து விட்டாரா? விளதிமிர் இவானிச் வந்துவிட்டாரா? "என்று வியந்து கூவினார் அச்சுமேலவ்: ஆனந்தத்தால் அவர் முகம் பூரித்து விட்டது. "மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆயிற்றே! எனக்குத் தெரியாதே இது. இங்கேயே தங்கிவிடப் போகி றாரா?"

"இங்கே தான் இருக்கப் போகிறார்"

"எதிர்பாராத நல்ல செய்தி! தமது சகோதரரைப் பார்ப் பதற்காக வந்திருக்கிறாரா? செய்தி தெரியாதவனாய் இருந்திருக்கிறேன். அவருடைய நாயா இது? மட்டற்ற மகிழ்ச்சி! வீட்டுக்கு அழைத்துச் செல்..... அற்புதமான நாய்க்குட்டி! அந்த ஆளின் விரலைக் கடித்த தாயா நீ? ஹ-ஹ-ஹ! பரவாயில்லை. நீ நடுங் காதே! உர்-உர்-உர்-ர்...... பொல்லாத குட்டி, கோபம் பொத்துக் கொண்டு வருகிறது..... அருமை யான நாய்க்குட்டி!"

புரோஹர் அந்த நாயை அழைத்துக் கொண்டு மரவாடியிலி ருந்து போய்ச் சேர்ந்தார். கூட்டத் தினர் ஹுரியூக்கினைப் பார்த்துச் சிரித்தனர்.

"இரு! செம்மையாய்த் தருகிறேன் உனக்கு!" என்று அச்சுமேலவ் அவனை மிரட்டினார். பிறகு மேல்கோட்டை நன்றாய் இழுத்துவிட்டுக் கொண்டு சந்தை யின் குறுக்கே நடந்தார்.

## ஊர்வலம்.................

### கிழக்கின் புகழ் பெற்ற பண்டைக்கால களஞ்சியத் துறையாம் சேனைக்குடியிருப்பு

**ப**ழமைப் பதியாக வும் வரலாற்றுப் பெருமையு டையதாகவும் அருள் பூத்த சந் நிதியாகவும் வில்லை, இலுப் பை, மரங்களின் நிழலில் அழகு வயல் சூழ்ந்த வனப்பும் பழைய கட்டிடத் தொண்மையும் கொண்டு விளங்கும் இத் திருப் பதியில் அன்னை மகாகாளி அருளாட்சி செய்கின்றாள். இக் கோயிலின் வரலாற்றோடு தான் இக்கிராமத்தின் பூர்வீ கமும் ஆரம்பமாகிக் கொண்ட



தனை வாசகர்களாகிய நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகி றேன்.

இக் கோயிலுக்கு மேட்டு வட்டையில் ௦௯ ஏக்கர் நெற்காணி சொந்தமாகவுள் ளது.

**நில அமைவு:**

சேனைக் குடியிருப் புக் கிராமத்தின் கிழக்கில் நற்பிட்டிமுனை எனும் கிரா மம் தமிழர்களும் முஸ்லீம்க ளும் வாழ்கின்றனர். வடக் கில் மேட்டு வட்டையும், மருத நிலமும், தெற்கில் கரைப் பற்று வெளியும், கரவாக வட் டையும், வாவியும், மேற்கிலும் கரைப்பற்று வெளியும் கிட்ட ங்கி வாவியும் சூழப்பெற்று எல்லைகளினைக் கொண் டது.

இக் கிராமத்தினைச் சூழ ௨300 ஏக்கர் வயல் நிலங்கள் கோடைப் போகம் விவசாயம் செய்யப்படுகின் றது. இக்கிராம வாசிகள் அதி கமானோர் விவசாயிகளாக வும், ஏழைகளாகவுமே காணப் படுகின்றனர்.

மூன்று கிராம சேவ கர் பிரிவுகளினைக் கொண் டது. இங்குள்ளவர்கள் யாவ ரும் இந்து மதத்தை உடைய வர்களாகக் கௌரவத்துடன் வாழ்கின்றனர்.

**ஊர் நிர்வாகம்:-**

௧௯ம் நூற்றாண்டில் ௧௦௦க்கும் உட்பட்ட குடும்பங் களே சேனைக் குடியிருப்பில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். நற்பிட்டிமுனையில் இருந்த வன்னிமையின் ஆட்சி நிர்வா கத்தின் கீழே இக்கிராமமும் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

இக் காலப் பகுதியில் சேனைக்குடியிருப்புக் கிராமத் தில் முதல் கிராம சேவகராக திருவாளர் பரிஸ்ஸிராமப் பிள் ளை என்பவர் கடமையாற்றி னார்.

இவ் வேளையில் நற் பிட்டிமுனை வன்னிமை சே னைக்குடியிருப்பிலுள்ள காளி கோயிலின் பூசையில் உரிமை கொண்டாடினார். இந்த நிக ழ்வு பெரும் சர்ச்சையினை எழு ப்பி நற்பிட்டிமுனைக் கிராம மக்களுக்கும் சேனைக்குடியி ருப்புக் கிராம மக்களுக்குமி டையே பெரும் மோதல் ஏற் பட்டு பூசைக்குள்ளும் பிளவு ஏற்படுவிட்டது.

இப் பிரச்சினைக் கான முடிவாக சேனைக்குடி யிருப்புக் கிராமத் தலைவர் திருவாளர் பரிஸ்ராமப் பிள் ளையார் தலைமையில் [illegible] கோயிலில் இருந்த உரிமை[illegible] நற்பிட்டிமுனை வன்னிமைக் குக் கீழ் பணிந்து கொடுத்து விட்டார்.

**ஐ.எல்.ஜலீல்**

அதன் பிறகு சேனைக் குடியிருப்பு மக்கள் தமக்கென தனியான உரிமை கொண்டாட மாரியம்மன்கோயிலினை தாங் களே பக்தியுடன் தாபித்து சக்தி வழிபாட்டினை பேணுப வர்களாகப் பிளவுபட்டும், வேறுபட்ட நிலையிலும் வழிப ட்டு வந்தனர்.

ஆனால் இன்று நற் பிட்டிமுனை பிள்ளையார் கோயிலின் நிர்வாகத்தின் கீழ் சேனைக்குடியிருப்பு காளி கோயிலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இவர்களின் நிர்வா கத்தின் கீழ் சொந்தமாக தில லக்கொலை கரவாகுவட்டை யில் ௦௪ ஏக்கர் நெற்காணியும், படுவான்கரை வட்டையில் ௦௪ ஏக்கர் நெற்காணியும், நற் பிட்டிமுனை கிழல் கண்டம் ௦௪ ஏக்கரும் சம்மாந்துறை பல்ல வட்டையில் ௦௪ ஏக்கரும் சொறிக்கல்முனை ஏத்தாளக் குளம் ௦௨ ஏக்கரும் நன்கொடை சொத்துக்களாகவும் காணப்படு கின்றது.

இன்னும் இக் கோயி லுக்கு காணிக்கைகள் மூலமும், நெற்காணிகளின் குத்தகை வரு மானமும் கிடைக்கப் பெறுகின் றன.

(இன்னும் வரும்....)

கவிஞர் பிரபஞ்சப்பிரியன் எழுதும்-



என் உதடுகளைக் காணவில்லை
உனக்கு
முத்தமிடுகையில் தான்
தொலைந்திருக்க வேண்டும்.
தேடிப் பிடித்து
திருப்பிக் கொடுத்துவிடு
என்கிறாய்.
உன்னிடம் திருப்பிக் கொடுத்தால்
மட்டும் என்ன
மீண்டும் என்னில் எங்காவது
தொலைக்கத்தானே கோகிறாய்?

சங்கர்

# காதல் வெண்ணிலா கையில் சேருமா......?

## அத்தியாயம்-36

நமது தொடர்கதை

அந்தக் கடிதத்தை வாசித்ததில் இருந்து நிவேதா மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருந்தாள். பல்கலைக் கழக இறுதி வருட பரீட்சைகள் அனைத்தும் முடிவடைந்து நண்பர்களிடமும் கண்ணீர் மல்க விடைபெற்று திருமலை வந்து சேரும் வரையும் ரதன் நிவேதா வுடன் அதிகம் கதைக்கவில்லை.

வழமையாக பல்கலைக் கழகவிடுமுறைகளில் அவர்கள் ஊருக்குப் போகும் போது இருக்கும் அந்த வழமை யான கலகலப்பு அன்றில்லை.

தனது புறக் கணிப்புகள் ரதனை வெகுவாக பாதித்திருக்கிறது என்பது நிவேதா வுக்குப் புரிந்தது. தான் விலகிச் செல்ல செல்ல அவன் தன் எஜமானின் காலைச் சுற்றிச்சுற்றி வரும் நாய்க்குட்டியைப் போல தேடிவந்ததையும் தான் விலகிப்போனதையும் நினைத்துப் பார்த்தாள்.

விமலாவின் காதலுக்கு உதவ வேண்டும் என்ற நினைப்பில் தான் ரதனின் மனசைப் புண்ணாக்கி விட்டதை நினைக்க ரதனை கட்டிக் கொண்டு அவனது மடியில் தலை சாய்த்து அழ வேண்டும்



போலிருந்தது அவளுக்கு.

அவர்கள் வந்த பஸ் திருகோணமலைக்குவந்து சேர்ந்தது. ரதனும் நிவேதாவும் இறங்கிக் கொண்டதும்..... வழமை போலவே அவன் அவளை அவளது வீட்டில் கொண்டு விடுவதற்காக அவளுடன் கூடவே வந்தான். ஆனால் ரதனாக வாய்திறந்து ஒன்றுமே கதைக்கவில்லை. நிவேதா கேட்ட சில கேள்விகளுக்கும் 'ஆம் இல்லை' என்ற ரீதியில் பதிலளித்து விட்டு பேசாமல் இருந்து விட்டான்.

உண்மையிலேயே அவன் தன்னை வெறுக்கத் தொடங்கி விட்டானோ என்று நினைக்கவே நிவேதாவுக்குப் பயமாக இருந்தது. தான் செய்ய நினைத்த காரியமும் கைகூடாத நிலையில் தனது வாழ்க்கையையே பாழாக்கிவிட்டேனோ என்ற எண்ணம் அவளுள் எழுந்தது.

ரதன் ஏதோ வந்தோம் போனோம் என்ற நிலையில் நிவேதாவிடமும் அவளது மாமியிடமும் விடைபெற்றுக் கொண்டு சென்ற பின்னர் தான் நிவேதாவிடம் அவளது மாமி ''நிவேதா இன்று உனக்கொரு கடிதம் வந்தது'' என்றபடி அந்த கடிதத்தைக் கொடுத்தாள்.

அதில் முகவரி எழுதப்பட எழுத்தைப் பார்த்ததுமே நிவேதாவுக்கு அது விமலாவினுடைய கையெழுத்து என்று புரிந்து விட்டது. நெஞ்சு படபடக்க அந்த கடிதக் கவரை உடைத்து வாசிக்கத் தொடங்கினாள்.

அன்புடன் நிவேதாவுக்கு

எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் என்ன வாழ்த்துத் தெரிவிக்கின்றேன் என்றுயோசிக்கின்றீர்களா.......? ஆம் உங்களது இனிமையான குடும்ப வாழ்வுக்கே எனது வாழ்த்துக்கள் காதலிப்பது ஒரு சுகம் அந்த காதல் வெற்றியடைந்து திருமணத்தில் காதலர்கள் கூடுவது அதைவிட சுகம். அந்த சுகம் உங்களுக்கு கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அதற்கு முன்னர் உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டியுள்ளது. எனக்குத் தெரியாமலேயே உங்களை நேசிக்கும், நீங்கள் நேசிக்கும் ரதனை நானும் காதலித்தது குற்றம் தான். ஆனால் இது தெரியாமலேயே நடந்தது. காலதாமதம் காதலுக்கு விரோதி என்று ஒரு கவிஞன் சொன்னான். நான் இன்று அதனை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். எனது காதலை எனக்குள்ளேயே பூட்டி வைத்ததும் அதனை தெரியப்படுத்த முயற்சிக்காததும் எனது தவறே. அப்படி எனது காதலை நான் முன்னரே வெளிப்படுத்தியிருந்தால். இந்தளவுக்கு சிக்கல் வந்திருக்காது என்றே நம்புகிறேன்.

ஆனாலும் பரவாயில்லை எனது மனதை நான் தேற்றிக்கொண்டேன். ரதனின் கடிதம் எனக்கு பல உண்மைகளை புலப்படுத்தியது. என்னை காதலியாக இல்லா விட்டாலும் நல்ல நண்பியாகவாவது ஏற்றுக் கொண்ட ரதனை மதிக்கிறேன்.

நல்ல வேளையாக தங்கள் வாழ்க்கையில் குறுக்கிட இருந்த நான் அந்தத் தவறை செய்யாமல் தடுக்கப் பட்டதற்கு ரதனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

நிவேதாக்கா உங்களுக்கு நல்லதொரு வாழ்க்கை கிடைத்திருக்கிறது. மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ரதனை சுகம் விசாரித்ததாகக் கூறுங்கள்.

அன்புடன்
விமலா

அந்தக் கடிதத்தை படித்ததிலிருந்து எப்போது ரதனைப் பார்ப்போம் என்றிருந்தது நிவேதாவுக்கு. தான் எத்தனை தூரம் விலகி விலகிப் போனாலும் ரதன் தன்மேல் கொண்ட காதலின் காரணமாக நெருங்கி நெருங்கி வந்ததும்....... கடைசியில் தனக்கே தெரியாமல் விமலாவுக்கு தமது காதலைத் தெரியப்படுத்தி அவன் கடிதம், எழுதியிருந்ததும், அது கூட தன்க்கு தெரியாமலேயே அவன் செய்திருந்ததும் அப்படியிருந்தும் கூட அவனை தான் தவிர்த்து வந்ததையும் நினைக்க நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது.

ஆனால் தற்போது ரதன் கூட தன்னிடம் இருந்து விலகி நடப்பதை அவள் உணர்ந்திருந்தாள். அன்று பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு அவனாகவே தன்னிடம் இருந்து ஒதுங்குவது அவளுக்குத் தெரிந்தது. மாலை எப்படியாவது ரதனைச் சந்திப்பது என்ற முடிவுடன் குளியலறைக்குள் நுழைந்தாள் நிவேதா.

(அடுத்த வாரம் நிறைவுபெறும்)

---

# ஸெர்யோஷா

அம்மா போய்விட்டாள். அவன் தன் அறைக்குச் சென்று விளையாட்டுச் சமான்களில் ஈடுபட்டான். நடந்த விஷயத்திலிருந்து நினைவை அகற்றுவதற்குத் தன்னை அறியாமலே முயன்றான். அவனுடைய மெல்லிய விரல்கள் நடுங்கின. பழைய சீட்டுக்களிலிருந்து கத்தரித்த பொம்மைகளை வகைப்படுத்தும் போது கறுப்பு ராணியின் ஒரு தலையைத் தற்செயலாகக் கிழித்து விட்டான்..... முட்டாள் பேத்யா மாமாவுக்கு அம்மா ஏன் பரிந்து பேசினாள்? இதோ அவள் அவருடன் உரையாடிச் சிரிக்கிறாள், ஒன்றுமே நடக்காதது போல. ஸெர்யோஷாவுடன் பேச இஷ்டமில்லையாம் அவளுக்கு.....

மாலையில் அவள் கொரஸ்தெல்யோவிடம் நடந்த விஷயத்தைச் சொன்னபோது ஸெர்யோஷா கேட்டுக்கொண்டிருந்தான்.

''மிகவும் சரி. நியாயமான விமர்சனம் என்பது இதுதான்'' என்றான் கொரஸ்தெல்யோவ்.

''சின்னப் பையன் பெரியவர்களை விமர்சனம் செய்வதை அனுமதிக்கலாமா? குழந்தைகள் நம்மை விமர்சிக்கத் தலைப்பட்டால் அவர்களை நாம் பயிற்றி வளர்ப்பது எப்படியாம்? சிறுவர் பெரியவர்களுக்கு மரியாதை காட்ட வேணடும்'' என்று சொன்னாள் அம்மா.

''இந்த உலக்கைக்

யாதை காட்ட வேண்டும், தயை செய்து சொல்லேன்!'' என்று கூறினான் கொர்ரஸ்தெல்யோவ்.

''மரியாதை காட்டுவது அவன் கடமை. பெரியவர் ஒருவர் உலக்கைக் கழுத்தாக இருக்க முடியும் என்ற எண்ணங்கூட அவனுக்குத் தோன்றக்கூடாது. முதலாவது இதே ப்யோத்தர் இல்யீச் வயதுக்கு வரட்டும், அப்புறம் விமர்சித்துக் கொள்ளலாம்.''

''என் கருத்துப்படி ஸெர்யோஷா அறிவில் ப்யோத்தர் இல்யீச்சை வெகுகாலத்துக்கு முன்பே மிஞ்சிவிட்டான். தவிர முட்டாளை முட்டாள் என்று சொன்னதற்காகப் பையனைத் தண்டிப்பது எந்த போதனாமுறைப்படி பார்த்தாலும் கூடாது'' என்றான் கொரஸ்தெல்யோவ்.

விமர்சனம், போதனாமுறை என்பவற்றை ஸெர்யோஷா புரிந்து கொள்ளவில்லை. ஆனால் முட்டாளைப் பற்றிய பேச்சு அவனுக்கு விளங்கிற்று. இந்தச் சொற்களுக்காக அவன் கொரஷ்தெல்யோவுக்கு நன்றி பாராட்டினான்.

கொரஸ்தெல்யோவ் ஸெர்யோஷாவை ஆற்றுக்கு அழைத்துப் போய் நீந்தக் கற்றுக் கொடுப்பான். ஸெர்யோஷா மூழ்கி விடுவானோ என்று அம்மா பயப் படுவாள். கொரஸ்தெல்யோவோ சிரிப்பான். ஸெர்யோஷாவின் கட்டிலிலிருந்து பக்கத் தடுப்பு வலையை அவன் அகற்றிவிட்டான். ஸெர்யோஷா கட்டிலிலிருந்து

கொள்வான் என்று அம்மா அஞ்சினாள்.

''திடீரென்று ரெயிலில் பிரயாணம் செய்ய நேர்ந்தால்? மேல் தட்டில்? பெரியவர்கள் போலப் பழகிக் கொள்ளட்டும்'' என்றான் கொரஸ்தெல்யோவ்.

இப்போது ஸெர்யோஷா காலையிலும் இரவிலும் தடுப்பு வலையைத் தாண்ட வேண்டியதில்லை. கட்டில் விளிம்பில் உட்கார்ந்து ஆடைகளைக் கழற்றுவான். பெரியவர்கள் போலத் தூங்குவான்.

ஒரு தரம் அவன் கட்டிலிலிருந்து உருண்டு விழுந்துவிட்டானாம், சொல்லுகிறார்கள். இது நடுநிசியில் நேர்ந்ததாம்: அவன் விழுந்ததைக் கேட்டு, மறுபடி கட்டிலில் படுக்க வைத்தார்களாம். அவனுக்கோ ஒன்றுமே நினைவில்லை. எங்குமே அடிபடவும் இல்லை. காணப்படவில்லை, நினைவும் இல்லையென்றால் அது கணக்கில் சேர்த்தியாகுமா?

ஒரு நாள் அவன்வெளிமுகப்பில் விழுந்து முழங்காலில் இரத்தம் வரும்படி சிறாய்த்துக் கொண்டான். அழுது கொண்டே வீட்டுக்குள் வந்தான். பாஷா அத்தை அங்கலாய்த்து, பட்டித்துணி எடுக்க ஓடினாள். ஆனால் கொரஸ்தெல்யோவோ, ''என்ன தம்பீ, நீ. இதோ சரியாகிவிடும். சண்டைக்குப் போவாய். காயம் படும், அப்போது எப்படிச் சமாளித்துக் கொள்வாய்?'' என்றான்.



''உனக்குக் காயம் பட்ட போது நீ அழவில்லையா?'' என்று கேட்டான் ஸெர்யோஷா.

''நான் மட்டும் அழுதிருந்தால் தோழர்கள் என்னை நகையாடியிருப்பார்கள். நாம் ஆண் பிள்ளைகள். நமது வேலை அப்படிப் பட்டது.''

ஸெர்யோஷா அழுவதை நிறுத்திவிட்டு ''ஹ-ஹ-ஹ!'' என்று கூவினான். தன் ஆண்பிள்ளைத் தனத்தைக் காட்டுவதற்காக. பாஷா அத்தை பட்டித் துணியை எடுத்துக் கொண்டு வந்ததும் அவன் அலட்சியமாக, ''கட்டுப்போடு, பயப்படாதே! எனக்கு வலிக்கவில்லை!'' என்றான்.

கொரஸ்தெல்யோவ் போரைப் பற்றி அவனுக்கு விவரித்தான். அப்போது முதல் கொரஸ்தெல்யோவின் பக்கத்தில் சாப்பாட்டு மேஜை அருகே உடகாரும் பொழுது ஸெர்யோஷாவுக்குப் பெருமையாயிக்கும். போர் மூண்டால் சண்டை போடுவதற்கு யார் போவார்கள்? கொரஸ்தெல்யோவும் நானும். நமது வேலை அப்படிப் பட்டது. அம்மா, பாஷா அத்தை, லுக்யானிச் மூவரும் நாங்கள் வெற்றி பெறும் வரையில் இங்கே காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய வேலை அப்படிப்பட்டது.

### ஷேன்யா

ஷேன்யா தாய் தந்தை அற்றவன். பெரியம்மாவுடனும் அக்காளுடனும் வசித்தான். அக்காள் உடன் பிறந்தவள் அல்ல. பெரியம்மாவின் மகள். பகலில் வேலைக்குப் போவாள். மாலையில் இஸ்திரிபோடுவாள். தன் உடைக்கு இஸ்திரி போடுவாள். கரிக் கங்குகளால் சூடாக்கப்படும் பெரிய இஸ்திரிப் பெட்டியோடு வெளி முகப்பில் பரபரவென்று வேலை செய்வாள். ஒரு சமயம் இஸ்திரிப் பெட்டிக்குள் ஊதுவாள், மறு சமயம் அதன் மேல் துப்புவாள். வேறு சில வேளைகளில் ஸமோவார்க் குழாயை அதன் மேல் செருகுவாள். தலைமயிரை இரும்புக் குழல் வளையங்களில் சிறு ஸாஸேஜ்கள் வடிவில் சுருட்டி விட்டிருப்பாள்.

(அடுத்த வாரம் தொடரும்....)

## கவிதை தேசம்



### சமுதாயமே!

இன்றைய தலைமுறையின்
இளைய அங்கத்தினரே
உன் பார்வைப் பாதங்கள்
ஆகாய நந்தவனத்தில்
பயணிக்க
கற்பனைக் கோட்டை
கட்டுகிறாய்.

சமுதாய நிதர்சன
அவலங்களை
கண்டும் கேட்டும்
''நமக்கெதற்கு
இதற்கெல்லாம்
எனத் தட்டிக்கழித்து
உனக்கெனவோர் நிழலுலகை
தீர்மானித்துக்கொண்டு
கனவுகளின் வசீகரத்தில்
குளிர் காய்கிறாய்.

ஆனால்,
உன்னைச் சுற்றிச் சூழலும்
நிஜவுலகின் அனர்த்தங்களை
என்றாவது நினைத்துப்
பார்த்ததுண்டா....நீ!
வானத்தை வளைக்கப்
பார்க்கும் நீ
நடந்து போகும் பாதையை
செப்பனிட மறுக்கிறாய்.

உன் கண்முன் நடக்கும்
அநீதி அக்கிரமங்களை
உயிரழிவுகளை நிறுத்த
துணிய வேண்டும்
நீ மட்டுமல்ல,
உன்னைப் போல் ஆயிரம்
பேர்
வாழ்வதற்குத் தான்
வாழ்க்கை

உனைப்போன்ற
சுயநினருக்காக அல்ல.

ச.பிரகாஸ்

---

### நிலை மாறவேண்டும்!

மடி தவழும் மழலைக்கு
வான் நிலவை சுட்டிக்காட்டி
பாற்சோறு ஊட்டிய
தாயவள் கரங்கள் இன்று
''ஆமிக்காரன் வார்ரான்
சாப்பிடு''
எனச் சுட்டிக்காட்டி
ஊட்டும் நிலை
மாறிட வேண்டும!
நள்ளிரவு நேரமதில்
நடுக்கமின்றி நடந்துசென்று
'செக்கன்ட் சோ'' பார்த்து
திரும்பி வந்த காலம்
மீண்டும் வரவேண்டும்!
கட்டழகு கன்னியர்
கவலையின்றி காலமெல்லாம்
எங்கும் சென்றிடும்
இன்ப நிலை வேண்டும்!
உலகம் சுற்றித்திரியும்
உல்லாசப் பயணியர்
எம் நாட்டைத் தரிசிக்க
அச்சமின்றி வந்திடும்
நிலை வரவேண்டும்!
துள்ளித்திரியும் வாலிபர்கள்
கால் போகும் திசையெங்கும்
துயரமின்றி சென்றுவரும்
நிலை வரவேண்டும்!
நிலை குலைந்த உள்ளங்கள்
மன நிம்மதி பெற்று
அமைதி தீபம் ஏற்றிடும்
நிலை வந்திட வேண்டும்!
துப்பாக்கி ஏந்திய
கைகளிலே
சமாதானப் புறாக்கள்
தவழ்ந்திடும் நிலை
வந்திட வேண்டும!

எஸ்.விக்னேஸ்வரன்

### சுடலை ஞானம்!

எனது சோதரிகளை......
எனது உறவினர்களை.....
எனது அயலவர்களை......
உள்வாங்கிக் கொண்ட
சுடலையைப் பார்க்கிறேன்!

கண்கள் பனித்தன....!
அதரங்கள் துடித்தன.......
உள்ளமோ கொதித்தது.

அவர்கள் பாக்கியசாலிகள்;
கௌரவமாக அடக்கம்
செய்யப்பட்டவர்கள்.
ஆனால் நாங்கள்...?
நாளை எங்களின்
உயிரற்ற உடல்கள்
எந்தெந்த மூலைகளில்
எப்படிக் கிடக்குமோ?
இப்படியொரு கிலி
என்னுள் படர்கிறது!

சவக்களை தொனிக்க
தொடர்கிறது எமது
வாழ்வின் பயணங்கள்!....!

ஓ! நாங்கள் மனிதர்கள்
அதிலும் தமிழர்கள்!

சுதாகினி
ஏறாவூர்

---

### சொல்லுங்கள் அவளிடம்!

அந்த மரத்தடியில்
நிற்கிறேன்
இன்று நேற்றல்ல
எத்தனையோ நாட்களாக.

அவளோ அவ்வழியால்
அனுதினமும் போய் வருகிறாள்
அவள் நிழல்தான் படுகிறது

வாய்திறந்து ஒருவார்த்தை
பேசுவோம் என்று
யோசித்தேன்.
அவள் நிழல் பட்டதும்
மறந்து போகிறேன்.

அவளோ எதையும்
புரியாது எனைப்
பார்த்துவிட்டுப் போகிறாள்.
என் உணர்வுகளைத்
தூண்டும் வகையில்.

நண்பர்களே என் வேதனையை
புரிந்து கொண்டு
அவளிடம் போய் சொல்லுங்கள்
இன்னமும் உனக்காக
காத்துக்கிடக்கிறான் என்று.

ஒருவேலை நான் அவ்விடத்தே
கல்லறையாகக்கூடும்.
அதற்கு முன்பதாகக்
அவளிடம் சொல்லிவிடுங்கள்.

எனக்காக கருணை காட்டுங்கள்
எத்தனை நாட்களாகத்தான்
அந்த மரத்தடியில்
பார்த்து நிற்பது.

சிரோணியன்
மட்டக்களப்பு

## சொந்த மண்ணின் நொந்த கீதங்கள்

வெலிக்கந்தச் சாவடியில்
வேட்டி, சீலை, சட்டைகள
நவிச்சி நவிச்சுசிர - அந்த
நாய்க்கு முன்னால் எடுத்தான்

பண்டியைப் போல் நாய்படுக்க
பயந்து நான் நடுநடுங்க - "ஏய்
குண்டு கொண்டு வந்ததாண்டு
குரல் வளையப் புடிச்சான்கா

நாய்க்குள்ள மதிப்பு இந்த
நாட்டில் நமக்கிருக்கா?
நாயக்கண்ட புறகுதானே - விஜயன்
நண்பரோட வாடி போட்டான்.

கட்டுச் சோத்துப் பார்சலுக்க
குண்டு தேடிக் கிளறினான்கா!
உட்டுப்போட்டு நான் நடந்தன் - அத
ஊட்ட கொண்டு தின்னலாமா?

இடுப்பொடிய பஸ்ஸேறி
இறங்கிறதும் பாயிறதும்
தடுப்பு முகாம் முன்னால - நம்ம
தமிழர்படும் பாடுமோசம்!

(தொடரும்...)



கவிஞர் செ.குணரத்தினம்

# 'பொன்னாச்சி பிறந்த மண்' 'ஆண்டவர் பிறந்த மண்'!

## நூலாய்வு

மட்டுநகர் அன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வர் பலருள் கலாசூரி வெற்றிவேல் வினாயகமூர்த்தி அவர்களும் ஒருவர். இன்று இம்மண்ணில் முதுபெரும் அறிஞராகவும், பகுத்தறியும், சிந்தனையாளராகவும். சிறந்த சமூக சேவையாளராகவும் திகழும் இவர் பயன்மிக்க ஒரு விவசாயியுமாவார். பன்குடாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இப்பணபாளர் ஆரம்பத்தில் தமிழாசிரியராகக் கடமையேற்று, தமது விடாமுயற்சியினால், அதிபராக உயர்ந்து, கொள்கைக்காக ஓய்வு பெற்றவர்.

ஒரு நாளைக்கூட வீணாக்காமல் உழைத்து உயர்ந்த இவர் இலக்கிய உலகிலும் தம்மைப்பல வகைகளில் அறிமுகப்படுத்தியுள்ளார். 1964ல் வெளிவந்த ''பாலர் பாமாலை'' இவரை ஒரு குழந்தைக்கவிஞராக்கியது. 1992ல் வெளியான ''பொதுப்பாமாலை'' இவரை ஒரு சிறந்த கவிஞர் என ஒப்புக்கொள்ள வைத்தது. 1993ல் வெளிவந்த "கண்ணகையும் தன்னகையும்" இவர் ஒரு சிறந்த இலக்கிய விமர்சகர் என்பதை எடுத்துக் காட்டியது. 1994ல் அச்சுப் பெற்ற "கடவுள் எங்கே? ''என்ற நூலும் 1997ல் வெளிவந்த "பாட்டும் விளையாட்டும்'', "மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம்'' ஆகிய நூல்களும் இவரை ஒரு பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும், தளர்ச்சியிலா ஆராய்ச்சியாளராகவும், படம்பிடித்துக் காட்டின. 1998ல் வெளிவந்த ''பொன்னாச்சி பிறந்த மண்", 2000ல் வெளிவந்த ''ஆண்டவன் பிறந்த மண்'' என்னும் சிறுகதைத் தொகுதிகள் இரண்டும் இவர் தனித்துவம் மிக்க சிறுகதை எழுத்தாளர் என்பதைச் சாற்றுகின்றன.

இவரின் சிறுகதைப் பிரவேசம், பலருக்கும் பலவிதமான கிளர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளன. ஒருசிலர் இவர் பேருக்கும் புகழுக்குமாக சிறுகதை எழுதுகிறார் எனவும், சிலர் இவரின் சிறுக்தைகள் சிறுகதை இலக்கணத்துள் அடங்கவில்லை எனவும் பேசுகின்றனர். இவற்றை நோக்கும் போது இவரது சிறுகதைகள் மட்டக்களப்பு மண்ணில் ஒரு இலக்கியத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை உணர முடிகிறது.

இந்த வகையில் தான் இவரின் முதற் சிறுகதைத் தொகுதியான "பொன்னாச்சி பிறந்த மண்''ணில் பொதிந்துள்ள பதினான்கு சிறுகதைகளும், இரண்டாவது தொகுதியில் புதைந் துள்ள பூத்துச் சிறுகதைகளும் விமர்சனத்துக்குட்படுத்தப்பட வேண்டியவையாகின்றன.



"பொன்னாச்சி பிறந்த மண்" என்ற கதையில் வரும் பொன்னாச்சிப்பாட்டி தன் மண்மீது கொண்ட பற்றால்.... இறுதியில் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றார். அவளது பேரன் அவள் மீது காட்டும் பாசமும் சுட்டிக்காட்டப்படுகின்றது. விரால்மீன் கறி சோறு எடுத்துக்கொண்டு பொன்னாச்சிப்பாட்டி இருக்கும் இடம் நோக்கிவரும் வரதனின் வரவுடன் கதை ஆரம்பித்து வளர்ந்து செல்கிறது. "காலரக்கட்டைக்கு அங்கால இருந்த ஆற்றங்கர எங்கட கண்ணோட கிட்ட வந்திற்றடா. இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அணையக்கட்டி அலையடிச்சிக் கரையாம தடுக்கலாமே. ஓங்கட காலத்தில ஊரும் ஆத்துக்கள் போகும் போல இருக்கடா. எவ்வளவு கிட்ட வந்திட்டுது ஆறு" பொன்னாச்சிப்பாட்டியின் ஊர்ப்பற்று அவள் வாயிலாகவே வெளிப்படுத்தப்படுவது சிறப்பாக அமைந்துள்ளது. அத்துடன் கிராமிய வழக்குச் சொற்கள் கதைக்கு மெருகூட்டுகின்றன. ஆசிரியர் இக்கதையினூடாக வாசகருக்கு எதனைச் சொல்ல நினைத்தாரோ அதனைக் கூறிவிட்டார்.

"ஆண்டவர் பிறந்த மண்" எனும் கதைத் தொகுதியில் வரும் அகதிகளாக்கும் ஆண்டவர் பிறந்த மண்" என்ற கதை இன்றைய சூழ்நிலையில் தமிழரின் நிர்க்கதியைச் சித்திரிக்கின்றது. இலண்டனில் கலந்து கொள்ள வரும் இளைய ராசாவும் அவனது வெளிநாட்டுக் காதலியும் கொழும்புக்கு வந்தும் மட்டக்களப்புக்கு உரிய நேரத்திற்கு வர முடியாத நிலையை இக்கதை சித்திரிக்கின்றது.

"அங்கை என்ன பிள்ளை செய்து கொண்டிருக்கிறா? வாசிட்டிக்குப் போனவை எல்லோரும் உத்தியோகம் இல்லாமலுக்குத் திண்டாடுகினம். தெரியவில்லையோ? '' சும்மா நாங்கள் சோறு தண்ணியில்லாமச் சாகச், சாதிசனம் பாரத்துக் கொண்டிருப்பினமோ? உம்மட உதவி பதவி எங்களுக்கத் தேவையே? யாழ்ப்பாணத்தான் நிலம போமமெண்டால் மட்டக்களப்பிலும் ஆமியோட சாதிச்சண்ட வந்து தொலைஞ்சு போட்டுதே? பிள்ளை அண்ணன் மாரோட போயிருமன். களவு, கொள்ளை, கற்பழிப்பு, ஆரெண்டு தெரியுமே! ஆயுதக்காரன்கள் ஊரெல்லாம் ஆயுதம் உது சரிப்படுமே? ''

தங்கராசா ஓவிசியரின் இக்கூற்றுக்கள் பிரச்சினை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பிலும் தலைவிரித்தாடுகின்றது என்பதை சித்திரிக்கின்றன. இக்கதையும் ஆசிரியரின் எண்ணத்தை பூர்த்திசெய்துள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் ஆசிரியன் தமது எண்ணக்கருக்களை இயன்றவரை சிறுகதையாகப் படைத்துத் தந்துள்ளார். இலக்கணச் செறிவுடைய இவரது வசன நடை தற்கால வாசகர்களுக்கு கொஞ்சம் சங்கடம் கொடுக்கக் கூடியதாக அமைந்திருந்தாலும், எவரது தமிழ் நடையையும் பின்பற்றாது தனக்கென ஒரு நடையைப் பாவித்துள்ளது இவரது தனித்துவத்தைக் காட்டுகிறது.

கதையை வளர்த்துச் செல்லும் ஆசிரியர் சில சமயங்களில் சம்பவங்களைப் பாத்திர வாயிலாக விளக்காமல் தாமாகவே விளக்கமளிக்க முயன்றுள்ளார். இதுவே கதைகளின் விறுவிறுப்பை சற்றுக் குறைக்கின்றது. இக்குறையைக் கருத்தில் கொண்டு சிறுசிறு வாக்கியங்களால் கதையை புனைய முன்வருவாரானால் இவரது கதைகள் பாட்டை தீட்டிய வைரங்களாக இருக்கும்.

கவிஞர்
செ.சிவானந்ததேவன்

# கவனிப்பாரற்று விடப்படும் "முது"சங்கள்

*சென்றவாரத் தொடர்ச்சி*

மேலும் வெளிநாடு செல்லும், செல்ல முயற்சிக்கும் வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு கொழும்பு ஒரு தற்காலிக வதிவிட மாகத் திகழ்கின்றது. கொழும்பில் உள்ள 'லொட்ஜ்' களோடு பரீட்சயம் உள்ளவர்களுக்கு இது நன்கு புரியும்.

இவ்வாறாக தற்காலிகமாகவேனும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வதிய முயலும் இளைய, நடுத்தர வயது சமூகத்தினர் மேற்படி மாகாணத்தில் முதியோர் வீதத்தின் உயர்வுக்கு வழிவகுக்கின்றனர்.

துரித கதியில் அதிகரித்துச் செல்லும் இம்முதியோர் எண்ணிக்கை படிப்படியாக ஒரு சமூகப்பிரச்சினையாக தோற்றம் பெற்று வருகின்றது. முதியவர்களை மூத்த குடிமக்களுக்கான இல்லங்களுக்கு அனுப்புவது பாவகரமான அகௌரவமான செயல் என்ற ஆழப்பதித்த நம்பிக்கை ஒரு புறம், பராமரிப்பாளர்கள் அற்ற நிலையில் வீடுகளில் அவதியுறும் முதியவர்கள் ஒரு புறம் என யதார்த்த நிலைக்கும் பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் இடையிலான இடைவெளி விரிவடைந்து செல்லுகின்றது.

முதியவர்கள் குடும்பப் பராமரிப்பாளர்கள் அற்ற நிலையில் நிராதரவுக்குள்ளாகும் நிலமை, குறித்த அந்த அந்த குடும்பங்களுக்குரிய பிரச்சினையாகவன்றி சமூகப் பிரச்சினையாகப்பார்க்கப்பட வேண்டிய காலகட்டம் வந்து விட்டது. நாட்டினதும் சமூகத்தினதும் பொருளாதார சமூக நலன்களுக்காக உழைத்து சோர்ந்து போய்விட்ட முதியவர்கள் நிராதரவுக்குள்ளாகும் போது அவர்கள் குறித்து கரிசனை கொள்ள வேண்டியது சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தவரதும் கடமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது மூன்று கருணை அடிப்படையிலான முதியோர் இல்லங்களும் ஒரு தனியார் முதியோர் இல்லமும் இயங்கிவருகின்றன. திருமலை மட்டு வீதி ஏழைகளுக்கான சிறிய சகோதரிகள் முதியோர் இல்லம். கல்லடி விபுலானந்தர் முதியோர் இல்லம் காத்தான்குடி முஸ்லிம் முதியோர் இல்லம் என்பவற்றில் மொத்தமாக 125 முதியோர்கள் வாழ்கின்றனர். இம்முதியோர் இல்லங்கள் யாவும் வறுமை, பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட தனிமை. சொத்தின்மை என்பன வற்றையே தமது இல்லங்களில் அனுமதிப்பதற்கு தகுதி விதிகளாகக் கொள்கின்றன.

மாறிவரும் சமூக நிலையில் சொத்துள்ள பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட



வருவாயுள்ள முதியவர்களுக்கு மட்டுமே சமூகப்பராமரிப்பு தேவை என்ற நிலை படிப்படியாக மாறி வருகின்றது. இன்று சொத்திருந்தும் ஓய்வூதியம் போன்ற நிரந்தர வருமானம் இருந்தும் பராமரிப்பவர்கள் இன்றி அவதியுறும் முதியவர்கள் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இவ் இரண்டாவது வகுப்பினைச் சேர்ந்த முதியவர்களை பராமரிப்பதற்கென, பணத்துக்காக பராமரிப்பினை வழங்கும் முதியோர் இல்லமாக வடக்கு கிழக்கில் மட்டக்களப்பில் அமைந்துள்ள பரிபூரணம் என்ற இல்லம் மட்டுமே காணப்படுகின்றது. இதில் ஆகக் கூடிய 10 பேரை மட்டுமே அனுமதிப்பதற்கு வசதிகள் உள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புனருத்தாரண மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களும், தொண்டர் அமைப்புக்களும் இந்த விடயம் குறித்துத் தமது கவனத்தை திசை திருப்பி நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு அதிகரித்துச் செல்லும் இந் நிராதரவான முதியவர்களுக்கென செயற்திட்டங்களை வகுக்க வேண்டும்.

தெற்கில் ''செலப் பேஜலங்கா'' என்ற நிறுவனம் முதியோர் குறித்து பல்வேறு ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. ஆனால் மேற்படி முதியோர் பிரச்சினையை தீவிரமாக எதிர்நோக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இத்தகைய பணிகளில் தீவிரமாக ஈடுபடும் அமைப்புக்கள் எதனையும் அவதானிக்க முடியவில்லை.

சிறுபான்மையினரின் உரிமைக்காக போராடி வரும் தமிழ்ச்சமூகம் தம்முள் சக்தி மிக்க சிறுபான்மையினராக தோற்றம் பெற்று வரும் முதியோரின் நலன் குறித்து கவனமெடுத்துக் கொள்வது அதன் தார்மீக கடமையாகும்.

மேலும் சமூக வேலைத் திட்டங்களிலும் மேம்பாட்டுத் திட்டங்களிலும் ஈடுபடும் ஸ்தாபனங்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே இருந்து கொண்டு செயற்திட்டங்களைப் போட்டு அவற்றை இங்கு தவிர்த்து தமது மேற்குமயப்பட்ட கண்ணாடிகளைக் கழற்றி வைத்து விட்டு சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு சமூகப் பிரச்சினைகளை இனம் கண்டு திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

அத்தகைய ஒரு மரபு உருவாகும் பட்சத்திலேயே இத்தகைய விடுபட்டுப்போன சமூக விடயங்கள் வெளிச்சத்திற்கு வருவதற்கும், அவை குறித்து மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வழி ஏற்படும்.

**விஜேந்திரன்**

முடிவாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெருகி வரும் முதியோர் சனத்தொகையில் கணிசமானவர்கள் நிராதரவான நிலையில் உள்ளனர். எதிர்காலத்திலும் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு. இது குடும்பங்களின் தனிப்பட்ட பிரச்சினை அன்று. இது ஒரு சமூகப்பிரச்சினையாக உணரப்பட வேண்டும்.

பெருகி வரும் நிராதரவான முதியவர்களின் இரண்டு பிரிவினரை இனம் காணலாம். வருவாய் எதுவுமற்ற வறுமையினால் நிராதரவான நிலைக்கு உட்பட்ட முதியவர்கள் முதலாம் பிரிவினர். போரின் மறைமுகமான நேரடியான தாக்கங்களினால் சொந்தங்களைப் பிரிந்து நிராதரவான நிலையில் வாழ்பவர்கள் இரண்டாம் பிரிவினர். இவ்விரண்டாம் பிரிவினர் நிதி நிலையைப் பொறுத்தவரை மோசமான நிலையில் உள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் இவர்களில் ஓய்வூதியம் பெறுபவர்கள் வெளிநாட்டில் பிள்ளைகள் வதியும் பெற்றோர் என்போரும் அடங்குவர்.

இவ்விரண்டு சாராரையும் பராமரிப்பதற்கென எதிர்காலத்தில் சமூக நலத்திட்டங்கள் வகுக்கப் பட வேண்டும். கருணை அடிப்படையிலான இல்லங்கள் தமது சேவையை இன, மத, சமூக எல்லைகளுக்கு அப்பால் வழங்குவதற்கு முன்வரவேண்டும். அத்தோடு அவற்றின் சேவைகள் விரிவுபடுத்தப்படுமுகமாக, அவற்றிற்கான வெளி ஆதரவுகளும் கொடுக்கப்பட வேண்டும்.

வருவாய் உள்ள முதியவர்களை பராமரிப்பதற்கென வியாபார நோக்கற்ற, இலாப நோக்கற்ற சேவையை அடிப்படையாகக் கொண்ட தனியார் (பணத்திற்கு பராமரிப்பு வழங்கும்) முதியோர் இல்லங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவையும் கூட நிறுவனங்களின் அல்லது ஸ்தாபனங்களின் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதே சிறப்பாக அமையும்.

எனவே உருவாகி வரும் இம் முதியோர் பிரச்சினை தொடர்பான பரிமானங்களை சரிவரப்புரிந்து கொண்டு எதிர்கால செயற்திட்டங்களை வகுப்பதும் அவற்றை அமுல்படுத்துவதும் எமது தொண்டர் அமைப்புக்களதும் கடமையாகும்.

எமது சமுதாய இருப்பிற்கு பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்து இன்று ஓய்ந்து போய் விட்ட எமது முதியவர்களை வேற்று நாட்டு நிறுவனங்களும் அமைப்புக்களும் வந்து கௌரவப் படுத்தும் என எதிர்பார்ப்பது எமது மடமைத்தனமாகும். எனவே எமது சமூக அங்கத்தவர்களும் உள்ளூர் அமைப்புக்களுமே முதற்கட்டமாக இவ்விடயம் குறித்து தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

## இஞ்சாருங்கோ இஞ்சாருங்கோ

**மனைவி:-** மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பல வருடங்களுக்குப் பிறகு இப்பதானாம் புலிகளின் பிரதேசத்திற்கு போனவராம்......

**கணவன்:-** அவருக்கு அங்க போறதற்கு தடையாமே.......

**மனைவி:-** யார் தடை. புலிகளா? படையினரா?

**கணவன்:-** இப்போதைக்கு படைத்தரப்புத்தானாம் அனுமதி கொடுக்கிறாங்க இல்லையாம்.

**மனைவி:-** மாவட்டம் முழுவதுக்கும் தானே அரச அதிபர் எல்லா இடமும் போய்வர வேண்டும் தானே. இதற்கு என்ன அனுமதி.

**கணவன்:-** அதுதான் எனக்கும் புரியல்ல. அங்கால இருக்கிறவங்க எல்லாம் புலி எண்டு தானாக்கும் இவங்க எண்ணம்.

**மனைவி:-** எல்லாத்துக்கும் இவங்களிட்ட அனுமதி பெறவேண்டும் என்டா என்னத்திற்கு பெயருக்க ஒரு அரச அதிபர்.

**கணவன்:-** மட்டக்களப்புல எது செய்யிலியும் படையினர்தான் அனுமதிக்க வேண்டும் என்ற விதியாம்.

**மனைவி:-** அப்ப இதுக்கு பெயர்தான் சிவில் நிர்வாகம்.

**கணவன்:-** இது சிவில் நிர்வாகம் இல்ல. தவில் நிர்வாகம்.

—அம்பிகை—

# புழுதிக் காற்றால் உருவான சல்வார்

இன்றைய நாகரிக உலகில் பெண்களைக் கவர்ந்த ஒரு உடையாக சல்வார் கமீஸ் திகழ்கிறது. இது உடலுக்கு மட்டுமன்றி சௌகரியத்தையும் கொடுக்கின்றது.

இந்த இயந்திர வாழ்க்கையில் சுறுசுறுப்புடன் செயற்படும் மங்கையர்களின் மனங்கவர்ந்த இந்த சல்வார் கமீஸ் பிறந்த கதையை அறியலாமா?

கல்கத்தாவைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் சல்வார் கமீஸ் உடையுடன் கல்லூரிக்குச் செல்ல அது பெரும் பிரச்சினையைக் கிளப்பியது. சல்வார் கமீஸ் பெங்காலி உடையல்ல. எனவே மாணவிகள் அதனை அணியக் கூடாது என்று கல்லூரி நிர்வாகம் தடைவிதித்தது.

'இதென்ன பத்தாம்பசலித்தனம் நாங்கள் விரும்பிய உடையை உடுத்தத்தான் செய்வோம்'' என்று மாணவிகள் போராட்டம் நடத்தினர். கடைசியில் மாணவிகள் தான் ஜெயித்தனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு சல்வார் கமீஸ் உடை மீது பாஷன் டிசைனர்கள் சற்று அதிகமாகவே கவனம் செலுத்தத்



தொடங்கினார்கள். இன்று இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் இரண்டாவது இடத்தைப் பிடிக்குமளவுக்கு சல்வார் கமீஸ் உடைகள் வளர்ச்சி பெற்றுவிட்டன.

இத்தனைக்கும் இந்த சல்வார் கமீஸ் உடையானது இந்தியாவில் தோன்றியதல்ல. அது பிறந்தது ஆப்கானிஸ்தானில் தான் பதினாறாம் நூற்றாண்டில் இந்த உடை வடிவமைக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

அந்த காலகட்டத்தில் ஆப்கானிஸ்தான் பாலைவனப் பகுதிகளில் அளவுக்கதிகமாக வீசும் புழுதிக்காற்றால் பெண்கள் உடலில் தூசு படிந்தது.

அப்படித் தூசு படாமல் இருக்க ஒரு உடை வேண்டும் என்று யோசித்த போது தான் இந்த சல்வார் கமீஸ் உடை கண்டு பிடிக்கப்பட்டது. தொடக்கத்திலேயே சிறுமிகள் முதல் கிழவிகள் வரை எல்லாரும் இதனை அணிந்தால் பெண்களுக்கு ஏற்ற உடை இது தான் என்று முத்திரை விழுந்து விட்டது.

இதற்கிடையே ஆப்கானிஸ்தானில் பிரிவினை ஏற்பட்டதால் "சிந்தி இன மக்கள்" கூட்டம் கூட்டமாக இந்தியாவில் பஞ்சாப் பகுதியில் குடியேறினார்கள். அப்போது 'சிந்தி இனப் பெண்களுக்கு தெரிந்த ஒரே கைத்தொழிலாக 'சல்வார் கமீஸ் தைக்கும் தொழில் தான் இருந்தது.

அவர்கள் மூலம் இந்தியாவில் இந்த உடை பரவியது. பிறகு இந்தியப் பெண்கள் மூலம் உலகம் முழுவதும் சல்வார் கமீஸ் நாகரீகம் ஏற்பட்டது. இன்று உலக அளவில் அதிகம் விற்பனையாகும் உடை சல்வார் கமீஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிள்ளைகளின் உணவுப் பழக்கம்

## பெற்றோர் கவனிக்க வேண்டியவை

உங்கள் சிறு பிள்ளைகள் சில உணவுப பண்டங்களை விரும்பி உண்ப துவும் சில உணவுகளை வெறு த்து ஒதுக்குவதும் சாதாரண மானதொரு விடயம். அவர்களின் அத்தகைய விருப்பு வெறுப்புக் களை உதா சீனம் செய்து பெற்றோருக்குப் பிடித்தமான உணவுகளை அவர்களுக்குத் திணிப்பது அர்த்தமற்ற செயல். அதேவேளை பிள்ளைக் குப் போசாக்கு நிறைந்த உணவு கிடைக் கின்றதா? என்பதனையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். குறித்ததொரு உணவுப் பண்டத்தைத் தொடர்ந்து கொடுப்பதைத் தவிர்த்து புல்வேறு வகையான உணவுப் பண் டங்களையும் மாற்றி மாற்றிக் கொடுப்பதன் மூலம் குறித்த உணவு மீது வெறுப்பு ஏற்படுவ தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதற்கெனப் பின்வரும் வகைகளில் இருந்து உணவுப பதார்த்தங்களை நீங்கள் தெரிவு செய்து கொள்ளலாம்.

**வகை i**

**தானிய உணவு**

சோறு, பாண், நூடில்ஸ், றொட்டி, பணிஸ், இடியப்பம், இட்லி, தோசை

**வகை ii**

**இறைச்சியிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களும், பருப்பு வகை களும்**

பால், தயிர், ஐஸ்கிறீம், சீஸ், யோகட், இறைச்சி, மீன், முட்டை, பீன்ஸ், கடலை வகைகள்.

**வகை iii**

**பழங்களும் மரக்கறி வகைகளும்**

மாம்பழம், கொய்யாப்பழம், தக்காளிப்பழம், பப்பாசிப்பழம், தோடம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், கரட், பீன்ஸ், ஏனைய மரக்கறிகள்.

**வகை iv**

சர்க்கரை மற்றும் கொழுப்புச்சத்து உணவுகள்

பட்டர், மாஜரீன், நெய், மரக்கறி எண்ணை, சீனி

**வயது ரீதியாகக் குழந் தைகளு க்கு வழங்க வேண்டிய உணவு வகைகளைப் பின்வ ருமாறு பிரி த்துக்கொள் ளலாம்.**

**பிறந்தலிலிருந்து ஒரு வயது வரை**

✲ஒரு தடவையில் ஒரு உணவை மாத்திரம் கொடுத்துப் பழக்கவும்.

✲பிள்ளை குறித்த உணவை சுவைத்தறிய, உண்டு பழக போதிய சந்தர்ப்பம் கொடுக்கவும்.

✲ஒரு தேக்கரண்டி அல்லது அதனிலும் குறைவான உணவு டன் ஆரம்பிக்கவும்.

✲ஒரு உணவை விரும்பாத பட்சத்தில் இடை வெளிவிட்டுப் பின்னர் கொடுக்கவும். பிற உண வுகளுக்கு இடையே கொடுக் கவும்.

✲உணவு நன்கு பதப்படுத் தப்பட்டதாக இரு க்க வேண்டும்.

✲குழந்தையின் உடல் நலத்தை கவனத்தில் கொண்டு உணவினைக் கொடுக்கவும்.

**1-5 வயது**

✲பிள்ளை 18 மாதங்களை அடைந்ததும் கரட், பிஸ்கட், என்பனவற்றைக் கொடுத்துப் பழக்கவும்.

✲பிள்ளை உண்ணக்கூடிய அளவுக்கு மேலாக உணவை உண்ணும்படி நிர்ப்பந் திக்க வேண்டாம்.

✲உறைப்பான, காரமான, பொரித்த உணவு களைக் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

✲உணவில் நாளுக்கு நாள் மாற்றம் செய்ய வேண்டாம்.

✲பிள்ளை உணவு உண்ணும் போது அனாவ சியமாகத் துரிதப்படுத்த வேண்டாம்.

✲முற்றாகப் பழுக்காத வாழைப் பழம் முதலிய புரைக்கேறக்கூடிய உணவுகளைத் தவிர்க் கவும்.

**5-12 வயது**

✲சிறுவர்களின் அதிகரித்த வளர்ச்சி, செயற் பாடுகள் என்பனவற்றை ஈடுசெய்யும் முகமான போசாக்கு உணவு வழங்கப்படவேண்டும்.

✲காலையில் இலகுவாக துரிதமாக உண் ணக்கூடிய உணவு வகைகள் கொடுக்கப்பட வேண்டும்.

✲இலகுவாகக் கையாளப் படக்கூடிய உணவு கள் இவ் வயதுப் பிள்ளைகளால் பெரிதும் விரும்பப்படும்.

**உணவு தொடர்பான பொது வழிகாட்டல்:**

✲உணவு அளவிலும் தரத்திலும் போதுமான தாக இருக்க வேண்டும்.

✲உணவு, நிறம், மணம், சுவை என்பனவற் றில் பல்வகைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

✲பழங்கள், மரக்கறிகள் என்பன மலச்சிக் கலை தவிர்க்க அவசியமானவை.

✲உணவு கவர்ச்சிகரமாக, ஆர்வத்தையும், ஆவலையும் தூண்டுவதாக அமைய வேண் டும்.

✲பிள்ளைகளின் உணவுத் தெரிவைக் கவ னத்தில் கொள்ளவும்.

✲உணவு உண்ணும் நேரத்தை வழக்கப் படுத்திக் கொள்ளவும்.

✲தேனீர் கோப்பி பழக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

✲பிள்ளைகள் அமைதியான மகிழ்ச்சியான சூழலில் உணவு உண் பதற்கு ஏற்ற சூழல் ஏற்படுத்தப்படவேண்டும்.

✲பிள்ளைகளின் நிறையை அடிக்கடி பரீட்சித்து அதன் மூலம் உணவில் மாற்றம் செய்யவும்.

# இந்த வாரம் உங்கள் பலன்

## (18.03.2001-24.03.2001)

**மேடம்:-**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை, 1ம் கால்)

ஆவலோடு எதிர்பார்த்திருந்த காரியங்கள் வெற்றி ஆகும். புதிய உறவுகள் சேரும். கல்வி, தொழில் நல்ல நிலையில் இருக்கும். வீண் செலவுகள் அதிகரித்துச் செல்லும். குடும்பத்தில் அமைதி நிலவும். உடலில் சிறுகாயம் உண்டுபடும். புதிய தொழில் சேர வாய்ப்புண்டு. அதிஷ்டநாள்:- திங்கள், செவ்வாய்

**இடபம்:-**

(கார்த்திகை, 2,3,4ம் கால், ரோகினி, மிருகசீரிடம், 1,2ம் கால்)

மன நிம்மதி உண டாகும். நீண்ட நாட்களாக தடைப்பட்டிருந்த காரியங்கள் சித்தியாகும். நோய்தீரும். அன்னியரால் ஏற்பட்டு வந்த தொல்லை தொந்தரவுகள் நீங்கும். கல்வி, தொழில் விருத்தி ஆகும். இலாபம் புகழ் சேரும். குடும்பத்தில் குதுகலம் நிறைந்து காணப்படும். புதிய தொழில் சேரும். அதிஷ்டநாள்:- புதன், வெள்ளி.

**மிதுனம்:-**

(மிருக சீரிடம் 3,4ம் கால், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் கால்)

பயம், நோய், கவலைகள் நீங்கும். கல்வி, தொழில் எண்ணியபடி விருத்தி ஆகும். பரிசு, பாராட்டுகள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளிநாட்டு பிரயாணம் கைகூடும். தொழில் ஸ்தாப னத்தில் சிறு வாக்குவாதம், அவமானம் உண்டாக வாய்ப் புண்டு. பெரியோரால் உதவி உண்டு. அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்

**கடகம்:-**

(புனர் பூசம் 4ம் கால், பூசம் ஆயிலியம்)

பல விதமான கவலை களும், மனவெறுப்புகளும் உண்டாகும். தேகத்தில் சிறு நோய், பிணிகள் ஏற்பட்டு மறை யும். கல்வி, தொழில் மந்தமாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். அன்னியரோடு சண் டை சச்சரவுகள் ஏற்பட வாய்ப் புண்டு. அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்

**சிங்கம்:-**

(மகம், பூரம், உத்தரம் 1ம் கால்)

மனக் கவலை ஏற்ப டும். கல்வி, தொழில் வேகமாக விருத்தியடையும். பணப்புழக்கம் சீராக அமையும். குடும்பத்தில் சிறு சோகம், நோய் பிணி உண்டாகும். உறவினர்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். அன்னியரால் உதவி கிட்டும். அதிஷ்டநாள்:- புதன், வியாழன்.

**கன்னி:-**

(உத்தரம் 2,3,4ம் கால், அத்தம், சித்திரை 1,2ம் கால்)

பலவிதமான அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டிய நேரிடும். கண்டத்திற்கு மேற்பட்ட சுகயீனங்கள் உண்டாகும். கல்வி, தொழில் மந்தமாக இருக்கும். குடும்பத்தில் வீண் மனஷ் தாபங்கள் ஏற்படும். திருமண விசயங்கள் பாதிப்படையும். பண உதவி கிட்டும். அதிஷடநாள்:- புதன், வெள்ளி.

**துலா:-**

(சித்திரை, 3,4ம் கால், சுவாதி, விசாகம் 1,2,3ம் கால்)

சோகம், பயம், நோய் உண்டாகும். தொழில் கல்வி முன்னேற்றம் அடையும். பணம், புகழ் சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும் திருமண விசயங்கள் கூடிபிடிக்கும். கடிதத் தொடர்புகள் கைசேரும். எதிரிக ளால் சிறு தீமை உண்டாகும். பொருள் பண்டங்கள், வாகனம் சேரும். அதிஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்.

**விருச்சிகம்:-**

(விசாகம் 4ம் கால், அனுசம், கேட்டை)

சோகம், பயம், தூக்கக்குறைவு, பசியின்மை, நோய் உண்டாகும். கவலையோடு வாழ்வீர். கல்வி, தொழில் சுமாராக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். திருமணம் கைகூடும். நண்பர்களால் உதவி உண்டாகும். கடிதத் தொடர்புகள் கிடைக்கும். காதலர்களுக்கு பலவிதமான நன்மைகிட்டும். அதிஷ்டநாள்:- செவ்வாய், புதன்.

**தனு:-**

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் கால்)

முன்னேற வேண் டுமென்ற ஆசை உண்டாகும். சகல காரியங்களையும் அதிக சிரத்தையோடு செய்து வெற்றி பெறுவீர். எனினும் தொழில், கல்வி சற்று சோர்வடைந்தே காணப்படும். குடும்பத்தில் வாக்குவாதங்கள், உண்டாகும். பணம் அதிகம் செலவாகும். திருமணம் ஒப்பந்தம் ஆகும். அரசாங்க வில்லங்கம் ஏற்பட வாய்ப்புண்டு. அவதானம். அதிஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்

**மகரம்:-**

(உத்தராடம் 2,3,4ம் கால், திருவோணம், அவிட்டம் 1,2ம் கால்)

நோய், கவலை, கஷ்டம் நீங்கும். மன வைராக் கியம் ஏற்படும். கல்வி, தொழி லில் அதிக ஆர்வம் காட்டு வீர்கள். குடும்பத்தில் ஆனந்தம் நிலவும். எதிர்பாராத பணச்செல வுகள் உண்டாகும். திருமணம் கைக்கூடும். புதியதொழில் சேரும். கடிதத் தொடர்புகள் கைசேரும். பொருள் பண்டம், நகைநட் டுக்கள் கைசேரும். அதிஷ்டநாள்:- செவ்வாய், புதன்.

**கும்பம்:-**

(அவிட்டம் 3,4ம் கால், சதயம், புரட்டாதி 1,2,3ம் கால்)

கோபம் அதிகம் உண்டாகும். பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கும். கல்வி, தொழில் முன்னேற்றம் இன்றி இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதம். நோய், கொடுக்கல் வாங்கல் பிரச்சி னைகள் உண்டாகும். திருமண விசயங்கள் தாமதம் அடையும். பிறதேசம் சென்றவர்கள் நாடு திரும்புவர். பண உதவி கிட்டும். அதிஷ்டநாள்:- வெள்ளி, சனி.

**மீனம்:-**

(புரட்டாதி 4ம் கால், உத்தரட்டாதி, ரேவதி)

மனக் கிலேசம் உண் டாகும். வீண் சந்தேகங்கள் ஏற்படும். எடுத்த காரியங்கள் தடைப்படும். கல்வி விருத்தி யாகும். தொழில் பாதிப்படையும். தொழில் ஸ்தாபனத்தில் பலவித மான கெடுதல்கள் நேரும். குடும்பத்தில் அமைதி குறைந்து காணப்படும். பெரியோர்களின் ஆறுதல் உண்டு. பலவிதமான உதவிகள் சேரும். அதிஷ்டநாள்:- செவ்வாய், புதன்.

''சோதிடர்''
**கோ.இளங்கோகரன்**
**ஆரையம்பதி**

# கலைஞனுக்குள்..................

(7ம் பக்க தொடர்ச்சி)

**ஆய்வரங்கில் உங்கள் கட்டுரைக்கான எதிர்வினை எப்படி இருந் தன?**

எங்களுடைய கருத்துக் களை முழுமையாகத் தமிழகத தைச் சேர்ந்தவர்களிடம் எடுத்துச் செல்ல இயலாத நிலையிலேயே 'தமிழ் இனி' க்கான திட்டமிடல் அமைந் திருந்தது. இரண்டொரு விதிவிலக்குகள் இருந்தாலும் தமிழகத்துக்கான அமர்வுகள் புதுமைப்பித்தன் அரங் கிலும், ஈழம், புலம்பெயர்ந்தோர், சிங் கப்பூர், மலேசிய அமர்வுகள் கைலா சபதி அரங்கிலும், என ஒரே நேரத்திலேயே வெவ்வெறாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்தப் பிரி வினையால் அநேக மான தமிழ கத்தைச்சேர்ந்த பார்வையாளர்களும் எழுத்தா ளர்களும் புதுமைப்பித்தன் அரங்கி லேயே அமர்ந்து கொண் டார்கள். ஈழத்தவர்களின் அமர்வுகள் மிகச் சொற் பமானவர்களுடனேயே நடந்தேறியது. நேர முகாமைத் துவம் சரியாக செய்யப்படாததால் பெரிய கட்டுரைகளையெல்லாம் சுருங்கிய வாசிப்பாக வைக்க வேண்டியிருந்தது. சிலர் கட்டுரை களை மேற்கொண்டு தொடர முடியாத நிலையும் ஏற்பட்டது. ஆய்வுரைகள் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களுக்கும் போதிய நேரம் ஒதுக்கப்பட வில்லை. இலங்கை எழு த்தாளர் களும், தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் எழுத்தாளர்களும், புலம்பெயர்ந்தவர்களும் குறைந் தபட்சம் பரஸ்பரம் தங்களை அறி முகப்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு சந்திப்பு மையமேனும் கூட ஒழுங்கு செய்யப்படவில்லை. மொத்தத்தில் 'ஓராண்டுக்கும் மேலாகத் திட்டமிட்டு உருவாக் கிய உலகத் தமிழ் இலக் கிய அரங்கு' என்ற தோரணையை இது கொண்டிருந்த போதும் நிறை வானதொரு மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு திருப்தியைத் தாங்கள் அடைந்ததாக எவருமே தெரிவிக்க வில்லை. இந்நிலையில் ஆய்வுக் கட்டுரைகள் விவாதத் துக்கு விடப்பட்டு உரிய எதிர்வி னைகள் பெறுநுக் கொள்ளப் பட்டதாக என்னால் அவதானிக் கப்படவில்லை.

# வவுனியா யுவதிகளின் அடையாள அட்டைகள் மட்டு நகரில் படையினரால் பறிப்பு

(நமது நிருபர்)

**வவுனியாவில் இருந்து மட்டு நகருக்கு வந்துள்ள நான்கு யுவதிகளின் தேசிய அடையாள அட்டைகளை விஷேட அதிரடிப்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். நேற்று மட்டக்களப்பில் இடம் பெற்ற சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் நான்காவது ஆண்டு மகா நாட்டிற்கு வவுனியா சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தைச் சேர்ந்த யுவதிகள் வவுனியாவில் படை தரப்பினரிடம் அனுமதிப் பத்திரம் எடுத்துக் கொண்டுவந்தனர்.**

நேற்று முன் தினம் இரவு மட்டு நகர் அதிகார் வீதியில் உள்ள வீடொன்றில் இப் பெண்கள் இருக்கும் போது இரவு 10 மணிக்கு அவ் வீட்டிற்குச் சென்ற அதிரடிப் படையினர் நான்கு பெண்களையும் விசாரித்தனர். அவர்கள் தாம் வவுனியா இராணுவத்தினரின் அனுமதியுடன் தான் மட்டக்களப்பிற்கு வந்தோம் எனக் கூறினர். இவர்களை விசாரித்த அதிரடிப் படையினர் அடையாள அட்டைகளை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

செய்தி எழுதும் வரை அடையாள அட்டை திருப்பிக் கொடுக்கப்படவில்லை.வவுனியாவைச் சேர்ந்த செல்விகள் பாத்திமா கவறியல்(21) சாந்திகா கவரியல் (22) எஸ்.அகலியா (20) ஆர்.வானுஜா (20) ஆகிய நான்கு யுவதிகளின் அடையாள அட்டைகளையே இவ்வாறு அதிரடிப் படையினர் எடுத்துச் சென்றனர்.

இதையிட்டு சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் எஸ்.சிவமோகன் மற்றும் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு உடனடியாக முறையிட்டனர்.

## இளைஞர் சேவை அலுவலர், நேர்முகப் பரீட்சை விபரம்

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவைகள் அலுவலகர் தரம் 1க்கான உ ம்ப நேர்முகப் பரீட்சை பின்வரும் தினங்களில் பின்வரும் இடங்களில் நடைபெறுமென தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாணப் பணிப்பாளர் திரு.பொன். செல்வநாயகம் தெரிவித்தார்.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இம்மாதம் 20ம், 21ம், 22ம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட பணிமனையிலும்,

அம்பாறை மாவட்டத்தில் இருந்து விண்ணப்பங்களை அனுப்பிய தமிழ் மொழி பேசுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 23, 24ம் திகதிகளில் கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து விண்ணப்பங்களை அனுப்பிய தமிழ் மொழி பேசுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 27ம் திகதி திருகோணமலை கச்சேரியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டப் பணிமனையில் இடம் பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அவர்களது சொந்த முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### அதிரடிப்படை.......

இக்கொலை தொடர்பான மரண விசாரணைகள் இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் சேனரட்ணாவிடம் முறையிட்டதையடுத்து இது தொடர்பாகத் தான் 'சென்றல் காம்'புடன் தொடர்பு கொண்டு விசாரணை செய்ததாகக் கூறியுள்ளார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக தொல்லை தவிர்ப்பு குழுவிடம் தான் முறையிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சுதந்திரமனித அபிவிருத்தி கழகத்தின் பத்திரிகையாளர் விருதுகள்

(அரியம்)

சுதந்திரமனித அபிவிருத்தி கழகத்தின் நான்காவது ஆண்டு நிறைவு மகாநாடு நேற்று மட்டு ஹம்சா விடுதியில் இடம் பெற்ற போது இக் கழகத்தால் பத்திரிகையாளர் சிலர் பாராட்டப்பட்டனர்.

அழைக்கப்பட்ட பத்திரிகையாளர்களில் எஸ்.எம்.கோபாலரெத்தினம், ஜி.நடேசன், சண்தவராசா, வி.ஜசிகரன், இ.பாக்கிய ராசா, ஆகியோர் சமூகம் கொடுக்கவில்லை.

வீ.சு. கதிர்காமத்தம்பி,இராதுரைரட்ணம்,பா.அரியந்திரன்,ரி.எல்.ஜவ்வர்கான், செல்வி.பா.ராதிகா, எஸ்.பிரகாஸ்,ஆகியோர் மட்டுமே சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் விருதுகளைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

- காலை 9 மணிக்கு மட்/ இந்துக் கல்லூரி மைதானத்தில் லயன்ஸ் கழகம் நடாத்தும் மகளிர் கிரிக்கட் போட்டி
- ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்த தம்பி வித்தியாலயத்தில் ஆரையம்பதி சத்தியசாயி சமித்தியின் 9ஆவது ஆண்டு விழா
- கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான் தோன்றீஸ்வர ஆலயத்தில் த.வ.வி.கதிராமப் போடி வண்ணக்கருக்கான சேவை நலன் பாராட்டு விழா

### தனிச் ........

இதையிட்டு எமது பத்திரிகைக்கு வை.எம்.சி.ஏ இன் பொதுச் செயலாளர் டி.டி. டேவிட் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதம் தனிச் சிங்கள மொழியில் மாத்திரமே அனுப்பி இருப்பதால் எங்களுக்கு வாசித்து புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதோடு அதில் கேட்கப்பட்ட நடவடிக்கை களை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது.

அத்துடன் அவர்களது காகித தலைப்பில் தங்களது நிலையத்தின் பெயர் முகவரி என்பன தமிழில் பிழையாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் இத் தகவல்களை திருத்தி தங்களுக்கு எதிர் காலத்தில் தமிழ் மொழியில் கடிதங்களை அனுப்பும் படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### புலிகளின் .....

கூறு கிறார்.

எமது செய்தியாளர் அங்கு சென்றிருந்த வேளை மேற்படி இளைஞனை அழைத்து வந்த காவலாளி கையில் வைத்திருந்த துப்பாக்கி இந்த இளைஞன் கொண்டு வந்ததே எனப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சந்திப்பின் போது படைத் தரப்பினரும் நமது செய்தியாளருடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தடுப்புக்..........

இவருக்கு மூன்று குழந்தைகள் இருப்பதால் அவர்களை இவரே பராமரிக்க வேண்டியிருப்பதாலும் இவரை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி பே.பிரேம்நாத் கோரியதையடுத்து

இதனை ஏற்ற நீதிபதி ஏ.என். இராமச்சந்திரன் வழக்குத் தள்ளுபடி செய்து சந்தேக நபரை விடுதலை செய்தார்.

**நிதி, உணவு சேகரித்தாராம்**

விடுதலைப் புலிகளுக்கு நிதி மற்றும் உணவு சேகரித்தார் என்றும் இராணுவத்தினர் பற்றிய தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு 6.03.98 அன்று கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டதின் கீழ் தடுத்து வைக்கப் பட்டிருந்த ஏறாவூர் புன்னைக் குடாவைச் சேர்ந்த கா.செல்வம் 16.03.2001 அன்று விடுவிக்கப்பட்டார்.

இவரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற சிரேஷ்ட்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி.ஏ.குணதிலக 8 தவணைகளாக விசாரணைகள் தொடர்ந்த போதும் மன்றுக்கு சமூகம் அளிக்காததாலும் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டும் அவர் மன்றுக்கு சமூகம் தராமல் விட்டதனாலும் சந்தேக நபர் மூன்று ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாலும் அவரை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி பே.பிரேம்நாத் மன்றில் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.என்.இராமச்சந்திரன் வழக்கைத் தள்ளுப்படி செய்து சந்தேக நபரை விடுவித்தார்.

சிரேஷ்ட்ட பொலிஸ் அத்தியட்சகர் மன்றுக்கு வர முடியவில்லை என தகவல் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதும் சட்டத்தரணி பிரேம்நாத் அதனை மறுத்துரைத்தார்.

இவ்வழக்கில் அரச தரப்புச் சட்டத்தரணியாக ஆர்.கண்ணன் ஆஜரானார்.

**பயிற்சி பெற்றார்**

விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் போராயுதப் பயிற்சி பெற்றார் என்றும் மனோ மாஸ்டர் என்பவரின் போக்குவரத்துப் பற்றி தகவல் தெரிந்தும் பொலிஸாருக்குத் தெரிவிக்கவில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டு அவசரகாலச்சட்டம் புலிகள் மீதான தடைச் சட்டத்தின் கீழ் (20.01.98) ஆம் ஆண்டு 1012/16ம் இலக்கம்)கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் 19.09.97 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த சந்திரன் தேவராஜ் 16.03.2001 அன்று விடுவிக்கப்பட்டார்.

இவரிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெற்ற சிரேஷ்ட்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி. எடிசன் குணதிலக 11 தவணைகளாக மன்றுக்குத் சமூகம் தராததை சுட்டிக்காட்டி இவரை விடுவிக்கும் படி சட்டத்தரணி பே.பிரேம்நாத் கோரியதை அடுத்து நீதிபதி ஏ.என்.இராமச்சந்திரன் இவரை விடுவித்தார்.


**மாரி அம்பாள் துணை**

**டயகம், சந்திரிகாமம் தோட்டம், மேகமலை டிவிசன் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மாள் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா**

**மகா கும்பாபிஷேக விஞ்ஞாபகம் –2001**

ஆரம்ப தினம் 22.01.2001 வியாழக்கிழமை



கும்பாபிஷேக தினம் 26.03.2001 திங்கட்கிழமை

அம்பிகையின் அடியார்களே.........................

மத்திய மலை நாட்டின் நுவரெலியாவின் சந்திரிகாமம் தோட்ட மேகமலை டிவிசனில் கோவில் கொண்டு துதிப்போருக்கு துன்பம் போக்கி இடர் களைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ முத்து மாரியம்பாளுக்கும் பரிவார தேவதைகளுக்கும் நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 13ம்நாள் (26.03.2001) திங்கட்கிழமை பூர்வபுஷ பிரதமை திதியும் ரேவதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுப நாளில் காலை 6.45 மணி முதல் 7.41மணி வரையுள்ள மீன லக்கின சுப மூகூர்த்த வேளையில் மகா கும்பாவிஷேகம் செய்ய திருவருள் பாலித்துள்ளமையால் அடியார்கள் அன்றைய தினமும் அதற்கு முன்னும் பின்னும் கிரியைகளையும் கண்டு வணங்கி அன்னையின் நல்லருள் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கும்பாபிஷேக குருமார்கள**

**பிரதிஷ்டா பிரதம குரு**

ஈசான தேசிகர் சிவ ஸ்ரீ ஜி.என்.திருக்கணேஸ்வர குருக்கள்(P.I.M.P) (முன்னாள் யாழ் கிளிநொச்சி குருகுல மாணவனும்,மட்/புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலய பிரதம குருவும்)

**பிரதிஷ்டா உதவிக்குரு**

ஈசான தேசிகர் சிவ ஸ்ரீ மு. முத்துக்குமார குருக்கள் (களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய, அருள் மிகு ஸ்ரீ முத்து மாரியம்பாள் ஆலய பிரதம குரு)

**சாதகாசிரியர்கள்**

சிவ ஸ்ரீ வெ.பரமானந்த குருக்கள் (மட்,கோட்டடி விநாயகர் ஆலயம் புளியந்தீவு, சித்திர வேலாயுத சுவாமி ஆலய பிரதம குரு),சிவ ஸ்ரீ செ.சிவ சுப்பிரமணிய குருக்கள்(மட்.கிரான்குளம் விநாயகர் ஆலய,ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய பிரதமகுரு),சிவ ஸ்ரீ வ.சிவானந்தக்குருக்கள் (மட்,அம்பாறை பிள்ளையாரலய குரு கோட்டைகல்லாறு)

**மங்கள வாத்தியம்**

கதிரவேலு குழுவினர் (மட்டக்களப்பு)

25.03.2001ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிமுதல் மாலை 6.00மணிவரை பக்கதர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம் பெறும்.

**அனைவரும் வருக! அன்னையின் திருவருள் பெருக!**

மேகமலை டிவிசன்
சந்திரிகாமம் தோட்டம்
டயகம 22096
30.01.2001

சுபமங்களம்

இங்ஙனம்
திருப்பணியிலுள்ள
ஆலயபரிபாலன சபையினர்,
தோட்டத் தலைவர்கள்
தோட்டப் பொதுமக்கள்,
இந்து இளைஞர் மன்றம்

Advt.



**காணி விற்பனைக்கு**

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பார் வீதியில் இல 195/1 இல் உள்ள 12 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு :
**இல: 27, 3ம் குறுக்குத்தெரு,**
**மட்டக்களப்பு**
**தொ.பே : 22926** Advt.


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.